www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 ரூபா 11/00

பெப்.02–08,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 190

## தலைமறைவான விமானங்கள் ஆயுதக் கப்பல் எங்கே?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## யோகம் நல்ல யோகம்

## உச்சி முதல் பாதம் வரை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஏமாறாதே, ஏமாற்றாதே!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தமிழ்க் கட்சிகள்
எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை
கண்டன, கருத்தறிந்தன!

இனப்பிரச்சனைக்கு
மத்தியஸ்தம்
வருகிறதோ இல்லையோ
தமிழ் கட்சிகள்
மத்தியஸ்தர்களாகிவிட்டன!

ஆளும் தரப்புக்கும்
எதிர்த் தரப்புக்கும் இடையே
தமிழ்க் கட்சிகள்தான்
பரிதாபகரமான மத்தியஸ்தர்கள்!
நல்ல பணி! வாழ்த்துவோம்!

பணி வெற்றியடையுமா
என்பதுதான் முயற்கொம்பு!

தூங்குவோரை
தட்டி எழுப்புவது சுலபம்.
தூங்குவது போல நடிப்போரை
எவரால்தான் எழுப்பிவிட இயலும்?

தமது பணி
வெற்றியடையும் என்று
தமிழ்க் கட்சிகள்
நம்பிக் கொண்டிருக்கட்டும்.
ஆனால் மக்களையும்
நம்பவைத்து ஏமாற்றும் விதமான
செய்திகளை வெளியிடுவதை
தமிழ்க் கட்சிகள்
நிறுத்திக் கொண்டால் என்ன?

"இணக்கம் காணத் தயார்"
என்று சொல்லியிருக்கிறாராம்
எதிர்கட்சித் தலைவர்;
பூரிப்போடு அறிவித்திருக்கிறார்
பழம் பெரும் தலைவர் சிவசிதம்பரம்!

இணக்கம் காண
இவர்கள் தயாராக இருக்கிறார்கள்
என்று எத்தனை பேரை
நம் பழம்பெரும் தலைவர்கள்
இதுவரை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்?
இறுதியில் அனைவருமே-
பாவம்- நம் தலைவர்களை
பரிதாபமாக ஏமாற்றிவிட்டனர்!

"தீர்வு முயற்சிகளை
இழுத்தடிக்கக் கூடாது" என்று
சிவா சொன்னாராம்;
ஐ.தே.கட்சி அதனை
முழுமையாக ஆமோதித்ததாம்!

தங்களுக்கு விளம்பரம்
தேடவேண்டும் என்பதற்காக
எதிர்க்கட்சியின் அரசியலுக்கு
இவர்கள் வெள்ளையடிக்கிறார்கள்!

பாராளுமன்றத்திலும் வெளியேயும்
ஐ.தே.கட்சி பிரமுகர்கள்
கொடும் இனவாதமாகப்
பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஐ.தே.கட்சிக்குள்
இனவாதம் இல்லாத சக்திகள்
இல்லாமல் இல்லை.
அவர்களின் குரல் தற்போது
அமுங்கிவிட்டது!

மறுபடி ஆட்சியைப் பிடிக்க
கவர்ச்சிகரமான பிரசாரங்களையே
அக் கட்சி நம்பியிருக்கிறது!
கவர்ச்சிகரமான பிரசாரங்களில்
இனவாதமும் அடக்கம்!

எதிர்க்கட்சிக்குள் உள்ள
மிதவாதிகளையும்-தீவிரவாதிகளையும்
ஆளாளுக்கு ஏற்ப
தட்டிக் கொடுத்தபடி
கட்சி நடத்துவதுதான்
ரணிலின் சாமர்த்தியம்!

எனவே-தீவிரவாதிகளின்
கருத்துக்கு மாறாக
அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு
ரணிலால் ஒத்துழைக்க முடியாது!
தீவிர இனவாதப் பிரசாரத்தையும்
அவரால் தடுக்க முடியாது!

தமிழ்க் கட்சிகளின்
மத்தியஸ்த முயற்சி
ரணிலுக்கு ஒரு வரப்பிரசாதம்.
இரு தரப்புக்கும் இடையே
தமிழ்க் கட்சிகள் ஓடி முடிப்பதற்கிடையில்
அடுத்த தேர்தல்கூட வந்துவிடலாம்!

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும்
கூட்டாகச் சேர்ந்து
உடனே ஒரு காரியம் செய்யலாம்.
அரசியல் தீர்வுக்கு எதிரான
இனவாதப் பிரசாரங்களை
கண்டித்தும், எதிர்த்தும்
ஓர் அறிக்கை விடுக்கலாம்!

அரசியல் தீர்வு யோசனைகளில்
உடன்பாடு காணும்
செயல் முறைக்கு
அது முதற்படியாக அமையும்!

இனவாதப் பிரசாரங்களின்
பின்னணியில் எதிர்க்கட்சி
நிற்பதாகக் கருதப்படும்
நிலையும் மறையும்!

மத்தியஸ்தத்தில் ஈடுபட்டுள்ள
தமிழ்க் கட்சிகள்
இரு தரப்பையும் இணைத்து
அப்படி ஒரு அறிக்கை
வெளியிட வைத்தால்
நிச்சயமாகப் பாராட்டலாம்!

அறிக்கைவிட மறுத்தால்
உண்மையான நோக்கத்தை
கண்டறிந்து விடலாமல்லவா?
பாவம்-தமிழ்க் கட்சிகள்!
நம்பி ஏமாந்து-நம்மையும்
ஏமாற்ற வேண்டியிருக்காதே!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## இருதய சுத்தம்

இருதய சுத்தம் என்றால், வெறுமனே அழுக்கற்ற இருதயம் அல்லது அந்நியமற்ற இருதயம் என்று மட்டுமே பொருள் படுவதில்லை. இதய சுத்தம் என்று கூறும்போது கலப்படமற்ற இருதயம்- அல்லது பழுதுபடாத இருதயம் என்று அர்த்தம் கூறலாம். அநேகருடைய வாழ்க்கையிலே பல குறிக்கோள்கள்- பல நோக்கங்கள் உண்டு. அவற்றை ஆராய்ந்து பார்த்தால் அவை சுத்தமான நோக்கங்கள் அல்ல. ஆவியானவருடைய வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கும்போது, நிச்சயமாகவே இயேசு அதை தவறு என்று காண்பிப்பார்.

மனச்சாட்சி தேவனுடைய குரலாக நமக்குள் இருக்கிறது. அது நம்முடைய இருதயம் சுத்தமாக இருக்கிறதா? இல்லையா? என்பதை அவ்வப்போது நமக்குத் தெரிவித்துக்கொண்டே இருக்கிறது. அந்த வேளைகளிலெல்லாம் மனச்சாட்சி மழுங்கிவிடாமல் உடனே தேவ சமூகத்தில் அமர்ந்து நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து, தொடர்ந்து இருதயத்தை சுத்தமாக காத்துக்கொள்ள வேண்டும். வேதம் சொல்கிறது- "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவிற்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (கொரி 5:7)

தொகுப்பு: தி. பெ.தேவபாலன், மட்டக்களப்பு.



## நபிகளார் மீது நேசம் வேண்டும்!

இறைவனின் நேசம் தனக்குக் கிடைக்க வேண்டுமென ஒருவன் விரும்பினால், திருநபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றியொழுக வேண்டுமென இறைமறை ஆணையிடுகின்றது.

இறைமறையை நமக்கு வழங்கி, இறைவல்லமையை எமக்கெல்லாம் அறிமுகஞ் செய்த தூய நபிகளாரைப் பின்பற்ற அவசியமில்லை, அவரும் நம்மைப் போன்றவர்தான் என்று பிதற்றுபவன் இஸ்லாமிய நெறி முறைகளுக்கு எதிரியாவான். உடை நடையில் மட்டுமன்றி உண்ணல், குடித்தல் முதல் உறங்குவது வரை பிறப்பு முதல் இறப்பு வரை சகல துறைகளிலும் அண்ணலாரின் முன்மாதிரி நமக்கு முன்னால் தெட்டத் தெளிவாக இருக்கிறது.

அன்னவர்களின் ஒளிமயமான, அழகிய அடிச்சுவடுகளை காலத்துக்கேற்ப மாற்றியமைக்கவும், அனுஷ்டானங்களை சுருக்கவும், எவராவது முற்படுவராயின் அத்தகையோர் அழிவையும், இழிவையும் அடைந்துகொள்வர் என்பது இஸ்லாமிய வரலாற்றின் அனுபவரீதியான உண்மையாகும். எனவே பணத்துக்கும், பதவிக்கும் கொள்கையை விற்காமல், நேரிய முஸ்லிமாய், இறைநேசராய், நபி நேசராய் வாழ்வோமாக.

எம்.எச்.எம்.ஹாரித்-திஹாரிய

# கவிதைப் போட்டி இல. 187



**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### பரிசுக்குரிய கவிதை

### நல்ல ஆண்டு?

எத்தனையோ புத்தாண்டு ஏந்திவந்த போர்ச்சுமையை
இவ்வாண்டு இறக்கி வைக்கும் நிலை வருமா?
புத்தாண்டு பெரிதல்ல; பொங்கி வாழும் மாந்தர்களின்
இன்னலினை தீர்க்கும் ஆண்டெதுவோ-அதுவே
எமக்கெல்லாம் இத்தரையில் நல்லாண்டு!

திருமதி-மல்லிகா பத்மநாதன்- டெமேரியா குறூப்- பசறை.

### "போர்" ஆண்டு

"போருக்குப் பெயர் சூடி
புத்தாண்டு பிறந்ததனால்
போர் ஆண்டு இதுவென்று
பிரகடனப் படுத்துகின்றேன்!"

சதாகணபதி- அதிகாரவத்தை.

### 6,?,8

எங்கள் வாழ்வு
நேற்று ஆறாத சோகத்தில்...!
இன்று இயலாத கோலத்தில்...!
நாளை எட்டாத தூரத்தில்..!

மைமா- கிண்ணியா-3.

### "?"

அடித்துக் கொண்டால்
அழும்;
வெடிக்க வைத்தால்
கதறும்;
கைகள்
கொடுத்துக் கொண்டால்
சிரிக்கும்.

எஸ்.பிரபா-கொக்காகல.

### சமாதானம்

தொலைந்துபோன
சமாதானம்
தொண்ணூற்றேழிலாவது
தோன்றிடாதோ?

அ.மா.தியாகராஜன்-
பூண்டுலோயா.

### வினாக்குறி

கும்மிருட்டின் பின்னணியில்
புதுவருடம் எவ்வணியில்?
சமாதான அரும்பணியில்
சேர்ந்திடுவோம் மனத்துணிவில்!

என்.யூ.அப்துர் ரஸ்ஸாக் - அரநாயக.

### பூச்சியம்

எப்படிக் கூட்டினாலும்
கடைசியில்
பூச்சியம்தான்!

'ஜியென் நாலூரான்.'

### கேள்விக் குறி

ஓ!
புத்தாண்டே!
நீயும்
எங்கள் வாழ்வைப்போல்
கேள்விக்குறியோ?

செல்வி ம.அபிராமி-
கல்கிசை.

### மாட்டேன்

ஏன் வந்தாய் என்றுன்னைக்
கேட்கமாட்டேன்!
எனக்கு நீதான் தேன் என்றும்
உனை வாழ்த்திப் பாடமாட்டேன்!

எஸ்.நடராஜா-மன்னார்.

### புதிர்

கடந்துவிட்ட காலமதில்
கண்டதெல்லாம் துன்பம்தானே?
பிறந்துவிட்ட ஆண்டிதிலும்
புதிர் போடும் கேள்விதானோ?

வி.கோஹிலா- மடுல்சீமையூர்.

### வாழ்வளி(ழி)க்குமா?

தாழ்வுற்றுத் தலை குனிந்து
பாழ் பட்டு நிற்கும் எம் இன மக்களுக்கு
வாழ் வளிக்குமா? வாழ்வையே அழிக்குமா?
வந்ததிந்த புத்தாண்டு?

சி.மு.சுந்தரேசன்-
அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

### கலண்டர்

இது
தமிழர் காணும்
தனித்துவ
கலண்டர்!

எஸ்.சிவா- வட்டவளை.

### ?

வேகமாக ஓடிவந்த
1996
1997ல் காலடி
வைக்கையில்
மிதி வெடி பட்டு...!

சுபா வரன்-கண்டி.

### புதிய ஆண்டே..?

சமபல சமர்க்களத்தில்
சமாதானம் பிறப்பதெப்போ??
கழிந்த ஆண்டு புரியவைத்த
கசப்பான அனுபவமிதோ..??
புதிய ஆண்டில் போர்முழக்கம்
புதுவடிவில் கேட்டிடுமோ??
"போர்" அடித்த நிலையில் மக்கள்
மாரடித்து இறப்பதாமோ??..

காரைதீவூர் சிவம்- குருக்கள்மடம்.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* ரிம்னாஸ் எம். பௌஸர், கல்ஹின்னை.
* த. ஆனந்தன், மல்லிகைத்தீவு.
* சுகுணா முத்துக்கிருஷ்ணா, கொழும்பு-04.
* பாத்திமா மின்ஹா, புத்தளம்.
* கோ. சிவலிங்கம், மூதூர்.
* ஏ. செபஸ்தியன், உக்குவலை.
* ஆர். ஜெகதீசன், காரைதீவு-12.
* எம்.எம். நவ்பார், கிண்ணியா-02.
* ரு. பாபு, யாழ்ப்பாணம்.
* ர. ஜெனிபர், மட்/தாண்டவன்வெளி.
* ஜே. ராஃஷி, மூதூர்-06.
* திருமதி ஜெகதீஸ்வரி, திருமலை.
* பெமீலா ஆதம்பாவா, புசல்லாவ.
* பௌசியா மன்சூர், திருமலை.
* பே. கிறிஸ்ரி அன்ரனி, கொழும்பு-06.
* ஏ.எம்.ஏ. அஹத், சாய்ந்தமருது-10.
* ச. அழகேஸ்வரன், அக்கரைப்பத்தனை.
* ஏ. ஜெயந்தி, மண்டூர்-01.
* செல்வி பா. தில்லை, இராகலை.
* எம். மகேஸ்வரன், மட்டக்களப்பு.
* மகே. கண்ணன், பம்பலப்பிட்டி.
* செல்வி லதா அருணாசலம், கொம்மாதுறை.
* எஸ். ஜெயரூபி, கொழும்பு-15.
* லக்சுமி கடாட்சம், திருமலை.
* பி. விக்கினேஸ்வரன், ஒன்ராறியோ-கனடா.
* த. சேதுபதி, கிளிநொச்சி.
* எஸ். ஜெ. நிதர்சன், நீர்கொழும்பு.
* இ. வசந்தி, புத்தளம்.
* ஜெ. சுபோதினி, கொழும்பு-05.
* சி. அமீன், நாச்சியாதீவு.
* றினோஸியா, சென்றல் பிளேஸ், திஹாரிய.
* எம். நக்கத், தெஹிவளை.

# கவிதைப் போட்டி இல-190



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 08.02.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.190
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை

பரந்தன் தாக்குதல் அரசியல் தீர்வை வலியுறுத்துவதாக ராஜதந்திரியார் குறிப்பிட்டிருந்தார். அரசியல் தீர்வைவிடவும் அரசியல் ஆதாயத்தில் நாட்டம் கொண்ட அரசியல் முதலைகள் தீர்வை எட்ட விடுவிடுமா? அரசியல் குளத்திலிருந்து முதலைகளைத் தூக்கித் தரையில் போடவேண்டும்!

இ. ஜீவராசா, மன்னார்.

## எப்போது யாழ் வரும் ?

யாழ் குடாநாட்டு மக்களை முரசு மறக்காமல், இங்கு நடப்பனவற்றை வெளிக்கொண்டுவருகிறது. ஆனால் யாழ் குடாநாட்டுக்கு இதுவரை முரசு வராமல் இருப்பது ஏன்? எப்போது அனுப்பப் போகிறீர்கள்?

ஆர். ஏட்ணசிங்கம், காரைநகர்.

இந்திய மத்திய அரசு எவ்வாறான அணுகுமுறையைக் கைக்கொள்ளும் என்பதை எக்ஸ்ரே ரிப்போர்ட் மிகத் துல்லியமாக உணர்த்தியிருந்தது. மக்களிடம் தேவையற்ற எதிர்பார்ப்புக்களை உருவாக்காது, உள்ளதை உள்ளபடி ஆய்ந்து முரசு எதிர்ப்பு கூறுவது வரவேற்கத்தக்கது. தொங்கு நாடாளுமன்ற ஆட்சியாக, தடுமாறிக் கொண்டிருக்கும் இந்திய மத்திய ஆட்சி தனக்கொரு புதிய தலைவலியையும் தேடிக்கொள்ளமாட்டாது. வேண்டுமானால் அங்கொரு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஏதேனும் புதிதாக எதிர்பார்க்கலாம்.

எம். குணநாயகம், மட்டக்களப்பு.

சமகால நிகழ்வுகளை மையமாகக் கொண்ட சிறுகதைகளை ஒரு ஜனரஞ்சகப் பத்திரிகை பிரதானமாக தாங்கிவருவது 'முரசு' செய்துள்ள புதுமைதான். அதைவிடவும் 'தாய்' நாவலை முழுமையாக பிரசுரித்து முடித்தது முரசின் முத்தான சாதனை. இப்போது 'தூக்கு மேடைக் குறிப்பு'ம் அருமையிலும் அருமை. சிறந்த படைப்புக்களை துணிந்து தந்தால் வாசகர்கள் வரவேற்பார்கள் என்பதை முரசு நிருபணமாக்கிவிட்டது.

எம். நூர்ஜகான், காத்தான்குடி.

சினிவிசிட்டில் ரம்பா முக்குடம் சகிதம் அசத்திவிட்டார். ஜொள்ளுப் பொங்கல்தான் போங்கள். 96ல் தமிழ்த் திரையுலக முக்கிய சம்பவங்களை தொகுத்துத் தந்தது நன்று. பாராட்டுக்கள்.

செல்வன் ஆ. ஜெயரூபன், கொழும்பு-09.

கொக்குவிலில் பராகொமாண்டோக்கள் நடத்திய படுகொலை வேட்டை பற்றி அரசியல் தொடர் விபரித்தபோது உண்மையாகவே கலங்கித்தான் போனேன். இந்தியப் படைகளே நீங்களுமா? என்று நினைத்துக்கொண்டுதான் பலர் செத்து வீழ்ந்திருப்பார்களோ?

சா. பாலசுப்பிரமணியம், கண்டி.



கடந்தவார முரசில் வெளிவந்த முரசம், காதிலை பூ கந்தசாமியாரின் கற்பனை, அதிரடி அய்யாத்துரை என்பன பலே! பலே! மேலும் காதிலை பூ கந்தசாமியார் யாரோ? எங்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். சிந்தியா பதில்கள் சூப்பரிலும் சூப்பர்.

செல்வன் சிவ. ஜெயசுப்ரமணியம், தலவாக்கலையூர்.

என்னருமை முரசே!

எடுத்தவுடனேயே ரசிகனின் 'இலக்கிய நயத்'தை ரசித்து, அனிதா இளம் மனைவியைப் பார்த்து, அதிசயித்து, பூலானைப் பார்த்து சோகித்து, கந்தசாமியண்ணையைப் பார்த்து கலகலவென சிரிக்கும் நான் உன்னைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்!

இ. தயாளினி, ஹெந்தல, வத்தளை.

ரசிகனின் 'இலக்கிய நயம்' கவிதை வடிவில் கதை தரும் பாணி ரசிக்கத்தக்கது. 'அனிதா இளம் மனைவி' இளமை செழிக்கிறது. செம விறுவிறுப்புத் தான்! சினிவிசிட்டில் ஒவ்வொரு வாரமும் வித்தியாசமான வடிவமைப்பு கண்களைக் கவருகின்றன. முரசே! உன் வதனம்- சும்மா சொல்லப்படாது- பிரதி வாரமும் என் போன்ற வித்தியாச விரும்பிகளுக்கு ஒரு பல் சுவைப் பொக்கிஷம். படித்துப் பாதுகாக்க வேண்டிய அரசியல் அம்சங்களுக்கு என்றும் நீயே முன்னணியில் நிற்கிறாய்! சபாஷ் தொடர்க!

செல்வி ப்ரிய நேசி, களுத்துறை(தெற்கு).

பூலான் தேவியின் வாழ்க்கைச் சம்பவத்தை சுவைபட ரசிகன் தொகுத்துத் தந்து கொண்டிருக்கும் நேரத்தில் பூலானைமீண்டும் சிறை வைக்க வேண்டுமென அவரது எதிரிகள் குரல் எழுப்பியிருப்பதை நினைக்கையில் மனதுக்கு ரொம்பவும் வேதனையாக இருக்கிறது.

செல்வன் கே.வின்சன்ட், மட்/சத்துருக்கொண்டான்.

பிரியமுள்ள முரசே!

நீ சுமந்து வரும் அறிவுக் களஞ்சியத்தில் பாப்பாமுரசு, கொள்ளை ராணி, இலக்கிய நயம், லேடீஸ் ஸ்பெஷல் போன்றவைகள் என்னையும் என் தோழிகளையும் மிகவும் கவர்ந்துள்ளன. உனது ஒவ்வொரு இதழ்களையும் பரிமாறிப் பரிமாறிப் படிக்கின்றோம்.

நா. ஜெயாவதி, மல்லிகைத்தீவு.



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக தாக்குதல்?

## புலிகள் திட்டமிடலாம் என்று சந்தேகம்!

யாழ் குடாநாட்டின் தீவுப்பகுதிகளில் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ் குடாநாட்டில் தீவுப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் மற்றும் ஈ.பி.டி.பி. இயக்கத்தினர்மீது புலிகள் தாக்குதல் தொடுக்கக்கூடும் என்று அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் குடாநாட்டில் தமிழ் கட்சிகள் சென்றுள்ளதால், அவற்றின்மீது தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் படையினர் மட்டுமே புலிகளின் இலக்காக இருந்தனர். தற்போது தமிழ் கட்சிகளும் சென்றுள்ளதால் அவையும் புலிகளின் இலக்காக மாறியுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்க்கட்சிகள் தமது பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ளு மாறு படையினரால் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

### தேவை பலவீனம்

இதேவேளை தெற்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட இருப்பதால், புலிகள் பாரிய தாக்குதல்களில் ஈடுபடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தரப்பு மாபெரும் வெற்றி பெறுமானால் சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் அதன் போர் முஸ்தீபுகளுக்கு ஊக்கமாக அமைந்துவிடும் என்று புலிகள் கருதுவர். எனவே அரசாங்கத்தின் அரசியல் செல்வாக்கைப் பலவீனப்படுத்தும் வகையில் பாரிய தாக்குதல்களுக்கு புலிகள் திட்டமிடலாம் என்று கருதப்படுகிறது.

வடக்கு-கிழக்கு போர் முனையில் புலிகளைப் பலவீனப்படுத்திவிட்டதாக தெற்கில் அரசாங்கம் பிரசாரம் செய்யும். உள்ளூராட்சித்தேர்தலில் அரசின் பிரதான சாதனையாக அதுதான் சொல்லப்படும். எனவே அப் பிரசாரத்திற்குப் பதிலடியாக தேர்தல் நெருங்கும் சமயத்தில் புலிகள் தாக்குதலில் ஈடுபடக்கூடும் என்று நம்பப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு புலிகள் தலைநகரிலும் தாக்கக்கூடும் என்று படை வட்டாரங்கள் நினைக்கின்றன. அதனால் தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகளும், சோதனைகளும் மீண்டும் தீவிரமாகக் கூடும் என்று தெரிகிறது.

### பேச்சு அல்லது போர்

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி தனது பிரச்சாரத்தில் புலிகளுடன் பேசியோ, அல்லது போரிட்டோ ஒரு முடிவு காணவேண்டும் என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளது.

புலிகளுடன் அரசு நிபந்தனை இல்லாமல் பேசவேண்டும் என்று சில மாதங்களுக்கு முன்னர் ஐ.தே.கட்சி கூறிவந்தது. இப்போது தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், ஐ.தே.கட்சி சுருதியை மாற்றிக்கொண்டுள்ளது. புலிகளுடன் பேச்சு மூலமாகவோ, போர் மூலமாகவோ ஒரு முடிவைக் காண்பதே தமது கொள்கை என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இந்நிலையில் புலிகளின் தாக்குதல் தீவிரமானால், போரில் அரசாங்கத்தின் உத்திகள் சரியாக இல்லை. தமது ஆட்சிக்கால உத்திகளே சரியானவை, என்று ஐ.தே.கட்சி பிரசாரம் செய்யத் தொடங்கிவிடும்.

புலிகள் தாக்குதல்களில் ஈடுபடாதிருக்கும் வகையில் வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடக்கூடிய சாத்தியங்களும் உள்ளன. அநேகமாக உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் பாரிய படை நகர்வுகள் மேற்கொள்ளப் படலாம் என்று நம்பப்படுகிறது.

# வேகமான சண்டை விமானம் 'கிஃபிர்'

## மூன்று வாரங்கள் நஷ்டம் 30 கோடி

**1997ம்** ஆண்டு பிறந்த மூன்று வாரங்களுக்குள் விமானப்படைக்கு கிட்டத்தட்ட 30 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

1997ம் ஆண்டு பிறந்த பின்னர் மூன்று வாரங்களுக்குள் 310 படையினர் பலியாகி உள்ளதாகவும், 609 படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனவரி 16ம் திகதி விழுந்துபோன தன்னியக்க உளவு விமானம் இஸ்ரேலிய தயாரிப்பாகும். அதன் பெறுமதி கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய்களாகும்.

ஜனவரி 20ம் திகதி விழுந்துபோன 'வை-12' ரக விமானம் சீனாவின் தயாரிப்பு. 1986ல் வாங்கப்பட்டது. அதேபோல 9 விமானங்கள் வாங்கப்பட்டன. அன்றைய மதிப்பில் ஒரு 'வை-12' விமானத்தின் விலை 12 கோடியே 54 இலட்சம்.

ஜனவரி 21ல் நீர்கொழும்பு ஏரியில் விழுந்த 'கிஃபிர்' விமானம் இஸ்ரேல் தயாரிப்பாகும். அதன் பெறுமதி கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியில் உள்ள புலிகளின் இலக்குகளைத் தாக்குவதற்காக குண்டுகளைப் பொருத்திக் கொண்டு சென்றபோதே கிஃபிர் விமானம் கடலில் விழுந்தது.

இஸ்ரேலிடம் இருந்து ஆறு சண்டை விமானங்களை இலங்கை கொள்வனவு செய்தது. கிஃபிர் விமானம் இலங்கை விமானப்படையின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியது.

கிஃபிர் விமானம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது. நீர்கொழும்பு கடற்பகுதி கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அருகேதான் உள்ளது. படை வட்டார தகவலின்படி விமானம் புறப்பட்ட சில நிமிடங்களுக்குள் விமானி தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் செயற்பாட்டை ஆரம்பித்துவிட்டார் என்று தெரிகிறது. விமானத்தை பாதுகாக்க முயற்சிகள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

கிஃபிர் சண்டை விமானம் 5 ஆயிரத்து 775 கிலோ எடை வரையான ஆயுதங்கள் மற்றும் குண்டுகளை காவிச் செல்லக்கூடியது. அதிவேகமாக பறக்கக்கூடியது. இலக்குகளை தாக்கிவிட்டு வேகமாக விலகிச் சென்றுவிடக்கூடியது.

# யாழில் படை-புலிகள் மோதல்

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியில் 20.01.97 அன்று மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவத்தினர்மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். அத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாயினர். அவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் புலிகளால் தீக்கிரையாக்கப்பட்டது.

20.01.97 அதிகாலை யாழ்ப்பாணத்தில் வரணி பொதுச் சந்தைக்கு அருகே அமைந்திருந்த இராணுவக் காவலரண் ஒன்று தமது அதிரடிப்படையணியால் தாக்கி அழிக்கப்பட்டதாகவும், இராணுவத்தரப்பில் ஒருவர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

19.01.97 அன்று யாழ்ப்பாணம் கைதடியில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் புலிகள் தரப்பில் இருவர் பலியானார்கள். தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கப்டன் ஜீவன் (சிவக்குமார் ஜெயக்குமார்- யாழ்ப்பாணம்), கப்டன் மயூரன் (தம்பிப்பிள்ளை ரவிசங்கர்- யாழ்ப்பாணம்) ஆகியோரே பலியான புலிகளாவர்.

# பயணிகளிடம் அதிகாரிகள் இலஞ்சம்!

## கப்பல் பயணிகள் திண்டாட்டம்!

(திருமலை நிருபர்)

வடபகுதிக் கப்பல் பயணிகளிடம் சுரண்டி வயிறு வளர்க்கும் கும்பலொன்று திருக்கோணமலையில் தலையெடுத்துள்ளது. பயணிகளின் கஷ்டங்களையும் அவலங்களையும் தமக்குச் சாதகமாக்கி இவர்கள் சுரண்டி வருகிறார்கள். தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை இச் சுரண்டல்காரர்களுக்கு ஒதுக்கவேண்டியுள்ளதே என பயணிகள் பலர் முரசிடம் தெரிவிக்கின்றனர். வடபகுதி செல்ல வருவோரிடம் பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் இலஞ்சத்தை எதிர்பார்ப்பதும், அது நிறைவேறாதபோது பிரயாணத் திகதிகளைப் பின் தள்ளிப் போடுவதும் சாதாரண விஷயமாகி விட்டதாகப் பயணிகள் கூறுகின்றார்கள்.

ஒரு உத்தியோகத்தர் இலஞ்சம் பெற முயன்றபோது மேலதிகாரியிடம் வகையாக மாட்டிக்கொண்டதால் எச்சரிக்கப்பட்டுள்ளார். இலஞ்சம் கொடுத்தும் காரியம் நிறைவேறாததால் வெகுண்ட பயணி ஒருவர், எதிரே அகப்பட்ட அப்பாவி அதிகாரிமேல் சீறிப்பாய்ந்து கலாட்டா செய்த சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

நாட்டின் பிறபகுதிகளுக்குச் செல்லக் கப்பல் மூலம் வந்திறங்குவோரை ஏமாற்றுவதிலும் ஒரு கோஷ்டி ஈடுபட்டுள்ளது. புகையிரதச் சீட்டால் ஏற்படும் பயண நெருக்கடியைச் சாதகமாக்கி நபரொருவருக்கு ஐநூறு ரூபா அறவிட்டுக் கொழும்பு செல்ல தனியார் வாகனங்களை ஏற்பாடு செய்வதே இவர்களது கைங்கரியம். விபரம் தெரியாதவர்கள் இவர்களது பேச்சை நம்பி இ.போ.ச. அறவிடுவதைப்போல் பத்துமடங்கு பணம் செலுத்தி கொழும்பு செல்கிறார்கள்.

திருக்கோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும் புகையிரதம் தற்போது பிற்பகலிலேயே புறப்படுவதால் நடுச்சாமத்திலேயே கொழும்பை வந்தடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் பயிற்சி தொடர்கிறது

## புதிய பயிற்சியாளர்கள் வருகை

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு அமெரிக்காவிடம் இலங்கை உதவி கோரியவேளைத் தொடர்ந்து, 'வழமையான ஒத்துழைப்பு' என்ற பெயரில் இலங்கைப் படைப் பிரிவினருக்கு அமெரிக்க இராணுவ மற்றும் தனியார் நிறுவன அதிகாரிகள் அடிக்கடி வந்து பயிற்சி அளித்து வருகின்றனர். தென் இலங்கையில் சற்று ஒதுக்குப்புறமான பகுதிகளில் இத்தகைய பயிற்சிகள் இடம் பெறுவதாகத் தெரியவருகிறது.

பயிற்சி வழங்குவதில் ஈடுபட்டிருந்த ஒரு குழுவினர் கடந்தமாதம் நாடு திரும்பினர். அவர்களைத் தொடர்ந்து மற்றுமொரு குழுவினர் இங்கு வந்துள்ளனர். விமானங்களை எப்படிப்பராமரிப்பது என்பது பற்றியே இவர்களது பயிற்சி இருக்குமாம்.

அமெரிக்கப் பயிற்சியாளர்கள் வருகை பற்றிய தகவல்கள் கூடுமானவரை பத்திரிகைகளுக்கு எட்டிவிடாதபடி பாதுகாக்கப்பட்டு வருவதாக ஆங்கில வார ஏடு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

# மரண தண்டனை

யாழ்ப்பாணத்தில் வடமராட்சியில் கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் (வயது 48) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக கடந்த வாரம் முரசு செய்தி வெளியிட்டிருந்தது.

அவருக்கு தம்மாலேயே மரண தண்டனை வழங்கப்பட்டதாக புலிகள் உரிமை கோரியுள்ளனர். பருத்தித்துறை பஸ்டிப்போ பாதுகாவலராக கடமையாற்றியவர் கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார். அவர் படையினருக்கு தகவல் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# நாட்டைப் பிரிக்க அரசு திட்டமாம்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சாடுகிறார்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு யோசனைகளை ஆதரிக்க முன்வந்துள்ளதாக தமிழ்க் கட்சிகள் சில கூறிவருகின்றன.

தமிழ்க் கட்சிகளிடம் ரணில் தெரிவிக்கும் கருத்துக்களுக்கும், தென்னிலங்கை பிராசரக் கூட்டங்களில் அவர் வெளியிடும் கருத்துக்களுக்கும் இடையே முரண்பாடான தன்மை தெரிகிறது.

பொது ஜன முன்னணி அரசு நாட்டைக் கூறுபோட முயல்வதாக ரணில் குற்றம் சாட்டியுள்ளார். அதன் அர்த்தம், அரசியல் தீர்வு யோசனைகள் மீதான மறைமுகமான தாக்குதல் என்றே கருதப்படுகிறது.

நுவரெலிய மாவட்டத்தில் உள்ள வலப்பனையில் நடைபெற்ற ஐ.தே.கட்சி கூட்டத்தில் ரணில் உரையாற்றினார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

"மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றினை நடத்துவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெற வேண்டும். பாராளுமன்ற அங்கீகாரத்தைக் கோராமல் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றினை நடத்துவது இந்நாட்டின் அரசியல் யாப்புக்கு முரணானதாகும்.

அரசியல் யாப்புக்கு முரணான வகையில் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை அரசாங்கம் நடத்த முற்பட்டால் எமது கட்சி அதனைக் கடுமையாக எதிர்க்கும்.

நாட்டின் இன்றைய நெருக்கடியைத் தீர்த்து வைக்க முன்வைக்கப்படும் எந்தத் திட்டத்துக்கும் பெரும்பான்மையினரின் ஆதரவு கிடைக்கவேண்டும் என்பதே எமது கட்சியின் திட்டவட்டமான முடிவு. இதனால்தான் அதிகாரப்பரவல் தொடர்பான ஆலோசனைகளையிட்டு ஏனைய அரசியல் கட்சிகளுடன் ஆலோசித்து வருகிறோம்.

அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதில் எமக்குக் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால் அதனை ஒரு சாட்டாக வைத்து நாட்டைத் துண்டாட நினைப்பதை நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் நாட்டைக் கூறுபோட நினைக்கிறார். அதற்கேற்றாற் போல் இன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போரும் நாட்டைப் பிரிப்பதற்கு முனைவதை கடுமையாக எதிர்த்தே தீருவோம்!"

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

# இருவர் பலி

யாழ்ப்பாணம் கொக்குவில் மற்றும் சுழிபுரம் பகுதிகளில் இருவர், 23.01.97 அன்று பலியானார்கள்.

கொக்குவிலைச் சேர்ந்த இராசலிங்கம் இரத்தினசிங்கம் (வயது 45) என்பவர் மாலையில் தனது வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானார். இவர் நாலு பிள்ளைகளின் தந்தையாவார்.

சுழிபுரம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் ஒன்றில் ஒரு வாலிபர் பலியானார். அவரது உடல் யாழ் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. இதே வேளை சுழிபுரத்தில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாக படையினர் யாழில் தெரிவித்துள்ளனர்.

# முன்னுக்குப் பின் முரணான வேண்டுகோள்!

## பணம் கேட்டு அடையாள அட்டையைப் பறித்து வைக்கும் நிலை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு களுவன்கேணியில் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்படும் முறுகல் நிலையினால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் இரவாகியதும் பெரும்பாலான மக்கள் குடியிருப்புக்கள், சன நடமாட்டமின்றி வெறிச்சோடியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

களுவன்கேணியிலுள்ள படை முகாம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காவதால் அப்பகுதியைச் சூழ உள்ள வீடுகளில் வசிக்க மக்கள் அஞ்சுகின்றனர். இரு தரப்பு மோதல் நடவடிக்கையின்போது தாம் சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதால் மக்கள் அப்பகுதிகளை விட்டு பயந்தோடி தூர உள்ள இடங்களில் பெருங்கஷ்டத்துடன் வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள்.

எனினும் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ள மக்களை, மீண்டும் தத்தமது இடங்களில் வந்து குடியமருமாறு படையினர் ஒலி பெருக்கிகள் மூலம் அழைப்பு விடுத்துள்ளனர். "பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே படையினராகிய நாம் இங்கு இருக்கிறோம். எனவே அஞ்சவேண்டாம்!" என்று படை உயரதிகாரிகள் பொதுமக்களுக்கு விளக்கமளிப்பதாகவும் ஆனால் சில சாதாரண சிப்பாய்கள், "நாங்கள் இனிமேல் இப்பகுதியில் எல்.ரி.ரி.ஈ.யினரால் தாக்கப்பட்டால் நடப்பதுவேறு," என்ற தோரணையில் பொது மக்களை அச்சுறுத்தி வருவதாகவும் அங்குள்ள மக்கள் கவலையுடன் கூறுகின்றனர்.

இதனிடையே, களுவன்கேணிப் பகுதியில் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ் இயக்கமொன்றின் அங்கத்தவர்கள் அங்குள்ள மக்களிடம் பணம் கேட்டு அடையாள அட்டைகளைப் பறித்து வைப்பதாக அதிகாரிகளிடத்திலும் மட்டக்களப்பில் மனித உரிமைகளுக்காகப் பணிபுரியும் அலுவலர்களிடத்திலும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகள்!

## படை அதிகாரிகளுடன் பேச்சு!

ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் யாழ் நகரில் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கைகள், யாழ் குடாநாட்டில் தற்போதுள்ள சூழல், அங்குள்ள பிரச்சனைகள் என்பவை தொடர்பாக பேச்சுக்கள் நடைபெற்றன.

ஈ.பி.டி.பி, சார்பில் கே.வி.கே.ஜெகன், புளொட் சார்பில் மாறன், கண்ணன், ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பில் சுபத்திரன், மோகன், சுகு ஸ்ரீதரன் ஆகியோர் பங்கு கொண்டனர். படையினர் தரப்பில் மேஜர் ஜெனரல் பல்லேகல, யாழ் பிரிகேடியர் காமினி ஜெயசுந்தர, பொலிஸ் அத்தியட்சகர் லெனன்கம ஆகியோர் பங்குகொண்டனர்.

இச்சந்திப்புக் குறித்து ஈ.பி.டி.பி. யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

"ஜனவரி நாலாம் திகதி எமது அலுவலகம் திறக்கப்பட்ட பின்னர் 400 முதல் 500 பேர் வரையான- காணாமல் போனோர் தொடர்பான புகார்கள் எமக்குக் கிடைத்துள்ளன. எனவே கைது செய்யப்பட்டோர், பிற இடங்களுக்கு தடுப்புக் காவலுக்கு அனுப்பட்டோர் தொடர்பான விபரங்களைக் கோரினோம்.

கைது செய்யப்பட்டுள்ள அப்பாவிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறும் கோரினோம்.

கைது செய்யப்படுவோர் தொடர்பான புதிய நடைமுறை விரைவில் நடைமுறைக்கு வரும் எனவும், கைதாவோர் தொடர்பான தகவல்களை பொலிஸ் நிலையத்தில் அவர்களது உறவினர்கள் பெறக்கூடிய வழிவகை செய்யப்படும் என்றும் படை அதிகாரிகள் தெரிவித்தனர்" என்று ஈ.பி.டி.பி. விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை – இந்திய விமானப்படை கூட்டாக தேடுதல்!

## கடும் சோதனைக்கு உள்ளான இந்தியக் கப்பல்

ஏராளமான ஆயுதங்களுடன் எல்.ரி.ரி.ஈ.யினருக்குச் சொந்தமான கப்பல் ஒன்று வடகிழக்குக் கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது, என்று கிடைத்த நம்பகமான தகவலை அடுத்து கொழும்பிலிருந்து பலாலி விமான நிலையத்துக்கும் அநுராதபுரத்திலுள்ள விமானப் படைத்தளத்துக்கும் எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஜனவரி 20ம் திகதி அதிகாலை 3.30 அளவில் சீனத் தயாரிப்பான 'வை-12' ரக விமானம் பலாலியிலிருந்து வங்காளவிரிகுடாக் கடல் நோக்கிப் புறப்பட்டது.

ஃபிளைட் லெஃப்டினண்ட் சுதர்சன நாணயக்கார இவ் விமானத்தைச் செலுத்தினார். பிரசன்னா வட்டசிங்க, விக்கிரமசிங்க மற்றும் கடற்படையைச் சேர்ந்த எஸ். ரணவீர ஆகியோரும் இவ்விமானத்திலிருந்தனர்.

5000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த இவ் விமானத்திலிருந்து பலாலியிலுள்ள கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்ட லெஃப்டினண்ட் நாணயக்கார, ஒரு கப்பல் கடலில் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது என்று வானொலி மூலம் அறிவித்தார். இவ்வாறு நாணயக்கார அறிவித்தபோது காலை 5 மணிக்குச் சில நிமிடங்களே இருந்தன.

தான் மேலும் தனது விமானத்தைச் சற்றுக் கீழே இறக்கி, அக்கப்பலின் அடையாளங்களைக் கண்டுபிடிக்கப்போவதாகவும் அறிவித்தார். ஆனால் அதனைத் தொடர்ந்து விமானத்துடனான தொடர்புகள் யாவும் அற்றுப்போய் விட்டன.

இலங்கை விமானப் படையினருடன் இந்திய விமானப் படையினரும் இணைந்து காணாமற்போன விமானத்தைத் தேடினர். ஆனால் எதுவித அடையாளமும் கிடைக்கவில்லை.

மர்மமான கப்பல் என்று கருதப்பட்டது உண்மையில் ஆயுதங்கள் கடத்தும் கப்பல் அல்ல என்றும் 'எம்.வி. மும்பாய்' என்ற சரக்குக் கப்பல் என்றும் கண்டு பிடிக்கப்பட்டது.

அக்கப்பல் சென்னையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இப் பிராந்தியத்தில் இக்கப்பல் வழமையாகச் செல்வது என்றும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இந்திய விமானப் படையினரும் இந்திய கடற்கரைக் கண்காணிப்பு அதிகாரிகளும் நம்பகமாகத் தெரிவித்த கருத்துக்களை ஸ்ரீலங்கா விமானப்படையினர் நம்ப மறுத்தனர். கப்பலைச்சோதிக்க வேண்டும் என்றும் பிடிவாதமாக இருந்தனர்.

நடுக்கடலில் சோதனை நடத்த முடியாமையினால், போதுமான பந்தோபஸ்துடன் கொழும்புத் துறைமுகத்துக்குக் கப்பல் கொண்டு வரப்பட்டது.

கப்பல் துறைமுகத்தை அடைந்ததும் இலங்கை பாதுகாப்புப்படைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் கப்பலை நன்றாகப் பரிசோதித்தனர்.

கப்பல் கப்டன் மற்றும் மாலுமிகளைத் துருவித் துருவி ஆராய்ந்தனர். வை-12 விமானம் சுட்டு வீழ்த்தப்படக்கூடிய எந்த சாதனங்களும் அக்கப்பலில் இருக்கவில்லை என்பது நிரூபணமாகியது.

# சினைப்பர் தாக்குதல்

(ஏறாவூர். நிருபர்)

மட்டக்களப்பு-கிரான், சித்தாண்டி, வந்தாறுமூலை, களுவன்கேணிப் பகுதிகளில் புலிகள் சினைப்பர் ஆயுதங்களுடன் நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் படையினர் இப்பகுதிகளில் சுற்றி வளைப்புகளையும், திடீர் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளனர். இப்பகுதிகளுக்குச் சமீபமாகவுள்ள கடலிலும் புலிகளின் படகுகள் அடிக்கடி நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு-பெரிய புல்லுமலையில் இராணுவ முகாம் அமைந்திருந்த பாடசாலைக் கட்டிடத்தை அங்கிருந்த படையினர் வெளியேறியவுடன், புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க, மக்கள் அக்கட்டிடத்தை இடித்துத் தரைமட்டமாக்கியதாகக் கூறப்படுகிறது. புலுக்குணாவ விஷேட அதிரடிப்படை முகாம் தாக்குதலின் பின்னர் பெரிய புல்லுமலையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியது நினைவிருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# தரையிறங்கிய ஹெலி! விமானிமீது தவறு

பாதுகாப்பு இணை அமைச்சர் அநுருத்த ரத்வத்த உட்பட உயர் அதிகாரிகளை ஏற்றிச் சென்ற விமானப்படையைச் சேர்ந்த பெல் 212 ஹெலிக்கொப்டர் கடந்த மாதம் வவுனியாவுக்கு அருகே யுள்ள-புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் தரையிறங்கியது தெரிந்ததே. இவ்வாறு அந்த ஹெலிக்கொப்டர் தரையிறங்கியமைக்கான காரணத்தை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழு, விமானிமீதே முழுத்தவறும் இருக்கிறது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

விமானப்படை கொமடோர் ஜே.எல்.சி. சல்காடோ, விங் கொமாண்டர் ககன் புளத்சிங்கல மற்றும் விங் கொமாண்டர் ரஞ்சித் யாப்பா ஆகிய மூவரைக் கொண்ட குழுவே விசாரணை நடத்தி, விமானி சாகர கொட்டகதெனியாவை குற்றவாளியாகக் கண்டுள்ளது. இவருடைய பணிகளிலிருந்து இவர் உடனடியாக நீக்கப்பட்டுள்ளார்.

ஹெலியிலிருந்த தொடர்பு சாதனங்கள் சில பழுதடைந்தமையே அவசரமாகத் தரையிறக்கப்பட்டமைக்கான காரணம் என்று விமானி கூறியிருந்தார். அவ்வாறான நெருக்கடிகளில் ஒருவிமானி கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளைப் புறக்கணித்துவிட்டு விமானி கொட்டகதெனியா 28 நிமிடங்கள் மௌனம் சாதித்துவிட்டார் என்பதே அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். ஹெலிக்கொப்டரிலுள்ள சில சாதனங்கள் பழுதடைந்து போயிருந்தன என்ற விமானியின் கூற்றை, அந்த ஹெலியில் பயணம் செய்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ரோஹன் தலுவத்த மறுத்திருக்கிறார்.

# கிழக்கில் தொ(ல்)லைத் தொடர்பு!

சமீபகாலமாக மட்டக்களப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் வெளியிடங்களுக்கான தொலைத் தொடர்பு வசதிகள் மிகவும் சீர்குலைந்துள்ளன. இச்சீர்குலைவிற்கு, லக்கல ஊடான பரிவர்த்தனையில் ஏற்பட்டுள்ள கோளாறே காரணமென்றும் தமக்கும் இதற்கும் சம்பந்தமில்லையென்றும் மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தின் பொறியியல் பிரிவினர் உடனடியாகவே பதில் கூறிவிடுகின்றனர். நீண்ட காலமாக இருந்து வரும் இந்தச் சீர்கேட்டைத் திருத்தியமைப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தெரியவில்லை.

அத்தி பூத்தாற் போல எப்போதாவது கிடைக்கும் தொடர்பு சில வினாடிகளே நீடிக்கிறது. இதன்பின்னர் பேசிக் கொண்டிருப்பவர்கள் பெருமூச்சு விட வேண்டியுள்ளது. தொலைபேசியைச் சுழற்றுவதே பெரும் தொல்லையாகிப் போய்விட்டது.

பொதுவான தொலைபேசிகள் செயலற்றுப்போகும்போது மட்டக்களப்பு பரிவர்த்தனை நிலையத்தில் ஒரு பரிட்சார்த்த தொடர்பு வழி மாத்திரம் செயற்படுகிறது. இத்தொடர்பைத் தமக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தினர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விடயம் பொதுமக்களின் விசனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இது ஒரு புறமிருக்க; மட்டக்களப்புக்கும் வெளியிடங்களுக்குமான தொலைத் தொடர்பு சீர்குலைந்திருப்பதால் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள தனியார் தொடர்பு நிலையங்கள் மூடப்படுகின்றன.

ஃபக்ஸ், தொலைபேசி வசதிகள் இல்லாததால் ஆயிரக் கணக்கானோர் தமது அலுவல்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாது தவிக்கிறார்கள். தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தும் நீண்ட காலமாக நீடித்து வரும் இத் தொலைத் தொடர்புச் சீர்கேட்டை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்று பொது மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

# தமிழ் ஆசிரியர்கள் குமுறல்!
## ஆசிரியர்கள் கழகம் மீது புகார்

திருகோணமலை மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர், இணைப்பாளர் ஆகியோர் கடந்த பல வருடங்களாக எதுவித பொதுக் கூட்டங்களையும் நடத்தாது தன்னிச்சையாகவே செயல்பட்டு வருகின்றனர்.

அத்துடன் அவர்களில் எவரும் ஆசிரியர்கள் இல்லை. எல்லோரும் அதிபர் சேவையில் உள்ளவர்கள். உண்மையில் ஆசிரியர்களின் தொழிற்சங்க அமைப்பெனில், ஆசிரியர்களுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். பாடசாலை எனும் நிறுவனத்தின் முகாமையாளரே அதிபர்; ஆகவே அதிபர்கள் ஒரு தொழிற்சங்க அமைப்பில் இருப்பது பொருத்தமற்றது.

அது தவிர ஆசிரியர்களின் உண்மையான தொழில் ரீதியான பிரச்சனைகளை இச் சங்கம் கவனிப்பதில்லை. இன்றைய நிலையில் ஆசிரியர்கள் அடிக்கடி படையினரால் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவது, இடர்க்காலக் கொடுப்பனவுகள் பெறுவது, ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள், ஆசிரியர்கள் கல்வி அலுவலகங்களில் எதிர்நோக்கும் பிரச்சனைகள், நிரந்தரமான- நீதியான இடமாற்றக் கொள்கை என்பவை பற்றிக் கவனமெடுப்பதில்லை.

அவர்களின் கவனமெல்லாம் தங்களின் பதவியுயர்வு, தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப ஆசிரியர்களை இடமாற்றுதல், கூட்டணி அரசியல் சார்பாகச் செயற்படல், பிராந்தியக் கல்வித் திணைக்கள கல்வி நிர்வாகத்தில் தலையீடுகள் செய்தல் ஆகியவை தான் திருமலை தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாகிகளின் செயற்பாடாக இருப்பதால், சகல தமிழ் ஆசிரியர்களும் திருமலை தமிழ் ஆசிரியர் சங்க நிருவாகத்தினர் மீது கடும் விசனம் அடைந்துள்ளனர்.

கே. வேணு,
திருமலை மாவட்ட ஆசிரியர்கள் சார்பாக.

# முஸ்லிம் மீனவர்கள் மீதும் சந்தேகம்!
## கடற்படையினர் கடும் கட்டுப்பாடு

* மன்னார் நகர மக்களுக்கு மற்றுமொரு தாண்டிக்குளமாய் கற்பிட்டி விளங்குகிறது. மன்னார் செல்லும் பிரயாணிகள் அக்குவேறு ஆணி வேறாக கல்பிட்டி சோதனை முகாமில் சோதிக்கப்பட்ட பின்னர்தான் அனுமதிக்கப்படுகின்றனர். அனுமதிக்கப்பட்ட பொருட்களும் சில வேளைகளில் பொலிசாரினால் எடுத்து தடுத்து வைக்கப்படுகின்றன- பின்னர் அவை காணாமல் போய் விடுகின்றன.

* கற்பிட்டியில் தற்பொழுது இளைஞர்கள் மத்தியில் ஹெரோயின் பாவனை அதிகமாகிக் கொண்டே வருகிறது. சென்ற வாரமும் இரகசியப் பொலிசார் ஒரு இடத்தை முற்றுகையிட்டு சந்தேகிக்கப்பட்ட விற்பனையாளர் ஒருவரை கைது செய்தனர். ஹெரோயின் விற்பனையில் அழகான பெண் விற்பனையாளரே இப்பொழுது பிரபல்யம் பெற்று வருகிறார். காவல் துறையையும் அவர் வசீகரித்து விட்டார் என பரவலாகப் பேசப்படுகிறது.

* கடற்படையினருக்கும், பொதுமக்களிற்கும் கற்பிட்டியில் ஒரு நல்ல அன்னியோன்யமான நிலை இருந்து வருகிறது. பொது மக்களுடன் எந்த வம்பு தும்பிற்கும் போகாத நல்ல பிள்ளைகளாக அவர்கள் இருக்கின்றனர்.

* மன்னார் செல்லும் பிரயாணிகள் கற்பிட்டி முகாமில் அடையாள அட்டையைக் கொடுத்து நீல நிறத் துண்டொன்றைப் (விசா போன்றது) பெற்றுக் கொண்டு மன்னார் போக வேண்டும். திரும்பி வரும் போது அடையாள அட்டையைப் பெறுவதற்கு நீல நிறத் துண்டைக் காட்ட வேண்டும்.

* தரையில் சுமுகமாக இருக்கும் கடற்படையினர் கடல் பிராந்தியத்தில் கெடுபிடியாகவே நடந்து கொள்கின்றனர். கடற்படைத் தளத்திற்கு நேரே முன்னால் இருக்கும் பற்றைகள் அடர்ந்த குன்றுத் தீவுப்பகுதிக்கு மீனவர்கள் செல்வது முற்று முழுதாக தடை செய்யப்பட்டிருக்கின்றது. அதில் கடற்படையினர் முகாமமைத்து ஏறக்குறைய நூற்று ஐம்பதுபேருக்குக் குறையாமல் இரவு பகல் காவலரணில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்றொழிலுக்கு செல்லும் எல்லா மீன்பிடிப்படகுகளும் குன்றுத் தீவுக்குச் சென்று தம்மை அடையாளப்படுத்தியே செல்ல வேண்டும். வரும் போதும் அடையாளப் படுத்த வேண்டும். மாலை ஆறு மணிக்கு முன்பாக கடலில் வலை விடவேண்டும். பொழுது காலித்த பின்பே வலை எடுக்கச் செல்ல வேண்டும். இந்நிபந்தனைகளை மீறுபவர்களின் படகுகள் துரத்தி அழிக்கப்படும். படகு என்ஜின்களிலும் 18 வலுவிற்கும் கூடிய என்ஜின்கள் பாவிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மீனவர்கள் தொழிலுக்காக பெருங் கடலுக்குச் செல்ல அனுமதிக்கும் கடற்படையினர் முஸ்லிம் மீனவர்களை அனுமதிப்பதில்லை. முஸ்லிம் மீனவர்கள் புலிகளுக்கு உதவி செய்வார்கள் என்ற சந்தேகம் கடற்படையினரிடம் வலுவாகவே இருக்கிறது.

மாறுடபுத்திரன்-கற்பிட்டி.

# வைத்தியரின் மோசடி முயற்சி!
## வாங்கிய பணத்தை கொடுக்க மறுப்பு!

(திருமலை நிருபர்)

வெளிநாடுகளிலிருக்கும் தமது உறவினர்கள் அனுப்பிய பணத்துடன் கப்பல் மூலம் யாழ் செல்வதற்காக திருக்கோணமலையை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த பெண்கள் சிலர் கந்தளாய்க்கு அருகில் வைத்து சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள். திருக்கோணமலை நீதிமன்றத்தில் இவர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டபோது வழக்கு மார்ச் 31ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடியில் வைத்து ஒரு பெண் அருகிலிருந்த டாக்டர் ஒருவரிடம் முப்பத்தொன்பதினாயிரம் ரூபாய் பணத்தையும் சில நகைகளையும் கொடுத்து தனது பத்து வயது மகளையும் பாதுகாப்புக்காக ஒப்படைத்தாராம். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்றும் திருக்கோணமலையில் பணிபுரிவதாகவும் கூறிய டாக்டர் அந்தப்பெண்ணின் பல உறவினர்கள் தனக்கு நன்கு அறிமுகமானவர்கள் என்றும் கூறிக் கொண்டாராம். கைப்பட இரு இடத்து விலாசங்களையும் கொடுத்தாராம்.

கைதான பெண் வெளியே வந்து டாக்டரிடம் சென்றபோது, சம்பந்தமற்ற கதைகளையெல்லாம் கதைத்து பணத்தைக் கொடுக்க மறுத்திருக்கிறார். வேறு சிலர் தலையிட்டு பயனற்றுப் போனபின் மேலதிகாரியிடம் புகார் செய்யப்பட்ட பிறகு பணத்தைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார். அதுவும் பத்துவயது மகளை ஒருநாள் வைத்திருந்து கொழும்பில் அவர்களது உறவினர்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்த செலவாக எண்ணாயிரம் ரூபாவைக் கழித்துக் கொண்டு! புத்திசாலி டாக்டர்!


## COMPUTER CLASSES



O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விஷேட
விடுமுறை கால வகுப்புகள்

வகுப்பு நேரங்கள்
உங்கள் வசதிக்கேற்றவாறு
ஒழுங்கு செய்யப்படும்

- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

தொடர்பு: M. ROY
75, கல்பொத்த வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு 13.

GRAYON


## நீத்தார் நினைவு

மலர்வு: 01-01-1964 உதிர்வு: 29-01-1989



நெடுந்தீவு மேற்கு
5ம் வட்டாரம்
தருமலிங்கம் குமாரநாதன்

ஒருதாயின் உந்தியிலே
ஒன்பதின் மேல் மதி தங்கி
எழிலுதிரும் திருவுருவாய்
எம்மிடையே நீ உதித்தாய்!
அன்னை மடி தான் தவழ்ந்து
அவளூட்டும் பாலமுதை
இன்புற்றே பருகி நிதம்
அன்புருவாய் நீ வளர்ந்தாய்!
பல்கலையும் கற்றுணர்ந்து
பகலவன் போல் நீ வளர்ந்தாய்!
பருவ எழில் பூத்து இளந்
திருவுருவை எய்தி எம்முன்
பவனி வரும் வேளையிலே
பரிதவிக்க எமைவிட்டுப்
பறந்தோடி மறைந்தனையே
பாங்கிலுயர் பைந்தமிழே!
குமாரநாதன் என்னுமெங்கள்
குணக்குன்றே உனை நினைந்து
குவலயம் உள்ள மட்டும்
குளமாகும் எம் கண்கள்!

என்றும் உன் நினைவுடன்
ஏங்கிநிற்கும் உற்றாரும் பெற்றாரும்
ஊராரும் உறவினரும்.




கலை அலங்கார வகுப்புக்கள்
- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கைநெறி

ஆரம்பம்:15-02-97
FASNAZ BEAUTY SALON
இல. 142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை
கொழும்பு-06.
தொலைபேசி: 589457

BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்
மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க
பெயர்:............................
விலாசம்:..........................
BRIGHT BOOK CENTRE (PVT)LTD
S-27, FIRST FLOOR, P.O BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL:434770

வெளிவந்துவிட்டது!
புதிய பாடத்திட்டத்திற்கமைய குறிப்புகளும்
விரிவான வினா-விடை அடங்கலாக

| | |
|---|---|
| விஞ்ஞானம் ஆண்டு 11 | -ரூ 73/- |
| விஞ்ஞானம் ஆண்டு 10 | -ரூ 77/- |
| விஞ்ஞான விளக்கம்: ஆண்டு 10, 11 | -ரூ 32/- |
| விஞ்ஞானச் சுருக்கம் ஆண்டு 9, 10, 11 | -ரூ 23/- |

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
ஆக்கம் - ஆ. யோகராஜா
தொடர்பு - A. JOGARAJAH
90/1, Christuraja Mw,
Nayakakanda,
HENDALA, WATTALA.

ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

## விளம்பரப் பகுதி

COMPUTER வகுப்புக்கள்
தனித்தனியாக கற்பிக்கப்படும்.
INDIVIDUAL CLASSES
O/L, A/L மாணவ மாணவியர்களுக்கும், பட்டதாரி மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் அவரவர்க்கு ஏற்றபடி கற்பிக்கப்படும்.
CONTACT:
ICS COMPUTER CENTRE
32/1, GALLE ROAD, DEHIWALA.

UNION
யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030



மலையாள மாந்திரீக சக்தி



சாஸ்திரம் இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம், மலையாளத்தின் மகத்துவம் மாந்திரிகம். மாந்திரீகத்தின் அரசர் பி.கே.சாமி அவர்கள். மாயா ஜால வித்தையல்ல மனோநிலையை மயங்கச் செய்யும் மாத்திரையும் அல்ல. இது மாந்திரீக சக்தியின் மகிமை. ஜாதகம், இது விதியின் நிர்ணயம். நிர்ணயிக்கப்பட்ட விதியின் விலாசத்தை படம் பிடித்து காட்டுவது மாந்திரிகம். பிறப்பின் பயன் இறப்பு வரை. அது விதியின் தன்மை. அதை மாற்றி அமைப்பது மதி. அதற்கு உறுதியாக இருக்கிறார் மாந்திரீக மாமன்னர் பி.கே.சாமி அவர்கள். பிரிந்த காதல் ஒன்று சேர, பிரிந்து சென்றவரை அழைப்பித்து எடுக்க, இருவருக்கும் திருமணம் நடைபெறாதென முடிவெடுத்த திருமணம் நடைபெறவும், ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என முடிவெடுத்து வாழ, திடீர் வியாபார விருத்தி அடைய, தீராநோய்களை தீர்த்துக் கொள்ள, வீடு வளவு பாதுகாப்பு செய்ய, சூனியங்களை அகற்றி பழி அடிக்க, செவ்வாய் தோசம் நிவர்த்தி பெற, அதி விசேடமாக வெளிநாட்டவர்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் பிரச்சினைதீர 3 நாளில் அவ்வவ் ஊரில் எமது அங்குள்ள நிர்வாகம் மூலமாக தங்களுக்கு பாசல் உடன் அனுப்பப்படும். அத்துடன் பிறந்த திகதி, மாதம், இவைகளை அறிவித்து ரூ.1500 அனுப்பி வைத்தால் 30 நிமிடத்தில் உங்கள் ஆயுள் ஜாதகத்தை கண்ணாடிபோல தெட்டத் தெளிவாக கணித்து அனுப்பிவைப்போம்.

தொடர்புகளுக்கு-

தலைமை காரியாலயம்
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம்
(மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பெக்ஸ்-342464

உப காரியாலயம்
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம்
(மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
NO. 33, DAILY FAIR BUILDING
NUWARA - ELIYA.
நுவரெலியா.
தொலைபேசி வரிசைகள்:
052.2508, 3336, 3570, 3093
பெக்ஸ்- 0523336

எந்த மாத கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் உச்சாட்ட பூஜை காலை 09 மணி முதல் மாலை 06 மணி வரை விஷேச பூஜையில் கலந்து குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். கேட்டபடி கேட்டவரம் தரும் தேவி ஸ்ரீ துர்க்கை அம்மனே. மாந்திரீகத்திலும் ஜோதிடத்திலும் தனக்கென ஒரு தனி இடத்தை பெற்ற ஒரே நிறுவனம் எமது பி.கே.சாமி அசோசியேட் வரையறுக்கப்பட்ட பிரைவட் நிறுவனமே.

குறிப்பு-1.
எமது அனைத்து தொலைபேசி எண்களும் தொடர்பில் இருந்தால் தாங்கள் எம்முடன்; PAGER மூலம் தொடர்பு கொள்ளலாம்.
PAGER CENTRE NO-TEL 588407-PAGER NO-972
நேரில் அப்பாயின்ட்மெண்ட் பெற்று சந்திக்கும் நேரம்
காலை 9மணி முதல் 12.00மணி வரை மாலை 3மணி முதல் 6.30 மணிவரை.

குறிப்பு-2
வெளிநாட்டில் உள்ளவர் எமது சேவையை அறிந்துகொள்ள வெளிநாட்டு
COMPUTER INTERNET, NO., E/MAIL/ SAMY 1.2 @SLT.LK, WWW LGO SLT.LK
வெள்ளிக்கிழமை விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தொடராய் விழும் விமானங்கள்

மூன்று வார காலத்திற்குள் தனது மூன்று விமானங்களை தொடராக இழந்திருக்கிறது விமானப்படை.

மூன்று விமானங்களின் மொத்தப் பெறுமதி கொஞ்ச நஞ்சமல்ல: குறைந்த பட்ச மதிப்பீட்டின்படி 30 கோடி ரூபாய்கள்.

மூன்று வாரத்துக்குள் மூன்று விமானங்களைத் தொடராக இழந்தமை இலங்கை விமானப்படை வரலாற்றில் இதுதான் முதற்தடவை.

மூன்றாம் கட்ட ஈழப் போரை புலிகள் பிரகடனம் செய்த பின்னர் இன்றுவரை ஒன்பது விமானங்களையும், இரண்டு ஹெலிக்கொப்டர்களையும் விமானப்படையினர் இழந்துள்ளனர். மொத்தம் பதினொரு இழப்புக்கள்.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் விமானப் பண்டயினருக்கு முதலாவது பேரிழப்பை ஏற்படுத்தி வைத்தது புலிகள்தான். அதுவும் தொடர் இழப்புத்தான். அடுத்தடுத்து இரண்டு நாட்களில் இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப் பட்டன.

28 ஏப்ரல் 1995 முதலாவது அவ்ரோ புலிகளின் குறியில் மாட்டியது. மறுநாள் 29 ஏப்ரல் 1995ல் மற்றுமொரு 'அவ்ரோ' புலிகளின் குறிக்கு இரையானது.

**முதல் இழப்பே தொடர் இழப்பாக இருந்தமையாலோ என்னவோ; அதன் பின்னர் பல தொடர் இழப்புக்களை விமானப்படை சந்தித்துவருகிறது என்பது "சென்டிமெண்டான" விஷயம் போலாகி விட்டது.**

மூன்றாம் கட்ட ஈழப்போரில் இதுவரை மூன்று தொடர் இழப்புக்களை விமானப் படை சந்தித்துள்ளது.

1995 ஏப்ரல் மாதம் 28, 29களில் ஒரு தொடர் இழப்பு. பின்னர் 1995 நவம்பர் 18ல் 'வை-8' விமானம் ஒன்று காங்கேசன் துறையில் புலிகளின் 'ஒலிகன்' பீரங்கியால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதையடுத்து நவம்பர் 22ம் திகதி 'அண்டநோவ் 32' விமானம் ஒன்று காங்கேசன்துறைக் கடலுக்குள் விழுந்தது.

அதன் பின்னர் ஏற்பட்ட தொடர் இழப்பு சமீபத்தில் ஏற்பட்டதுதான்.

ஜனவரி 6ம் திகதி 1997 அன்று உளவு விமானம் காணாமல் போனது. ஜனவரி 20ம் திகதி 'வை-12' விமானம் காணாமல் போனது. மறுநாள் 21ம் திகதி 'கிஃபிர்' போர்விமானம் நீர்கொழும்பு கடலுக்குள் விழுந்தது.

நீர்கொழும்பு கடலுக்கு மேலாகப் பறப்பதென்றால் இனிமேல் விமானிகளுக்கு கலக்கமாகத்தான் இருக்கப்போகிறது. மூன்றாம் கட்ட ஈழப்போரில் மொத்தம் இரண்டு விமானங்களை நீர்கொழும்பு கடல்தான் உள்ளே இழுத்து வைத்திருக்கிறது.

**மூன்றாம் கட்ட ஈழப்போரில் வீழ்ந்த ஒன்பது விமானங்களில் நாலு விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இழக்கப்பட்ட இரண்டு ஹெலிக்கொப்டர்களில் ஒன்று புலிகளால் சுட்டு வீழ்த்தப் பட்டது.**

புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட விமானங்கள் வருமாறு: 28,29 ஏப்ரல் 1995 இரண்டு அவ்ரோ விமானங்கள். பலாலி விமானத் தளத்துக்கு தரைப்பாதையின் மேலாகப் பறந்து செல்லும்போது விமான எதிர்ப்பு ஆயுதத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

படையினரின் 'முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக்கைக்குப் பதிலடியாக 14 ஜூலை 1995ல் 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் 'புக்காரா' விமானம் புலிகளின் விமான. எதிர்ப்பு படைப்பிரிவால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பலாலி விமானத்தளத்துக்கு தரைப் பாதை மேலாகச் சென்று இறங்காமல், கடற்பாதை மேலாகவே விமானப்படை விமானங்கள் செல்லத் தொடங்கின. காங்கேசன்துறை கடற்பகுதிக்கு மேலாகச் சென்று பலாலி விமானத்தளத்தில் தரையிறங்குவது பாதுகாப்பானது. ஆயினும் காங்கேசன்துறை கடற்பகுதியில் தாழப் பறக்கத் தொடங்கியே விமானத் தளத்தில் தரையிறங்குவது வழக்கமாக இருந்தது.

அதனைக் கவனித்துக் கொண்ட புலிகள் கடலில் காத்திருந்தனர். 1995 நவம்பர் 18ம் திகதி 'வை-8' விமானம் காங்கேசன்துறை கடற்பகுதியில் தாழப் பறந்து விமானத் தளத்தில் தரையிறங்கத் தயாரானது. புலிகள் ஒலிகன் பீரங்கியால் தாக்கினார்கள். விமானம் கடலுக்குள் விழுந்தது.

அதேபோல 'எம்.ஐ.17' ஹெலிக்கொப்டரும் வெற்றிலைக்கேணி முகாமை நெருங்கி தாழப் பறக்கத் தொடங்கியபோது புலிகளால் தாக்கப்பட்டது. 22 ஜனவரி 1996ல் 'எம்.ஐ.17' ஹெலிக்கொப்டர் சுடப்பட்டு கடலுக்குள் விழுந்தது.

தம்மால் சுட்டு வீழ்த்தப்பட்ட அனைத்துக்கும் புலிகள் உடனடியாக உரிமை கோரியுள்ளனர்.

இதேவேளை சமீபத்தில் ஏற்பட்டுள்ள மூன்று விமான இழப்புக்களுக்கும் புலிகளுக்கும் சம்பந்தம் இருக்கக்கூடுமோ என்று சிலரால் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

வெறும் பரபரப்புக்காக எவ்வித ஆய்வுமில்லாமல் அவ்வாறான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

எதிர்க்கட்சி சார்பான செய்தியாளர்கூட மூன்று விமானங்களையும் வீழ்த்தியது தாம்தான் என்று புலிகள் உரிமை கோரினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றுதான் எதிர்பார்த்தனர்.

உள்ளூராட்சித்தேர்தல் வரும்போது "மூன்று விமானங்களை புலிகளிடம் இழந்து விட்டது அரசாங்கம்" என்று கூறுவது பிரசாரரீதியில் இலாபகரமானதுதான்.

இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்தது என்றால் விமான ஓட்டிகளின் திறமை இன்மையும் ஒரு காரணமோ என்று மக்கள் சந்தேகிப்பார்களே தவிர அரசாங்கத்தின்மீது குறை சொல்லமாட்டார்கள்.

எதிர்க்கட்சிக்கும், எதிர்க்கட்சி சார்ந்த செய்தியாளர்களுக்கும் இப்போது புலிகள்மீது கெட்ட கோபம் வந்திருக்கும். வீழ்த்தினார்களோ இல்லையோ வீழ்த்தியதாக உரிமை கோரித் தொலைத்திருக்கலாமே என்றுதான் நினைப்பார்கள்.

மக்களுக்கு சரியான செய்திகள், தகவல்கள் கொடுக்கவேண்டும் என்பதைவிட, செய்திகளையும், நிகழ்வுகளையும் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப திரித்துக் கூறுவதற்கே விரும்புகின்றனர்.

புலிகளைப் பொறுத்தவரை தம்மால் மேற்கொள்ளப்படாத நடவடிக்கைகளுக்கு உரிமை கோருவதில்லை. தம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சர்வதேச அளவிலோ உள்நாட்டிலோ கெட்ட பெயரை சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளையும் உரிமை கோருவதில்லை. அதுதான் இதுவரையில் புலிகளின் பாணி.

புலிகள் உரிமை கோராத தாக்குதல்கள் எப்படிப்பட்டவை? தனிநபர்களை இலக்காகக் கொண்ட சில நடவடிக்கைகள், பொதுமக்களும் பலியாகக் காரணமான தாக்குதல்கள் போன்றவைதான் உரிமை கோரப்படாதவை.

**எனவே அவற்றையும் விமானத் தாக்குதல்களையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. விமானங்களைத் தாக்கினால் தாராளமாக உரிமை கோரலாம். யாருமே கண்டிக்கமாட்டார்கள். பயணிகள் சென்றுகொண்டிருக்கும் விமானங்களைத் தாக்குவது மட்டுமே கண்டனத்துக்குரியதாக அமையும்.**

ஆனால் இங்கு வீழ்ந்தது அனைத்தும் படையினர் பயன்படுத்தும் விமானங்கள். மற்றும் உளவு, போர் விமானங்கள்.

மேற்படி மூன்று விமானங்களும் புலிகளால் வீழ்த்தப்பட்டதாக உரிமை கோரியிருந்தால் எப்படிப்பட்ட விளைவுகள் தோன்றியிருக்கும்?

1. அரசாங்கத்துக்கு பலத்த இழப்பை புலிகள் ஏற்படுத்திவிட்டதாக கருதப்படும் என்பதால், அரசின் 'இமேஜ்' பாதிக்கப்படும்.

2. சர்வதேச அளவில் புலிகளின் தாக்குதல் பலம் வியக்கப்பட்டிருக்கும்.

3. படையினர் மத்தியில் உளவியல் ரீதியான தாக்கம் ஏற்பட்டிருக்கும். விமானப் படை விமானிகள் மத்தியிலும் தாக்கம் ஏற்பட்டிருக்கும்.

ஆக, விமானங்கள் வீழ்ந்தமைக்கு புலிகள்தான் காரணம் என்றால் அதனை உரிமை கோராதிருப்பதற்கு எவ்வகையான காரணங்களும் இல்லை.

அதுதவிர இராணுவ ரீதியில் யார் மேலோங்குவது என்ற பலப்பரீட்சையே இப்போது நடைபெற்று வருகிறது. விமானங்களை வீழ்த்தியிருந்தால் புலிகளுக்கு இராணுவரீதியிலும், பிரசாரரீதியிலும் மிகச் சாதகமான அம்சமாகவே அமைந்திருக்கும். உடனடியாக உரிமை கோரியிருப்பார்கள்.

ஆனால் ஒன்று, விமானங்களை வீழ்த்தாமல்கூட புலிகள் உரிமை கோரியிருந்தால்கூட உலக அளவில் அது நம்பப்பட்டிருக்கும்.

ஆயினும் அதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. உளவு விமானமும், வை-12 விமானமும் கடலில் வீழ்ந்ததா காணாமல் போனதா என்பது உடனடியாகத் தெரியாது. அந்நிலையில் தாக்கி வீழ்த்தியதாக உரிமை கோரிவிட்டால், குறிப்பிட்ட விமானம் ஒரு வேளை திசைமாறிப்போய் தரையிறங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டால் என்னாகும்? உரிமை கோரியது பொய்யாகிவிடும். அதனால் தனது இராணுவரீதியான செய்திகளின் நம்பகத்தன்மையை குறிப்பிட்ட இயக்கம் இழக்க வேண்டியிருக்கும்.

பொய்யாக உரிமை கோரவேண்டுமானால் குறிப்பிட்ட விமானங்கள் உண்மையாகவே வீழ்ந்துவிட்டதா என்று அறிந்தபின்னர்தான் உரிமை கோரவேண்டும். எனவே உடனடியாக உரிமை கோரமுடியாது.

அதுதவிர சுட்டு வீழ்த்தியதாக உரிமை கோருவதாக இருந்தால், எந்த இடத்தில் வைத்துச் சுடப்பட்டது என்பதையும் தெரிவித்தாக வேண்டும். அவ்வாறு சுடப்பட்டதாகத் தெரிவித்த ஒரு பகுதியுடன் தொடர்பே இல்லாத வேறு பகுதியில் வீழ்ந்த விமானமோ அதன் பகுதியோ கண்டுபிடிக்கப்பட்டாலும் உரிமை கோரியது பொய்யாகிவிடும்.

சமீபத்தில் தொடராக வீழ்ந்த விமானங்களில் கிஃபீர் விமானம் வீழ்ந்தது மட்டுமே எங்கே விழுந்தது, எப்போது விழுந்தது என்ற விபரங்கள் திட்டவட்டமாக தெரிந்தன. ஏனைய இரண்டு விமானங்களின் விடயத்தில் இதுவரை அவை எங்கே விழுந்தன என்ற விபரங்கள் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

எனவே தம்மால் வீழ்த்தப்படாத விமானங்களை வீழ்த்தியதாக உடனடியாக உரிமை கோரமுடியாது. விமானங்கள் வீழ்த்தப்படும்

## வருமா புலிகளின் கப்பல்?

விடயத்தில் உடனடியாக உரிமை கோரப்படுவது மட்டுமே உண்மையானதாக இருக்கும்.

புலிகளும் தம்மால் சுடப்பட்ட விமானங்களுக்கு உடனடியாக உரிமை கோரியே வந்துள்ளனர்.

அதேசமயம் வீழ்ந்த விமானங்களோடு புலிகளைத் தொடர்புபடுத்தி முன்னரும் சில பத்திரிகைகள் சந்தேகங்கள் கிளப்பியிருந்தன.

1995 செப்டம்பர் மாதம் 13ம் திகதி நீர்கொழும்பு கடற்பகுதியில் அண்டநோவ் 32 விமானம் வீழ்ந்தது. அதே கடற்பகுதியில் மற்றொரு அண்டநோவ் 32 விமானம் 1995 நவம்பர் 22ம் திகதி வீழ்ந்தது.

அவை புலிகளால் தாக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகங்கள் கிளப்பப்பட்டன. இயந்திரக் கோளாறே காரணம் என்று பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது. புலிகள் அவற்றுக்கு உரிமை கோரவில்லை.

அதேவேளை 1995 ஜனவரி 22ம் திகதி எம்.17 ஹெலிக்கொப்டர் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. புலிகள் உரிமை கோரினர். ஆனால் ஹெலிக்கொப்டர் புலிகளால் கடத்தப்பட்டதாக ஒரு வதந்தியும், ஹெலிக்கொப்டரில் சென்ற படையினர் புலிகளின் பிடியில் உயிரோடு இருப்பதாகவும் சில ஆங்கிலப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

"ஹெலி நொறுங்கி விழுந்துவிட்டது. படையினர் யாரும் உயிருடன் தப்பவில்லை." முரசு மட்டுமே தகவல் வெளியிட்டிருந்தது. பின்னர் அதுதான் உண்மை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அப்படியானால் சுடப்படாமல் விமானங்கள் விழுவதற்கு என்ன காரணம்?

இயந்திரக் கோளாறு மட்டும்தான் காரணம் என்று சொல்வது பாதிதான் மெய். விமானிகளின் அனுபவமின்மையும், பதட்டமும் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையும் படை அதிகாரிகளும் சென்ற ஹெலிக்கொப்டர் தரையிறங்கியது தொடர்பான விசாரணைகளில் பெறப்பட்ட தகவல் என்ன?

**ஹெலிக்கொப்டரில் வழமையாக ஏற்படும் சிறு இயந்திரக் கோளாறுதான் ஏற்பட்டது. ஆனால் விமானி பதட்டமாகி பயந்துபோய் திடீரென்று தரையிறக்கிவிட்டார். பறந்து கொண்டே அந்தக் கோளாறை சீர் செய்து கொண்டு சென்றிருக்கலாம் என்பது தெரிய வந்துள்ளது.**

ஒரு ஹெலிக்கொப்டரில் ஏற்படும் சிறு கோளாறு கூட சீர்செய்ய முடியாததாக உள்ளபோது, நவீன தொழில்நுட்ப விமானங்களில் ஏற்படும் கோளாறுகளை எப்படிச் சீர்செய்யப் போகிறார்கள்?

விமானிகளின் பதட்டத்துக்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

**ஒன்று: போதிய பறப்பில் ஈடுபட்ட அனுபவமின்மை.**

**இரண்டு: ஏற்கனவே விமானங்கள் வீழ்ந்திருப்பதால் ஏற்படும் நம்பிக்கையீனங்கள் தரும் அச்சம்.**

உதாரணமாக கிஃபீர் விமானத்தைச் செலுத்திய விமானிக்கு விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏதோ ஏற்பட்டதாகத் தெரிந்து விட்டது. உடனே அவரது நினைவில் இயந்திரக் கோளாறை சீர் செய்வதைவிட, முன்னரும் விமானங்கள் விழுந்த நினைவுதான் மனதில் தோன்றியிருக்கும். அதனால் உடனடியாக தான் தப்பிக் கொள்வதற்கு உரிய வழியைத் தேடியிருக்கலாம். அதனால் உயிர் தப்பி தரையிறங்கிவிட்டார்.

**கிஃபீர் விமானம் தாக்கப்படவில்லை என்பதற்கு மற்றொரு ஆதாரம்- அது வெடிக்காமல் கடலில் வீழ்ந்துள்ளது. சுடப்பட்டிருந்தால் வானத்தில் வெடித்துச் சிதறியிருக்கும். கடலில் அதன் பாகங்கள் விழுந்திருக்கும்.**

விமானத்தில் பறவை மோதியதாக சொல்லப்படுகிறது. அது எந்தளவுக்கு சாத்தியம் என்பது கேள்விதான். ஒரு பறவை மோதினால் தடுமாறும் அளவுக்கு பலவீனமானதல்ல கிஃபீர் விமானம் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதேபோல ஆளில்லாத உளவு விமான விடயத்திலும் தொழில் நுட்பக் கோளாறு என்பது அதனை வழி நடத்தியவர்கள் செய்த தவறால் ஏற்பட்டிருக்கலாம்.

ஆளில்லாமல் பறந்த விமான விடயத்தில் புலிகளும் முதலில் கொழும்பில் வெளியான செய்திகளையே கூறினர். பூநகரிப் பகுதியில்தான் அந்த விமானம் தரையோடு மோதி விழுந்தது என்று 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

ஆனால் தற்போது கிடைத்துள்ள தகவல்கள் அந்த உளவு விமானம் பாக்கு நீரிணைக் கடலில் விழுந்துள்ளதாக தெரிவித்துள்ளன.

ஆளில்லாமல் பறக்கும் உளவு விமானத்தில் இரண்டு வகை உள்ளன.

ஒன்று, பறந்துகொண்டே கீழே உள்ள நடமாட்டங்களைப் படம் பிடித்துக் கொண்டு திரும்பிவரும்.

இன்னொரு ரகம்- அது படம் பிடித்துக் கொண்டிருக்கும்போதே, பிடிக்கப்படும் படங்களை உடனுக்குடன் குறிப்பிட்ட தொடர்பு மையத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கும்.

**எனினும், கீழே ஒரு வாகனம் செல்லுமானால் அதன் உள்ளே இருப்பவர்களின் முகங்களையெல்லாம் துல்லியமாகப் படம்பிடிக்கும் என்பது உண்மையல்ல. அது தவிர உருமறைப்புச் செய்யப்பட்ட முகாம்களை அதனாலும் கண்டுபிடிக்க முடியாது. காட்டுப் பகுதிகளுக்குள் உள்ள நடமாட்டங்களையும் துல்லியமாக இனம் காண இயலாது.**

அதாவது, நம்நாட்டு போர்ச்சூழலுக்கு மத்திய கிழக்கு போர்முனைகளில் உபயோகமான போர் விமானங்களோ, உளவு விமானங்களோ கூடுதல் பயனளிக்க மாட்டா.

எனினும் படையினரின் உற்சாகத்தை அதிகரிக்கச் செய்ய நவீன தொழில் நுட்ப விமானங்கள் வாங்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் அனுபவம் பெற்று விபத்தில்லாமல் கையாள நீண்டகாலம் தேவைப்படும்.

புலிகளின் ஆயுதக் கப்பலை தேடும் முயற்சியிலேயே உளவு விமானமும், வை-12 விமானமும் விழுந்துள்ளன.

பாரிய தாக்குதல்களுக்கும் பின்னர் புலிகள் தமது ஆயுதக் கப்பலை தருவிப்பது வழக்கம் என்ற ஊகத்தில்தான் அந்த சந்தேகம் எழுந்திருக்கலாம்.


**ஆனால் இந்தியக் கடற்படையும், இலங்கைக் கடற்படையும் மிக விழிப்பாக இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை கடற்பகுதிக்குள் தமது ஆயுதக் கப்பலை புலிகள் தருவிக்கமாட்டார்கள்.**

அதுதவிர கப்பல் வருகிறது என்று செய்தியைச் சொல்லிவிட்டு தேடத் தொடங்குவதால், அப்படிக் கப்பல் உண்மையாக புறப்பட்டிருந்தாலும் இடைவழியே திரும்பிச் சென்றுவிடும். தகவல் தொடர்பு சாதனம் மூலம் செய்தி பறந்துவிடும்.

படையினர் நோக்கம் புலிகளின் ஆயுதக் கப்பலை மடக்குவதா? அல்லது ஆயுதக் கப்பலை தருவிக்கும் எண்ணம் இருந்தால் அதனை புலிகள் கைவிடச் செய்வதா? பின்னதுதான் என்று தோன்றுகிறது. ■

நாரதர்

### மூன்றாம் கட்ட ஈழப்போரில் அழிந்து போன ஆகாயப்படை விமானங்கள்




## அதிரடி அய்யாத்துரை



பீட்டர் கெனமன் மறைந்துவிட்டார். பீட்டர் கெனமன், கொல்வின் ஆர்.டி.சில்வா, என்.எம்.பெரேரா- இடதுசாரி இயக்க மும்மூர்த்திகள். ஆரம்ப காலத்தில் இன ஒற்றுமை பற்றி மூச்சுவிடாமல் பேசிய புண்ணியவான்கள். 1972ல் தமிழ் மக்களுக்கு எதிரான புதிய அரசியலமைப்பைத் தயாரித்த செம்மல் கொல்வின். அதற்கு 'ஆமா' போட்ட சூரர்கள் மற்ற இருவர்.

அந்த அரசியலமைப்பை எதிர்த்துத்தான் கூட்டான கட்சி தனி ஈழம் கேட்டு வெளுத்து வாங்கியது. அந்த மும்மூர்த்திகள் அங்கம் வகித்த ஐக்கிய முன்னணி ஆட்சிதானுங்கோ தமிழ் இளைஞர்களின் எழுச்சிக்கு நெய் வார்த்தது. அந்த எழுச்சியை கொம்பு சீவி விட்டுத்தான் கூட்டான கட்சித் தலைவர்கள் 'தளபதி', 'சிங்கம்' என்றெல்லாம் பட்டம் பெற்றவை. 77ல் வெற்றிகளும் குவித்தவை. தாங்கள் வளர உதவியதுக்காக நன்றி சொல்ல வேண்டியது கூட்டான கட்சியின் கடமைதானே? அதனால்தான் கூட்டான கட்சித் தலைவர் அறிக்கை விட்டவர். "கெனமனின் மறைவு சிறுபான்மை மக்களுக்கு பேரிழப்பு." அடிடாசக்கை எண்டானாம். அந்தக் காலத்திலை இதே கெனமனை எதிர்த்து சிங்கமாக கர்ஜித்ததை சனம் என்ன நினைவில் வைத்திருக்கப் போகுதோ? இடதுசாரிகளும் சேர்ந்து போட்ட விதைகள்தானே யுத்தமாக வெடிச்சு சனத்தை நாறவைக்குது. இவை அரசியல் நாகரிகம் காட்டிக் கொண்டிருக்கினமாம் நாகரிகம்!

**96ம்** ஆண்டுப் பொங்கலுக்கு ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு ஒரு பொங்கல் பரிசு கொடுத்தவர்- ஞாபகமிருக்கோ? இலங்கை வானொலியில் வர்த்தக சேவையை தனியாக நடத்த அனுமதி கொடுத்ததுதான் பொங்கல் பரிசு. 97ம் ஆண்டு பொங்கல் முடிந்த கையோடு வந்திருக்கிறது அறிவிப்பு: தமிழ் வர்த்தக சேவை நேரத்தில் நாலு மணிநேரம் குறைப்பு! பரிசு எண்டால் என்ன அர்த்தமுங்கோ? தேவைப்படுற நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக திருப்பி எடுக்கலாம் எண்டு அர்த்தமோ? தமிழ் சேவைக்குள் உள்ள ஒரு சிலர்தான் பறிப்புக்கு தூபம் போட்டவையாம். வர்த்தக சேவை மூலமாக ஒரு சில அறிவிப்பாளர்கள் பணம் சம்பாதிப்பது பிடிக்கவில்லையாம். வாழ்க நம்மவர் ஒற்றுமை!

**யாழ்ப்பாணத்தில்** தபால் பகுதியினர் ஒரு அறிவிப்பு விட்டிருக்கினம். கடிதங்களுக்குள் வேறு ஒண்டும் வைக்கக்கூடாது எண்டு சொல்லியிருக்கினமாம். உள்ளே வைக்கக்கூடாத பொருட்களில் விபூதியும் அடக்கம். வெடிமருந்தோ விபூதியோ எண்டு எப்படிக் கண்டுபிடிக்கிறது? அதுதான் அப்படி ஒரு உத்தரவாக்கும். இனிமேல் விபூதியை தனிப் பாசலாகத்தான் அனுப்பவேணும். கிடைக்கிறதுதான் லேட்டாகும்.

**யாழ்ப்பாணத்தில்** உள்ள அரச அதிகாரி ஒருவர் மாற்றப்பட்டுவிட்டதாக செய்திகள் வந்தது தெரியும்தானே? (முரசில் அல்ல). அப்படியொரு மாற்றமும் நடக்கவில்லை. குறிப்பிட்ட அதிகாரி பல கடைகள் நடத்திக் கொண்டு லாபத்தை ஆங்காங்கே பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டு பந்தாவாகத்தான் இருக்கிறார். அவர் தொடர்பான விபரங்கள் மட்டும் ஒரு பகுதியினரால் திரட்டப்பட்டு வருகிறதாகக் கேள்வி.

"தலைநகரில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடமாட்டோம்", எண்டு 'ஜனநாயகப் பாதையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட' தமிழ்க் கட்சிகள் அறிவிச்சிருக்கினம். அறிவிச்சது கிடக்கட்டும். அதற்கு சொல்லியுள்ள காரணம்தான் சுவையாக இருக்கு. அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு இரண்டின் ஆதரவும் தேவையாம். அதுதான் போட்டியிட முன்வரவில்லையாம். பார்த்தியளோ பெரும் தன்மையை?! இவை போட்டியிட்டிருந்தால் ஆளும் தரப்புக்கும், எதிர்த்தரப்புக்கும் வாக்குப் போடவே ஆளிருந்திருக்காது (?) எல்லா வாக்குகளும் இவையுடைய கூடைக்குள் விழுந்திருக்கும். ஹி.ஹி.ஹி.

**அயல்நாட்டு** வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பானவரை தமிழ்க் கட்சிகள் சார்பில் சென்ற சிலர் வெறுப்பேத்திப் போட்டினமாம். 'தலையிடுங்கோ, தலையிடுங்கோ' எண்டு அவை கேட்க, 'மாட்டோம், மாட்டோம்' எண்டு அவர் தலைதான் ஆடியதாம். அப்படியும் விடாமல் அறுவை நடத்திப் போட்டாராம் ஒரு கட்சிப் பிரமுகர்.

**அயலக** வெளிநாட்டமைச்சருடன் தமிழ்க் கட்சிகள் என்னென்ன பேசியவை எண்ட விஷயம் அதிகாரத் தரப்பாருக்கு உடனடியாகச் சொல்லப்பட்டதாம். அந்தளவுக்கு 'அண்டர்ஸ்ராண்டிங்' இருக்குதுங்கோ.

**"பொறு**மைக்கும் ஒரு எல்லை உண்டு" எண்டு சொல்லிப் போட்டார் கலைஞர் எண்டு நண்பர் ஒருவர் துள்ளிவந்து சொன்னார். "எது எல்லையென்று சொல்லியிருக்கிறாரோ? இல்லைத்தானே!" எண்டு நான் சொன்னதும் நண்பரின் முகம் கறுத்துப் போச்சு. உண்மை உதைக்கும்தான்.

**கவிதைபோல** அமைந்த ஜரின் நாட்டுப் பழமொழி ஒன்று.

**"உன் மரணச் செய்தியை**
**நம்பாதவர் இருவர்:**
**ஒருவர்: உன்னை வெறுப்பவர்**
**மற்றவர்: உன்னை நேசிப்பவர்"** ■



படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் தொடர்

## அற்புதன் எழுதுவது

114

# உரும்பிராயில் பிணக் குவியல்

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட மேலும் துருப்புக்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு இந்திய அமைதிப்படைத் தளபதி திபீந்தர் சிங் புதுடில்லிக்கு அறிவித்திருந்தார்.

அந்தப் படைப்பிரிவுகள் வந்து இறங்கும்வரை காத்திருக்க முடியாது. காத்திருந்தால் தமது பிரதான தளங்களுக்குள் புலிகள் ஊடுருவி விடலாம் என்று நினைத்தனர் இந்தியப் படை அதிகாரிகள்.

யாழ் கோட்டை முகாமில் இருந்த இந்தியப் படையினரை முன்னேறவிடாமல் புலிகள் கடும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

அதனால் பலாலியிலிருந்து முன்னேறும் துருப்புக்கள்தான் யாழ் கோட்டை இராணுவ முகாமை சென்றடைய வேண்டும்.

அந்தத் துருப்புக்கள் முன்னேறி கோட்டைக்குச் செல்லும்வரை கோட்டையில் இருந்த துருப்புக்கள் தற்காப்புத் தாக்குதல் மட்டுமே நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது.

பலாலியில் இருந்து தரைப்பாதை வழியாக முன்னேறும் துருப்புக்களில் ஒரு பகுதியினர் கடற்கரையோரப் பகுதிகள் ஊடாகவும் யாழ் நகரை நோக்கி முன்னேறினர்.

இலங்கைப் படையுடன் இணைந்து இந்தியப் படை- தமிழர்களை வேட்டையாடுகிறது என்னும் பிரசாரம் தீயாகப் பரவிவிடும்.

### 'பஸ்செங்கியா'

எனினும் அக்டோபர் 16ம் திகதி உரும்பிராயில் நடைபெற்ற ஒரு மோசமான சம்பவத்தின்போது உண்மை வெளிப்பட்டது.

இந்தியப்படைக் கால சம்பவங்கள் **'முறிந்த பனை'** என்னும் நூலில் மிகத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரும்பிராயில் அக்டோபர் 16ம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக **'முறிந்த பனை'** நூலில் தரப்படுள்ள தகவல்கள் கீழே வருகின்றன:



திறந்தார். பொறுமை இழந்து போயிருந்த அவர்களுடைய நாய் வெளியே குதித்தோடியது.

அந்த ஒழுங்கையில் டாங்கி ஒன்று நின்றது. நாய் குதித்தோடிவந்த சத்தம் கேட்டதும் டாங்கியிலிருந்து சுடத்தொடங்கினார்கள். நாய் விழுந்து செத்தது. கதவைத் தாழிட்டுவிட்டு அவர்கள் மீண்டும் கட்டிலுக்கு அடியில் புகுந்து கொண்டனர்.

அச்சமயத்தில் வெளியில் நின்று பேசிக் கொண்டவர்களின் உரையாடல் அவர்கள் காதில் விழுந்தது.

சிங்களத்தில் ஒரு குரல்: **"மே பரன கெதர; கடாண்ட ஹறி அமாரு. மோட்டார் எக்க உஸ்லண்ட"** (இது பழைய வீடு, உடைப்பது கடினம், ஒரு மோட்டார் அடி)

### சூடு சூடு

16ம் திகதியில் இருந்து உரும்பிராய் வாசிகள் பலத்த ஷெல் தாக்குதலையும், துப்பாக்கிச் சூட்டையும் எதிர்கொள்ள வேண்டியதாகியது.

அக்டோபர் 18ம் திகதி ஒரு ஞாயிறு அன்று உரும்பிராயில் உள்ள இந்துக்கோயில் அருகே கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

உரும்பிராய் சந்தியில் இருந்து வடக்கே அரை மைலுக்கும் முக்கால் மைலுக்கும் இடையே வசித்துவரும் 66 வயது மனிதர்

வீட்டுக்காரர்களும், வீட்டுக்குள் அடைக்கலம் புகுந்தவர்களுமாய் அந்த வீட்டில் பதினொரு பேர் தங்கியிருந்தனர்.

வீட்டுக்குள் இருந்தவர்களை வெளியே வருமாறு இந்தியப் படை அழைத்தது. வீட்டுச் சொந்தக் காரரான பொன்னம்பலம் வெள்ளைக் கொடியை ஏந்திக்கொண்டு முன்னேவர, வீட்டுக்குள் இருந்தவர்கள் அவர் பின்னால் வந்தனர்.

**'சுடுங்கள்' என்று உத்தரவு பிறப்பிக்கப் படுவதை பொன்னம்பலம் கேட்டிருக்கிறார். அவருக்குப் பின்னால் நின்றவர்கள் தரையில் சரிந்து கொண்டிருந்தனர். அவர்களில் பஞ்சரத்னம் என்னும் பள்ளியாசிரியரும் ஒருவர். கணவர் சூடுபட்டு விழுவதைக் கண்ட மனைவி 'ஐயோ' என்று கதற, அவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பாடசாலை மாணவியர் தலைவியாக இருந்த பதினாறு வயதான பிரேமா சின்னத்துரையும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரேமாவின் தாய் திருமதி சின்னத்துரையை ஒருவாறும் சமாதானப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அந்தத் தாயின் கண் எதிரிலேயே பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த அவரின் அன்பு மகள் கொல்லப்பட்டாள்.

அவர்களின் வீடு உரும்பிராய்ச் சந்திக்கு அண்மையில் இருந்தமையால், அது அவ்வளவு பாதுகாப்பானதல்ல என்பதால் தான் தனது மனைவியையும் மகளையும் பொன்னம்பலம் வீட்டுக்கு அனுப்பிவைத்தார் சின்னத்துரை. அவர் மட்டும் தனது வீட்டில் இருந்தார்.

**சின்னத்துரையை அவரது மனைவி கடைசியாகப் பார்த்தது, அவர் சைக்கிளைத் துடைத்துக் கொண்டிருந்தபோதுதான். அவர் கடைசியாகக் கூறிய வார்த்தைகள்: "கவலைப் படாதேயும், அவங்கள் சண்டை பிடிக்க வந்தவங்கள் இல்லை. அவங்கள் அமைதி காக்கும் படையைச் சேர்ந்தவங்கள். நான் அவையளுக்கு விளங்கப்படுத்துவன்."**

மூன்று மாதங்கள் கழித்து அவருடைய எஞ்சிய எலும்புக் கூட்டைத்தான் திருமதி

அவர் கதவைத் திறந்ததுதான் தாமதம் பீரங்கி வண்டிக்குப் பின்னால் இருந்த படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ வீரனால் சுட்டுக் கொல்லப்பட்டார். பின் படைவீரர்கள் அந்த வீட்டுக்குள் புகுந்து அம்பிகாவின் தாயாரையும், பாட்டியையும் சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சம்பவத்தை நமக்கு விபரித்துச் சொன்னவர் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான ஒரு நடுத்தர வயது விதவையாவார். இனி அவரது சொந்தக் கதையைக் கேளுங்கள்:

சம்பவதினத்தன்று தங்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு அவர்கள் உரும்பிராயை விட்டு வெளியேறுவது என்று தீர்மானித்திருந்தனர்.

அந்த வீட்டிலிருந்த மொத்தம் பதினொரு பேருமே இந்தப் பெண்மணியைப் போலவே அகதிகள்தான். பிரதான வீதியில் இருந்த தங்கள் வீடுகளை விட்டுவிட்டு இங்கு வந்திருந்தனர். இப் பெண்மணியின் சொந்த வீடு சேதமாக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது.

அன்று அவர்கள் வெளியேறுவதற்கு தயாராக இருந்தார்கள். பைகளில் எல்லாவற்றையும் போட்டு நிரப்பியிருந்தனர். சப்பாத்துக்கள், செருப்புக்கள் எல்லாவற்றையும் வீட்டுக்கு வெளியே வைத்தனர்.

அப்போதுதான் ஏழு அல்லது எட்டு இந்தியப் படை டாங்கிகள் வந்து அந்த வீட்டின் முன்பாக நின்றன. அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

தங்கள் வீட்டு வாசல்வரை சத்தம் வந்து கொண்டிருப்பது அவர்களுக்குக் கேட்டது. கதவை யாராவது வந்து தட்டினால் தாங்கள் வெளியில் போய் அவர்களுக்கு எதையாவது விளங்கப் படுத்தலாம் என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

ஆனால் படையினர் ஆறு பேர்வந்து கதவை உடைத்துத் திறக்க ஜன்னல் ஊடாக இரண்டுமுறை சுட்டார்கள். உள்ளிருந்தவர்கள் பயத்தால் உறைந்து போனார்கள்.

துப்பாக்கிச் சூட்டினால் உடைந்து தெறித்த சில்லுகள் இப் பெண்மணியின் மகன், மகள் மற்றும் இன்னுமொரு பெண்ணையும் காயப்படுத்தின. பின்னர் அங்கிருந்து இந்தியப் படையினர் சென்று விட்டனர்.

அவர்கள் எல்லோரும் போய் முடிந்த

# அமைதிப்படை நடத்திய கொலை வேட்டை!

கடற்பாதையூடாக துருப்புக்களை ஏற்றிச்சென்று யாழ் நகருக்கு அருகே தரையிறக்கி அதிரடித் தாக்குதல் நடத்தவும் திட்டமிடப்பட்டது.

முன்னேறும் துருப்புக்களுக்கு உதவியாக இந்திய விமானப்படை விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தன.

### இலங்கைப் படை உதவி

யாழ் குடாநாட்டின் பூகோள அமைப்பைக் கண்டறியவும், அதற்கேற்ப இராணுவ நடவடிக்கைக்குத் திட்டமிடவும் இந்தியப் படையினர் தகவல் திரட்டிய முறைகள்:

1. பூகோள வரைபடங்கள்
2. விமானம் மூலமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.
3. உளவு நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட தகவல்கள்.
4. இலங்கைப் படையினரின் உதவி.

மிகவும் ஆச்சரியமான விடயம் நாலாவதுதான்.

எந்தப் படையினரின் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு கோரி இந்தியா தலையிட்டதோ, அதே படையினரின் உதவியை இந்தியப் படையினர் பெற்றுக்கொண்டனர்.

இலங்கைப் படையினரின் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கையை நிறுத்தச் செய்தது இந்தியத் தலையீடு.

அதே இந்தியாவின் படைகள் 'ஒப்பரேஷன் பவான்' நடவடிக்கையை ஆரம்பித்தபோது இலங்கைப் படையினரின் உதவியை தமக்கு வழிகாட்டிச் செல்லுவதற்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையில் பங்குகொண்ட இலங்கை இராணுவத்தினரில் சிலரைத்தான் தம்மோடு வழிகாட்டிகளாக இணைத்துக் கொண்டனர் இந்தியப் படையினர்.

'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கையில் முன்னேறிய அனுபவம் இருந்தமையால், எப்பாதைகள் ஊடாகச் செல்ல முடியும் என்ற விபரங்கள் இலங்கைப் படையினருக்குத் தெரிந்திருந்தது.

**இலங்கை இராணுவத்தினரில் சிலரையும் தம்மோடு இணைத்துக் கொண்ட விபரத்தை இந்தியப் படையினர் மிக இரகசியமாகவே வைத்திருந்தனர்.**

அந்த விடயம் வெளியே தெரியுமானால் இலங்கையில் உள்ள தமிழ் மக்களிடம் மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள தமிழர்களிடமும் புலிகளுக்கு ஆதரவான உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் ஏற்படும்.

"16ம் திகதி இந்திய இராணுவத்தின் பிரதான படை, பிரதான வீதியைச் சுற்றிக்கொண்டு உரும்பிராய்க்குள் நுழைந்தது.

கவச வாகனங்களைப் பின்தொடர்ந்து வந்த இராணுவவீரர்கள் தாங்கள் சென்ற வழிகளில் போகிற போக்கில் கண்டபடி சுட்டுக் கொண்டு சென்றனர்.

இலங்கை வானொலி தேசிய சேவையில் தன் இளம் வயதில் மிகப் பிரபலமானவராக விளங்கியவர் ரேடியோ நடராஜா.

எல்லாத் தமிழர்களையும் போலவே அவரும் இந்தியாமீது மிகுந்த அபிமானம் வைத்திருந்தார். இந்தியர்கள் நியாயமாக நடந்து கொள்வார்கள் என்றும், அவர்களுக்கு விஷயங்களை விளக்கிச் சொல்ல முடியும் என்றும் அவர் நம்பிக் கொண்டிருந்தார்.

இந்தியத் துருப்புக்கள் அவரது வீட்டுக்கு வந்தபோது அவருடன் அவரது மனைவியும், மகனும் இருந்தனர். இந்தியப் படை அதிகாரியோடு பேசுவதற்காக நடராஜா வாசலுக்குச் சென்றார்.

இந்தியப் படையினர் அவரை விசாரித்தனர். தனது மகனும் தன்னுடன் இருப்பதாக அவர் கூறினார். மகனையும் வருமாறு கூப்பிட்டார்.

உள்ளே இருந்த நடராஜாவின் மகன் வெளியே வருவதற்காக எழுந்து நின்று சட்டை அணிந்து கொள்ள முற்படுவதை ஜன்னல் ஊடாகக் கண்ட ஒரு சிப்பாய் சுடத்தொடங்கினான்.

**நடராஜாவின் மகன் விழுந்து தரையோடு படுத்துவிட்டதால் சூடுபடவில்லை.**

**ரேடியோ நடராஜா பிணமாக வீழ்ந்தார்.**

இரண்டு தடவை துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதால் தனது கணவரையும், மகனையும் சுட்டுவிட்டார்கள் என்று நினைத்தார் திருமதி நடராஜா.

பயத்தில் பின்புற வேலி வழியாக திருமதி நடராஜா தப்பி ஓடுவதைக் கண்ட ஒரு சிப்பாய் கத்தினான்;

**'பஸ்செங்கியா'** (பின்னால் ஓடுகிறாள்)

உரும்பிராயில் இலங்கை இராணுவப் படையினரும் அனுப்பப்பட்டுள்ளனர் என்பதற்கான முதல் அறிகுறி அதுதான்.

### காதில் விழுந்த உரையாடல்

அமெரிக்காவில் இருந்து விடுமுறைக்கு வந்திருந்த சாந்தி என்பவர் உரும்பிராய் சந்திக்கு அருகில் இருந்த தன் இல்லத்தில் தங்கியிருந்தார்.

16ம் திகதி பெரும் குண்டுவீச்சுச் சத்தம் கேட்டதும் தாயும் மகனுமாய் தங்கள் நாயுடன் ஒரு கட்டிலுக்கு அடியில் சென்று பதுங்கியிருந்தனர். மறுநாள் காலை துப்பாக்கிச்சூடு ஓரளவு அடங்கும் வரை காத்திருந்தனர்.

எல்லாம் அடங்கிவிட்டது போல் தெரிந்த நேரத்தில் தாய் வெளியே வந்து கதவைத்

ஒருவர், மக்கள் கண்டபடி சுட்டுக் கொல்லப் பட்டதைக் கண்டதாகத் தெரிவித்தார்.

காலை 5.45க்கும் 6.00 மணிக்கும் இடையில் தனது வீட்டு ஒழுங்கை வழியாக இந்திய இராணுவ வாகனங்கள் வந்து கொண்டிருப்பதை அவர் கண்டிருக்கிறார்.

அவர்கள் கண்ணில் கண்டதையெல்லாம் சுட்டுக்கொண்டிருந்தார்கள். பின் அவர்கள் அவருடைய வீட்டு வளவுக்குள் நுழைந்து முன்வாசல் கதவின் பூட்டை நோக்கிச் சுட்டிருக்கிறார்கள். கதவு உட்பக்கத்திலும் பூட்டப்பட்டிருந்ததால் அசைந்து கொடுக்கவில்லை.



திபீந்தர் சிங்

பின் அந்த இராணுவவீரர்கள் இரண்டு மாடிகளின் ஜன்னல் கண்ணாடிகளை நோக்கிச் சுட்டனர். பின் அவர்கள் அந்த வீட்டை விட்டுவிட்டு அதற்கு எதிரில் இருந்த வீட்டுக்குள் நுழைந்தனர்.

**அந்த வீட்டில் நான்கு பெண்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவருக்கு 93 வயதிருக்கும். இளைய பெண்ணுக்கு ஏறத்தாழ 25 வயது இருக்கலாம். 93 வயது மூதாட்டி படுத்த படுக்கையாக இருந்தார். இந்திய இராணுவம் முதலில் அவரைச் சுட்டது. மற்றவர்களின் சடலங்கள் வீட்டுப் பின் தோட்டத்தில் காணப்பட்டன.**

அவர்கள் தப்பித்து வெளியே ஓடிச் செல்ல முயலும்போது சுடப்பட்டிருக்க வேண்டும். மறுநாள்-19ம் திகதி திங்கட்கிழமை அந்தச் சடலங்களைப் புதைத்தவர்தான் அந்தக் கதையை எங்களுக்குச் சொன்னார்.

### வெள்ளைக்கொடியுடன்

உரும்பிராய்ச் சந்திக்கு வடக்கே ஐம்பதுயார் தொலைவில் இலங்கைத் திருச்சபைக்கு எதிரே இருந்த வீடொன்றுக்குள் இந்திய இராணுவம் நுழைந்தது. அந்த

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

சின்னத்துரை காண முடிந்தது. திருமதி சின்னத்துரை தனது பேச்சின் நடுவே அடிக்கடி நிறுத்தி மூச்சுத் திணறிக் கூறுவார்: "அவையள் சண்டை பிடிக்க வந்த இராணுவம் இல்லை எண்டு அவர் சொன்னாரே!"

அக்டோபர் 20ம் திகதி நிலமை ஓரளவு அடங்கிவிட்டதாகத் தோன்றிய நேரத்தில் காளிகோவிலுக்கு அருகில் ஒரு நிலக் கண்ணிவெடி வெடித்ததில் சில இந்தியப் படையினர் பலியாகினர். அதனால் ஏனைய இராணுவவீரர்கள் வெறிகொண்டவர்கள் போலாகி மக்களைக் கொன்று குவிக்கத் தொடங்கினார்கள்.

**கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வயது முதிர்ந்தவர்களும், பெண்களும், குழந்தைகளுமாவர். மற்றவர்கள் அதற்குள் உரும்பிராயைவிட்டு வெளியேறியிருந்தார்கள்.**

கேர்லி என்ற பெண் தனது வீட்டிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அதனைக் தன் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த கேர்லியின் வயதான தாய் அவரது பக்கத்தில் இருந்து கதறியபடியே துக்கத்தால் உயிர் நீத்தார். உப்பிப் போயிருந்த அவர்களின் சடலங்கள் ஒரு மாதத்தின் பின்னரே அவர்களது உறவினர்களால் தகனம் செய்யப் பட்டன.

### தொடர் துன்பம்

பல்கலைக்கழக மாணவியான அம்பிகாவின் தாயாரும், பாட்டியும், அவரது வயதான மலையக வேலைக்காரர் ஒருவரும் இறந்த விதம் இன்னொரு சோகக் கதை.

உரும்பிராய் வடக்கில் இருந்த தங்கள் வீட்டில் அம்பிகாவின் தாயும் பாட்டியும் குடும்ப நண்பரான இன்னொரு முதியவருடன் இருந்திருக்கிறார்கள்.

இந்திய டாங்கியொன்று, காலாட் படைப் பிரிவுகள் தொடர்ந்துவர பிரதான வீதியை ஒட்டியிருந்த திறந்தவெளி வழியாக அவர்களின் வீட்டைக் கடந்து சென்றது.

சிறிது நேரம் கழித்து எல்லாம் போய்விட்டதா என்று பார்ப்பதற்காக அந்த முதியவர் கதவைத் திறக்கச் சென்றிருக்கிறார்.

பின்னர் அந்தப் பெண்மணி அதே ஒழுங்கையில் சற்றுத் தள்ளியிருக்கும் தன் மைத்துனி வீட்டுக்குச் சென்றார்.

அங்கே அவருடைய மைத்துனி முதுகில் சுடப்பட்டு இறந்துகிடப்பதைக் கண்டார். அவளுடைய வயதான மாமியும், அந்த வீட்டில் தங்கியிருந்த கிழவரும் சுடப்பட்டுக் கொல்லபட்டிருப்பதையும் கண்டாள்.

### குடும்பமே பலி

**அக்டோபர் 20ம் திகதியன்று மட்டும் அதே ஒழுங்கையில் இன்னும் தள்ளி வசித்துவரும் சிவப்பிரகாசம் என்பவர் தனது வீட்டில் இருந்து ஒரு அரைமைல் சுற்றுவட்டாரத்திற்குள் மட்டும் 18பேர் கொல்லப்பட்டதாக ஒரு கணக்கைத் தெரிவித்தார். அவர்களில் ஏழுபேர் மட்டுமே ஆண்கள். அவர்களும் அறுபது வயதைக் கடந்தவர்கள்.**

நாற்பத்தேழு வயதான வர்த்தகரான இலகுப்பிள்ளை ஏகாம்பரமும் முப்பது வயதான அவர் மனைவி டொரொத்தியும், மூன்று வயது மகள் ஷெரீனும் பலத்த ஷெல் தாக்குதல்களுக்கு இடையில் வீட்டை விட்டு வெளியேற முற்பட்டனர். அப்போது இந்தியப் படையினரால் மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஏகாம்பரம் வீட்டுக்கு அடுத்தாற் போல் டொரொத்தியின் மைத்துனி திருமதி சீனித்தம்பியின் வீடு இருந்தது. திருமதி சீனித்தம்பி, அவரது தாய், அவரது சகோதரன் மற்றும் ஏழு வயதுக் குழந்தை அனைவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர். உறவினர்கள் அவர்களது எலும்புக் கூடுகளைத்தான் மீட்க முடிந்தது.

ஒரு கரடு முரடான குழிக்குள் கிறவெல் கற்களால் மூடப்பட்ட நிலையில் ஏகாம்பரம் குடுபத்தினரது சடலங்கள் கிடந்தன.

அந்த இடத்தைத் தோண்டி எடுத்த போது ஏகாம்பரம் தனது பிஞ்சுக்குழந்தையை அணைத்துக் கொண்டபடி செத்துக் கிடந்தார்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தர் குமார் குஜ்ராலின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் மிக்கதொன்றாக அமைந்திருந்தது.

கடந்த ஆறு மாதங்களில் இலங்கைக்கு இரு முக்கிய வெளிநாட்டு அமைச்சர்கள் விஜயம் செய்திருந்தனர். அவர்களில் ஒருவர் பிரிட்டிஷ் வெளிவிவகார

தாஜ்சமுத்ரா ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தமிழ் அரசியல் கட்சிகளை திரு.குஜ்ரால் சந்தித்தார்.

இந்தியா, இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு தீர்வுகாண உதவவேண்டும், என்று தமிழ் அரசியல் கட்சிகள் திரு.குஜ்ராலிடம் கேட்டன.

விடயங்களையெல்லாம் மிகவும் அவதானமாகவே அவர் அணுகிச் சென்றிருந்தார்.

"சந்திரிகா அரசு இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க எடுக்கும் முயற்சிகளை இந்தியா அவதானித்து வருகின்றது. இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால், இந்தியாவுக்கும்,

# 'தள்ளாடி நிற்கும்' தேவகௌடா அரசின் நழுவும் குஜ்ரால்!



அமைச்சர் மல்கம் றிஃப்கின்ட்: மற்றவர் இந்தியாவின் இந்தர் குமார் குஜ்ரால்.

தென்னாசியாவில் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ள நாடாக இந்தியா விளங்குகின்றது.

இந்தியாவில் எச்.டி.தேவகௌடா தலைமையிலான இன்றைய அரசாங்கம்கூட எந்நேரத்திலும் பதவியிழக்கும் தன்மைகளே காணப்படுகின்றன.

எனவே உறுதியற்றுத் தளம்பலான நிலையில் இருக்கும் தேவகௌடா அரசின் வெளிவிவகார அமைச்சரே இந்தர் குமார் குஜ்ரால்.

இலங்கையின் பிரச்சினை மிகவும் சிக்கலானது. இப் பிரச்சினையில் தலையைப்போட்டு பெரும் நெருக்கடியான நிலைமைகளையும் இந்தியா சந்தித்திருந்தது.

இலங்கைத்தமிழ் அகதிகள் இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்தமை, மிதவாத, தீவிரவாத தமிழ் அரசியல் வாதிகள் அங்கு அடைக்கலம் தேடியமை, இந்திய- இலங்கை ஒப்பந்தம்: அதனையடுத்து இந்தியப்படைகளின் இலங்கை வருகை, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில்கூட எல்.ரி.ரி.ஈ.யினரைச் சந்தேகிக்கும் நிலை என்று பல்வேறு நிகழ்வுகள், அனுபவங்கள் என்பனவற்றுக்கு- இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டதாலேயே இந்தியா முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

இந்தியாவுக்கு இலங்கை- தென்னாசியாவில் மிகச்சிறிய ஒரு நாடாக இருக்கலாம். அத்துடன் இலங்கையின் புவியியல் அமைப்புக்கூட இந்திய மாநிலமொன்றைவிட மிகச் சிறியதாகவே இருக்கலாம்.

ஆயினும் 'கடுகு சிறிதானாலும் காரம் பெரிது' என்பதுபோல, இலங்கையின் புவியியல் பரம்பல் சிறிதானாலும், அதன் அரசியல், இந்தியாவைப் பொறுத்தவரை 'காரமாக' இருப்பதே உண்மை.

திரு.குஜ்ரால் இலங்கையில் விஜயம் செய்தபோது ஒரு கயிற்றின் மேல் நடப்பவர் போலவே மிகவும் அவதானமாக தமது கருத்துக்கள், பேச்சுக்களை வெளியிட்டார்.

எங்கும், எவ்விதத்திலும் பிடிகொடுக்காத வகையில் நடந்துகொண்டார்.

திரு.குஜ்ரால் இலங்கைக்கு விஜயம் செய்கிறார் என்ற தகவல் வெளியானதுமே கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் 'இந்திய உதவியைக் கறந்து எடுத்து விடுவது' என வரிந்து கட்டிக் கொண்டு நின்றன.

ஆனால் திரு.குஜ்ரால், இலங்கை இனப்பிரச்சினையில் தாம் எவ்விதத்திலும் தலையிடப்போவதில்லை. "இலங்கையின் பிரச்சினையை இலங்கையே தீர்த்துக்கொள்ள வேண்டும்!" என்று அவர் கூறியிருந்தார்.

இது தவிர கொழும்பிலிருந்து புறப்படுமுன்னர் தாம் தங்கியிருந்த தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வைத்து பத்திரிகையாளர் மகாநாடொன்றையும் திரு.குஜ்ரால் நடத்தியிருந்தார்.

அம் மகாநாட்டில்கூட இலங்கை

தென் இந்தியப் பிராந்தியத்துக்கும் அதனால் நன்மை ஏற்படவே செய்யும்," என்று திரு.குஜ்ரால் குறிப்பிட்டிருந்தார்.

எனவே இலங்கை இனப்பிரச்சினையில் ஏற்படும் தீர்வு என்பது முழு இந்திய உபகண்டத்துக்குமே நன்மையளிக்கும் என்று அமைச்சர் குஜ்ரால் தெரிவித்துள்ளதை நோக்கும்போது, இலங்கைக்குமட்டுமல்ல; முழு இந்திய உபகண்டத்துக்குமே இலங்கை இனப்பிரச்சினை ஒருதலையிடியாக இருப்பதையே உணர முடிகின்றது.

## அலசுவது- இராஜதந்திரி

பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் இருந்துவரவே செய்கின்றனர்.

இந்தியா இலங்கைப் பிரச்சினையில் ஆர்வமில்லாதிருக்கலாம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை அதுவோர் தவிர்க்க முடியாத பிரச்சினையாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா அதீத ஆர்வம் காட்டியது.

1989ம் ஆண்டு இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் வெளியேறும்வரை இந்தியத் தலையீடு இலங்கை விவகாரத்தில் இரண்டறக் கலந்திருந்தது.

தமிழக மாநிலம் முழு அளவில் தனது ஆதரவை இலங்கைத் தமிழர்பால் வழங்கியிருந்தது.

ஆனால் இன்று இந்திய அரசு மட்டுமல்ல; தமிழக மாநிலம்கூட அன்றிருந்ததைப்போல இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஆர்வங்காட்டுவதாக இல்லை.

இத்தகைய நிலைக்கு இலங்கைப் பிரச்சினை மிகவும் சிக்கலானதும், அரசியல்-இராணுவ ரீதியாக நாளுக்குநாள் மோசமான தன்மைகளைக் கொண்டிருப்பதாகவுமிருந்து வருவதே முக்கிய காரணமாகும்.

இந்தியா மட்டுமல்ல, எந்தவொரு வெளிநாடும் இலங்கையின் பிரச்சினையை இலங்கையே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றே கூறுகின்றன.

இதற்கு இலங்கைப் பிரச்சினையில் அவற்றுக்கு ஆர்வமில்லை என்று கூறுவதைவிட, எந்தவொரு வெளிச்சக்தியும் அரசியல் ரீதியாகத் தலையிடுமளவுக்கு, இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட அரசியல் அணுகுமுறைகள் ஆர்வமற்றிருப்பதே முக்கிய காரணமாகும்.

அரசியல் ரீதியாக சந்திரிகா அரசு மட்டுமல்ல, எந்தவொரு அரசியல் கட்சியும் தமது உரிய பங்களிப்பை வழங்குவதாக இல்லை.

சுட்டிக் காட்டின. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் கூறியிருந்தன.

ஆனால் இருசாராருமே அதனைச் செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க, இலங்கை விமானப்படையைச் சேர்ந்த மூன்று விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து வீழ்ந்து நாசமாகிப் போனமை, இலங்கை அரசின் இராணுவ ரீதியான பலவீனத்தையும் புலப்படுத்தியிருந்தது.

போதிய முன் அனுபவமோ, அல்லது முதிர்ச்சியோ இல்லாது, போருக்கென்று மட்டுமே படையினரையும், படைக்கலங்களையும் இலங்கை இராணுவம் தயார் செய்து வருகின்றது.

இலங்கை அரசு விரலுக்கு மிஞ்சிய வீக்கம்போல தனது நிதிக்கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விதத்தில் இராணுவச் செலவுகளை மேற்கொண்டு வருகிறது.

ஆரோக்கியமான அரசியல் நடைமுறைகளுமின்றி, ஒரு பலம்மிக்க இராணுவத்தையும் கொண்டிருக்க முடியாமல் எத்தகைய உறுதியான வெற்றியையும் ஈட்டிவிடப் போவதில்லை.

இந்நிலையில் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையை இலங்கையே தீர்த்துக் கொள்ள வேண்டுமென இந்தியாவின் திரு.குஜ்ரால் குறிப்பிட்டதற்கிணங்க இலங்கையால் அதன் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? என்ற கேள்வி எழும்பியுள்ளது.

திரு.குஜ்ராலின் கொழும்பு விஜயத்தின் முன்னர் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நடத்தியிருந்தார்.

அப்போது மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம், புலிகளுடனான பேச்சுவார்த்தை என்ற அனைத்தையுமே அவர் நிராகரித்திருந்தார்.

எனவே இலங்கை தனது சக்திக்கு

## அரசியல்தீர்வைவிட உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயாராகும் பொ.ஐ.ஐ.மு-ஐ.தே.க.

இனப்பிரச்சினையில் இந்திய மத்தியஸ்தம் பற்றிய கேள்வி எழுந்தது. அப்போது திரு.குஜ்ரால், "எமக்கு இதில் ஆர்வமில்லை," (We are not interested in it.) என்று தெளிவாகக் கூறியிருந்தார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இந்திய வெளியுறவுக் கொள்கை பற்றி திரு.குஜ்ரால் நீண்ட விரிவுரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

இந்த விரிவுரையில்கூட இலங்கை இனப்பிரச்சினை பற்றிய

மழை ஓய்ந்தும் தூவானம் நின்று விடாததுபோல, இந்திய இலங்கையின் இனப்பிரச்சினையில் தலைபோடுவதைத் தவிர்த்து வருகின்ற போதிலும், அவ்வப்போது இந்தியாவில் இலங்கைப் பிரச்சினை குறித்த கோஷங்கள் போடப்பட்டே வருகின்றன.

அண்மையில் கூட கர்நாடக மாநிலத்திலும், தமிழகத்திலும் இலங்கைத்தமிழர் விவகாரம் குறித்து பேரணிகள், ஊர்வலங்கள் ஏற்பாடாகியிருந்தன. இது தவிர தமிழகத்தில் தொடர்ந்தும்

இலங்கையில் தீராத நோயாக இருந்துவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதை விடுத்து, தமது பலத்தை எடைபோட ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் குதிக்கத் தயாராகின்றன.

எனவே தேர்தல் முஸ்தீபுகள் சூடுபிடிக்கும்போது இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் மேலும் காலந்தாழ்த்தப்படவே செய்யும்.

இதனை அண்மையில் தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவிடமும்

அப்பாற்பட்ட விதத்தில் ஒரு பெரும் பூதத்தை வளர்த்து வைத்திருப்பது போலவே இனப்பிரச்சினையை வளர்த்து வைத்துள்ளது.

இராணுவ முஸ்தீபு, பேரினவாதம், குறுகிய அரசியல் அபிலாஷைகள் என்ற கொடிய கரங்களை அப்'பெரும் பூதம்' கொண்டுள்ளது.

அப் பூதத்தின் பசிக்கு ஆளாகி அதிலிருந்தும் மீளமுடியாத நிலையில் இலங்கை இருந்து வருவதே கண்கூடு.

# முறிந்துபோன சமரச முயற்சி!

எதிர்க்கட்சி தலைவர் ரணிலை தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் காங்கிரசும் சந்தித்தன.

எதிர்க்கட்சியின் சார்பாக தமிழ்-முஸ்லிம் கட்சிகளிடம் இரண்டு பிரதான நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

1. அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் என்றில்லாமல், பொதுவான தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

2. உள்ளூராட்சித் தேர்தல்களை தெற்கில் பின்போட வேண்டும்.

இரண்டுமே நல்ல யோசனைகள்தான் என்று தமிழ்- முஸ்லிம் கட்சிகள் எதிர்க்கட்சியிடம் கூறிவிட்டன.

15.01.96 அன்று புதன்கிழமை தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதியைச் சந்தித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை ஜனாதிபதியிடம் தெரிவித்தன.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுமானால் ஆளும் கட்சியை எதிர்த்து பிரசாரம் செய்ய வேண்டியிருக்கும். ஆளும் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியை சரமாரியாக விமர்சனக் கணைகளால் துளைத்தெடுக்கும்.

அவ்வாறான நிலையில் அரசியல் தீர்வு விடயத்தில் இணக்கமாகச் செயற்படக்கூடிய சூழல் இருக்காது என்பது ஐ.தே.கட்சியின் வாதம்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றிபெறும் பட்சத்தில் ஆளும் கட்சியின் அரசியல் தீர்வுகளுக்கு ஆதரவளிக்க முடியாமல் போகும். அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கும் நம்பிக்கையில் ஆளும் தரப்புக்கு எதிரான அரசியல் போக்கை தீவிரப்படுத்தும்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தரப்பு வெற்றிபெறுமானால், எதிர்க்கட்சியின் மீதான அலட்சியப் போக்கு அதிகமாகலாம்.

எனவே உள்ளூராட்சித் தேர்தலை தள்ளிப்போட்டுவிட்டு, முதலில் அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து முடிப்பதுதான் தமிழ்-முஸ்லிம் கட்சிகளுக்கும் பொருத்தமாகப் பட்டது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிபந்தனைகளை முன்வைத்ததுடன், அதனை ஏற்றுக் கொள்ளுமாறும் ஜனாதிபதியிடம் கோரின தமிழ்-முஸ்லிம் கட்சிகள்.

ஒரேயடியாக ஐ.தே.கட்சியின் கோரிக்கையை நிராகரித்துவிட்டார் ஜனாதிபதி.

"உள்ளூராட்சித் தேர்தலில் நாம்தான் வெற்றி பெறுவோம். எதிர்க்கட்சி தீர்வு முயற்சிகளுக்கு ஒருபோதும் ஒத்துழைக்கப் போவதில்லை," என்று ஜனாதிபதி திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

"தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் கோரிக்கையாக அதனை எடுத்துக் கொள்ளுங்கள். உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திப்போடுங்கள்," என்று சிவசிதம்பரம் கேட்டிருக்கிறார்.

"தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுதானே வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது. தெற்கில் ஒத்திப்போடமுடியாது." என்று ஜனாதிபதி கூறிவிட்டார்.

முஸ்லிம் காங்கிரசும் உள்ளூராட்சித்



தேர்தல் ஒத்திப்போடுவதை ஆதரிக்கிறது என்று அமைச்சர் அஷ்ரப்பை துணைக்கிழுத்தார்- சிவசிதம்பரம்.

அமைச்சர் அஷ்ரப்புக்கு பெரும் சங்கடமாகிப் போய்விட்டது. ஆம் என்றும் சொல்லாமல், இல்லை என்றும் சொல்லாமல் தன் வாதத் திறமையால் சமாளித்து நழுவிக்கொண்டார் அமைச்சர் அஷ்ரப்.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஆளும் தரப்புக்கும் இடையே அரசியல் தீர்வு முயற்சியில் ஒத்த கருத்தை ஏற்படுத்தும் முன்னோடியான முயற்சிகள் தோல்விகண்டுவிட்டன.

ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பின் பின்னர் அந்த முயற்சிகள் தோல்வி கண்டு விட்டதை தமிழ்-முஸ்லிம் கட்சிகள் பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. மக்களிடம் இருந்து மறைத்துவிட்டன.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக அரசுடன் ஒத்துழைக்க எதிர்க்கட்சி முன்வைத்த இரண்டு பிரதான நிபந்தனைகளையும் ஜனாதிபதி நிராகரித்துவிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை உடனடியாகச் சந்திக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தயக்கம் இருக்கிறது. கட்சியை மேலும் தயார்ப்படுத்துவதோடு, புலிகளின் தொடர் தாக்குதல்கள் மூலம் அரசின் இமேஜ் மேலும் சேதமாகும் வரை காத்திருக்கலாம் என்று கருதுகிறார் ரணில்.

அதைவிட, ஆளும் தரப்புக்குள் இருந்து துண்டித்துக் கொண்டு வருவதற்கு சிறிமணி அத்துலத் முதலி அணியிடம் தயக்கம் இருக்கிறது. அந்தத் தயக்கத்தைப் போக்குவதுடன் ஆளும் தரப்புக்குள் உட்பூசலைத் தீவிரப்படுத்தவும் ஒரு கால அவகாசத்தை விரும்புகிறது எதிர்க்கட்சி.

'ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.' அந்தக் கொக்கின் நிலையில் இருக்கிறது எதிர்க்கட்சி.

கொக்குக்கு வாய்ப்புக் கொடுக்கத் தயாராக இல்லை ஜனாதிபதி.

பரந்தன் தாக்குதலின் பின்னர் ஆளும் தரப்பின் கணக்கு வேறாகிவிட்டது. புலிகள் மீதான பாரிய வெற்றி ஒன்றுக்காக காத்திருப்பதைவிட, தற்போதைய வெற்றிகள் குறித்த நம்பிக்கையீனங்கள் பெரியளவில் ஏற்படுவதற்கிடையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்துவிட திட்டம் தீட்டப்பட்டது.

வெளியுலகில் கடனுதவிகளைப் பெறுவதற்கும், வெளியுலகில் தனக்குள்ள இமேஜை காப்பாற்றவும், தமக்குள்ள அரசியல் செல்வாக்கை வெளிப்படுத்தியாக வேண்டும். அதுதான் ஆளும் தரப்புக்குள்ள கட்டாயம்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தரப்பு பிளந்து கட்டிவிட்டால், தமது கட்சியின் அடித்தளம் ஆட்டம் கண்டுவிடுமே என்ற பயம் எதிர்க்கட்சிக்கு.

இரு தரப்புமே தமது அரசியல் நலனின் அடிப்படையில்தான் வியூகங்களை வகுக்கின்றன. இது புரியாமல் தமிழ் முஸ்லிம் கட்சிகள் 'நாம் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்' என்று கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ஒருவேளை உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்திருந்தால்கூட எதிர்க்கட்சி விழுந்தடித்துக்கொண்டு அரசியல் தீர்வுக்கு பச்சைக் கொடி காட்டியிருக்கப்போவதில்லை.

அரசும்-புலிகளும் நிபந்தனையின்றிப் பேசவேண்டும் என்று எதிர்க்கட்சி கோருகிறது. அதே எதிர்க்கட்சிதான் அரசியல் தீர்வு தொடர்பாக ஆளும் தரப்புடன் பேசுவதற்கு நிபந்தனை விதிக்கிறது.

மொத்தத்தில் ஆளும் தரப்பும், எதிர்க்கட்சியும் இணைந்து தீர்வுத் திட்டத்தை முன்வைக்கலாம் என்பது கலப்படமில்லாத கற்பனைதான்.

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகப்போகிறது. அந்தக் கற்பனைக் கோட்டைகள் சீட்டுக்கட்டு மாளிகை போல பொல பொலத்துப் போவதைப் பார்க்கத்தான் போகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# தருவது 29 ரசிகன்

## கடந்தவாரம்

பூலான் தேவியை கடத்திய
கொள்ளைக் கோஷ்டித் தலைவன்
பாபுசிங் குஜாருக்கும்
அவனுக்கு அடுத்த நிலையில் உள்ள
விக்கிரம் மல்லாவுக்கும் இடையே
பூலான் தேவியால் பிரச்சனை வருகிறது.
பாபுசிங் குஜாரை விக்கிரம் மல்லா
சுட்டுக் கொல்கிறான்;
கொள்ளைக் கோஷ்டித் தலைவனாகிறான்.
பூலான் மல்லாவைக் காதலிக்கிறாள். இனி..

மாதுசிங் கொண்டுவந்த தந்த சீருடையை கையில் வாங்கிய போது ஏதோ பிசு பிசுப்பாக ஒட்டியது. என்னவென்று பார்த்தேன்.

அது இரத்தம். இரத்தம் மட்டுமல்ல ஒரு பொத்தலும் இருந்தது.

நான் முகம் சுளிப்பதைப் மல்லா கவனித்துவிட்டான்.

"புதிய சீருடை எதுவும் எம்மிடம் இல்லை. அது பாபுசிங் குஜார் போட்டிருந்தது. தற்போதைக்கு அதைப் போட்டுக்கொள்" என்றான்.

பொலிஸ்காரர்கள் போட்டிருப்பார்களே அதேபோல காக்கி நிறத்தில்தான் கொள்ளைக் கோஷ்டியினர் எல்லோரும் உடை அணிந்திருந்தார்கள். இடுப்பில் ஒரு பட்டி கட்டி அதில் தோட்டாக்களை அடுக்கி வைத்திருப்பார்கள். சிலர் மார்புக்கு குறுக்காக நீண்ட பட்டி கட்டி தோட்டாக்களை வைத்திருந்தார்கள். மல்லாவும் அப்படித்தான் பட்டி கட்டியிருந்தான்.

சீருடை அணியவேண்டும். துப்பாக்கியுடன் வலம் வரவேண்டும் என்று எனக்கும் ஆசைதான்.

சீருடையைப் பார்த்ததும்தான் வெட்கமாக இருந்தது. நான் போட்டுக் கொண்டால் நன்றாகவா இருக்கும்? கொள்ளைக் கோஷ்டி ஆட்கள் சிரிப்பார்களோ என்று கூச்சமாக இருந்தது.

"நாம் உடனடியாக வேறு இடத்துக்குப் புறப்படவேண்டும். அதைப் போட்டுக் கொண்டு வா!" என்றான் மல்லா.

ஒரு மறைவிடத்துக்குச் சென்று அந்த உடைகளை அணிய ஆரம்பித்தேன். காற்சட்டை தொடைப் பக்கம் இறுக்கமாக இருந்தது. வெடித்துவிடுமோ என்று பயமாக இருந்தது. கால்களை தூக்கி அசைத்துப் பார்த்தேன். பரவாயில்லை, தாக்குப் பிடிக்கும் போலிருந்தது.

சட்டையைப் போட்டேன். அதுவும் மார்புப் பகுதியில் இறுக்கமாக இருந்தது. அதனால் மார்புகள் முன்னால் துருத்திக் கொண்டிருந்தன. வெட்கமாக இருந்தது. சட்டைப் பொத்தான்கள் நான் மூச்சு விட்டால் தெறித்துவிடும்போலிருந்தன.

மூச்சை இழுத்து விட்டுப் பார்த்தேன். தெறிக்கவில்லை.

என்னை முழுவதுமாக ஒரு முறை பார்த்துக் கொண்டேன். பொலிஸ்காரன் மாதிரியே இருந்தது.

இப்போது என்னை அம்மா பார்க்க வேண்டும். என்ன நினைப்பாள்? தம்பி சிவநாராயணன் பார்த்தால் "அக்கா பொலிஸில் சேர்ந்துவிட்டாயா?" என்று கேட்பான்.

'நான் பொலிஸ் இல்லையடா; அந்தப் பொலிஸ்காரர்களையே புரட்டி எடுக்கப்போகிறவள்' என்று சொல்லவேண்டும்.

தரையில் அமர்ந்து பூட்சுகளைப் போட்டுக் கொண்டேன். அமரும்போது கால்களுக்குள் காற்சட்டை இழுத்துப் பிடித்தது. பூட்சுகள் அளவாக இருந்தன. நாடாவை எப்படிக் கட்டுவது என்றுதான் தெரியவில்லை.

மறைப்புக்கு அப்பால் இருந்து மல்லாவின் குரல் கேட்டது. "வரலாமா?" என்று குரல் கொடுத்தான்.

அவன் அப்படிக் கேட்டது எனக்குப் பிடித்திருந்தது. அவன் நினைத்திருந்தால் கேட்காமலேயே நேராக வந்திருக்கலாம். என் உடம்பைப் பார்க்க ஆசையிருந்தால் நான் உடை மாற்றும்போதே வந்திருக்கலாம்.

'மல்லா! உன்னிடம் எல்லாமே எனக்குப் பிடிக்கின்றன. என்னை மட்டும் உனக்குப் பிடிக்கவில்லையா?' என்று கேட்க லாம். கேட்கத்தான் தயக்கம்.

நான் எழுந்துகொண்டேன். மெல்லத்தான் எழுந்தேன். சட்டென்று எழுந்தால் எங்காவது வெடித்து விடுமோ என்று பயம்.

என் புதிய தோற்றத்தைக் கண்களில் வியப்பு நிரப்பிக் கொண்டு பார்த்தான் மல்லா. நன்றாகப் பார்க்கட்டும். நானும் நேராகப் பார்த்தால் பார்ப்பதை நிறுத்தி விடுவானோ என்பதால், தலையைக் குனிந்து கொண்டேன்.

என் அருகில் மல்லா வருகிறான். வரட்டும். இதோ நெருங்கிவிட்டான். நெருங்கட்டும். நான் தலை நிமிரவில்லை. உடம்பெல்லாம் சட்டென்று தீப்பிடித்துக் கொண்டதுபோல இருந்தது.

என் அருகே வந்த மல்லா சட்டென்று மடங்கி என் முன்னால் அமர்ந்தான்.

அமர்ந்தவன் என் பூட்சுக்களின் நாடாக்களை இறுக்கிக் கட்டினான்.

அப்படியே அவன் தலை முடியை கோதிவிடலாம்போல ஆசையாக இருந்தது. அப்படியே அவன் தலையைப் பிடித்து...

"சரியாக இருக்கிறதா?" என்றான் நிமிர்ந்து பார்த்து. "ம்..ம்." என்றேன். மரமண்டை, மரமண்டை.

அவனவன் பெண் என்றால் பேயாய், நாயாய் அலைகிறான். இந்த மல்லாவுக்கு மட்டும் மனதை என்ன மரக்கட்டையால் செய்துவைத்திருக்கிறதோ?

வெளியே நானும் மல்லாவும் வந்தபோது எல்லோரும் புறப்படத் தயாராக இருந்தார்கள். என்னைக் கண்டதும் எல்லோரும் கண்களை விரித்துப் பார்த்தனர். எனக்கு வெட்கமாகிவிட்டது.

பூட்சுக்களுடன் நடப்பது புதிய அனுபவமாக இருந்தது. காலில் இரண்டு கற்களைக் கட்டிவிட்டதுபோல பாரமாக இருந்தது.

மாதுசிங்கிடம் இருந்து ஒரு நீண்ட பட்டியை வாங்கி என் தோளில் போட்டு மார்புக்கு குறுக்காக அதை அணிவித்தான் மல்லா. பட்டியில் தோட்டாக்கள் இருந்தன.

பட்டியை போட்டுவிடும்போது மல்லாவின் விரல்கள் ஆங்காங்கே பட்டன. எத்தனை மிருகங்கள் என்னைக் குதறியிருக்கின்றன. அப்போதெல்லாம் என் உடம்பு முழுக்க மரத்துக் கிடந்தது. இப்போது மல்லாவின் விரல்கள் தற்செயலாகப் படும்போது மட்டும் என் உடம்பு ஏன் இப்படிச் சிலிர்க்கிறது?

"புறப்படலாம்" என்றான் மல்லா. 'ஜே.ஜே.. விக்கிரம் மல்லாவுக்கு ஜே" என்று மாதுசிங் குரல் உயர்த்தினான். எல்லோரும்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

அவனைத் தொடர்ந்து குரல் உயர்த்தினார்கள்.

மல்லா. தலைவனான பின்னர் முதன் முதலாக புறப்படும் பயணம் இது.

நான் துர்க்கையம்மனை மனதில் வேண்டிக்கொண்டேன். மல்லாவுக்காகவும், அவனது ஆட்களுக்காகவும் நல்லது செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.

இதுவரை எனக்காக, என் கஷ்டங்களுக்குத்தான் துர்க்கையம்மனை வேண்டினேன். இப்போதுதான் முதல் தடவையாக எனக்காக அல்லாமல், பிறருக்காக வேண்டினேன்.

அப்போதுதான் மல்லா என் கையில் ஒரு துப்பாக்கியைத் தந்தான்.

"வைத்துக்கொள்!" என்றான்.

"எனக்குத்தான் சுடத் தெரியாதே!" என்றேன் வாங்கிக்கொண்டு.

"பரவாயில்லை. எப்படிச் சுடுவது என்று நான் சொல்லித் தருகிறேன். இனி உனக்குத்தான் இந்தத் துப்பாக்கி. இது கடவுள் மாதிரி. தெரிகிறதா? கடவுள் மாதிரி. பக்குவமாக வைத்துக்கொள்ளவேண்டும்." என்றான். அதைச் சொன்னபோது மல்லாவின் குரலில் நிரம்பக் கண்டிப்புத் தெரிந்தது.

"சரி" என்றேன். மனம் துள்ளியது. மல்லா எனக்கு துப்பாக்கி சுட கற்றுத்தரப் போகிறான் என்பதே மனம் கொள்ளாத மகிழ்ச்சியாக இருந்தது.

என் கனவில் தோன்றிய அந்த வெள்ளை உடைத்தேவதை கையில் வைத்திருந்தது போன்ற துப்பாக்கி இப்போது என்னிடமும் இருக்கிறது.

நான் கண்ட கனவெல்லாம் பலிக்கப் போகின்றன. நான் பட்ட அடிகளையெல்லாம் திருப்பிக் கொடுக்கப் போகிறேன்.

இப்போது நான் பழைய பூலான் அல்ல. புதிய பூலான்.

'வாங்கடா, வாங்களடா, இப்போது வந்து பாருங்கடா. மல்லாவிடம் சொன்னேன் என்றால் உங்களை ஓட ஓடச் சுடுவான்.' கத்தலாம்போல இருந்தது. கண்ணீர்வரும் போல இருந்தது.

கணவாய் ஒன்றின் வழியாக நாங்கள் நடந்து சென்றோம். முதலில் கஷ்டமாக இருந்தாலும், பின்னர் பூட்சுக்களுடன் நடப்பது சுலபமாக இருந்தது. பூட்சுகள் இல்லாவிட்டால் அப்பாதை வழியாக நடப்பதே கஷ்டமாக இருந்திருக்கும்.

தடித்த துணியால் செய்யப்பட்ட உடை என்பதால், பாதையின் இரு மருங்கிலும் நீட்டிக் கொண்டிருந்த முட்கள் பட்டபோதும் உடம்பில் கீறல்விழவில்லை.

தடித்த துணியில் ஏன் உடை தைத்துப் போட்டிருக்கிறார்கள் என்பது இப்போது தான் புரிந்தது.

இப்போது என் நடையில் ஒரு கம்பீரம் வந்துவிட்டது. முதலில் தயங்கித் தயங்கி நடந்தவள் இப்போது நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நடக்கத் தொடங்கிவிட்டேன்.

நான் கடத்திவரப்பட்டபோது இருந்த நிலையையும், இப்போது உள்ள நிலையையும் எண்ணிப்பார்த்தேன்.

அப்போது என்னை ஒரு கோழிக்குஞ்சு மாதிரி அமுக்கிக்கொண்டு வந்தார்கள். இப்போது ஒரு புலிக்குட்டி மாதிரி என்னையும் தம்மோடு இணைத்துக் கொண்டு போகிறார்கள்.

இரவாகிக் கொண்டிருந்தது. மசமச வென்று எங்கும் ஒரே இருள். புதர்களுக்குள் யாரும் பதுங்கியிருந்து எம்மீது பாய்ந்தால்கூட தெரியாது.

எனக்கு முன்னால் சென்றவனை என் கண்பார்வையிலே வைத்திருந்து, அவன் பின்னால் சென்று கொண்டிருந்தேன்.

எனக்குப் பின்னாலும் பலர் வந்து கொண்டிருப்பதால் பயம் வரவில்லை.

சட்டென்று காலடியில் ஏதோ இடறியது. அப்படியே முன்பக்கமாக சரிந்தேன். சட்டென்று ஒரு கை நீண்டு என் இடுப்பை பிடித்து, என்னை விழாமல் தடுத்துக் கொண்டது.

"பார்த்து நட. இது கற்பாதை!" என்றான் மல்லா. இடையைச் சுற்றி என் வயிற்றில் அழுத்திப் பிடித்திருந்தான். பின்புறமாக நின்று பிடித்ததால் அவன் உடல் முழுக்க என் முதுகுப்பக்கத்தில் உரசிக் கொண்டிருந்தது.

எனக்குப் புத்தி சொல்லிக்கொண்டே தனது கையை எடுத்துவிட்டான்.



பூலான்

மீண்டும் நடக்கத் தொடங்கினோம். மல்லாவின் கை இரும்புமாதிரி என்னை இறுக்கி வளைத்ததை நினைத்துக் கொண்டே நடந்தேன்.

பார்த்தால் சாதுபோலத் தெரிகிறார். உடம்பு மட்டும் கருங்கல்லுப்போல இருக்கிறது.

"இன்னமும் நீண்டதூரம் போக வேண்டுமா?" என்றேன் நடந்துகொண்டே. பேச்சுக் கொடுக்க ஒரு காரணம் வேண்டாமா? அதனால்தான் அப்படிக் கேட்டேன்.

"கால்வலிக்கிறதா?" என்றான் மல்லா. 'வலிக்கிறது என்று சொன்னால் தோளில், போட்டு தூக்கிக்கொண்டு போவீர்களாக்கும், என்று நினைத்தேன். கேட்கவில்லை.

"இல்லை, சும்மா கேட்டேன்!"

"பக்கத்திலேதான்!" என்றான் மல்லா. 'நானும்தான் பக்கத்தில் இருக்கிறேன்' என்று நினைத்தேன். சொல்லவில்லை.

நடு இரவானபோது மலைக் குன்றுகள் நிறைந்த ஒரு பகுதிக்கு வந்து சேர்ந்தோம்.

அங்கேயே கூடாரம் அமைத்தார்கள். கொண்டுவந்த உணவைப் பிரித்து எல்லோரும் பங்கிட்டுச் சாப்பிட்டு முடித்தோம்.

அன்றிரவு கூடாரங்களுக்கு வெளியே யார் யார் காவல் பார்ப்பது என்பதை மாதுசிங் கூறினான். அவன்தான் லெப்டினன்ட். இதெல்லாம் அவனது வேலைகள்தான் என்று தெரிந்து கொண்டேன்.

தூங்கச் செல்ல முன்னர் அனைவரையும் ஒரே இடத்திற்கு வருமாறு அழைத்தான் மல்லா.

மல்லா ஒரு கல்லின்மேல் அமர்ந்திருந்தான். அவன் இருபுறமும் லெப்டினன்ட்கள் பாரத்சிங்கும், மாதுசிங்கும் நின்றிருந்தனர்.

"பாபுசிங் குஜார் தலைவராக இருந்த போது சாதி சொல்லியே நம்மைப் பிரித்து வைத்திருந்தார். இனிமேல் நமக்குள் சாதி பார்ப்பது வேண்டவே வேண்டாம். இனிமேல் நாம் கொள்ளையடிக்கப்போவதுகூட பெரிய இடங்களாக இருக்கட்டும். பெண்கள் விஷயத்தில் நாங்கள் மிருகங்கள்போல நடந்து கொள்ளக் கூடாது. விரும்பி வந்தால் எடுத்துக் கொள்ளுங்கள். அனுபவியுங்கள். நான் தடுக்கப்போவதில்லை. கட்டாயப்படுத்துவதோ, பலத்தைக் காட்டிப் பணியவைப்பதோ குற்றமாகக் கருதப்படும். அப்படி யாராவது குற்றம் செய்தால்..."

நிறுத்திவிட்டு எல்லோரையும் ஒரு முறை பார்த்தான் மல்லா. இருட்டிலும் அவனது கண்கள் பளபளத்தன. குரலை உயர்த்தி கண்டிப்பான தோரணையில் சொன்னான் மல்லா.

"நான் மன்னிக்கவே மாட்டேன். சுட்டு விடுவேன்! போய்த் தூங்குங்கள். பொலிஸ் மோப்பம் பிடித்துத் திரிகிறது. காவலுக்கு இருப்பவர்கள் தூங்கிவிடக் கூடாது. நான் இடைக்கிடையே கவனிப்பேன்!"

'மல்லா நீதான் ஐயா **தலைவன்**' என்று உரத்துக் கூவலாமா என்று ஆசையாக இருந்தது.

எல்லோரும் கலைந்து போனபின்னர் மல்லா என்னை அழைத்தான்.

"பிடித்திருக்கிறதா?" என்றான். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

(தொடர்ந்து வரும்)

# வாழவைக்கும் காதலுக்கு ஜே
## பிரியங்கா—ரொபர்ட்



**ரா**ஜீவ் காந்தி குடும்பத்தில் ஒரு சுபகாரியம். தனது தாயார் சோனியா போலவும், தனது பாட்டியார் இந்திராகாந்தி போலவும் தனது துணைவரைத் தானே தேடிக்கொண்டார் பிரியங்கா.

இந்திராவின் காதலுக்கு அவரது தந்தை நேரு சின்ன தாய் எதிர்ப்புக் காட்டினார். இறுதியில் காதல் வென்றது.

பிரியங்காவின் காதலுக்கு ராஜீவ் காந்தி பச்சைக் கொடி காட்டியிருந்தார். (ராஜீவ் உயிரோடு இருந்தபோதே காதல் மலர்ந்து விட்டது) சோனியா தான் தயங்கினார்.

பிரியங்காவின் காதலர் ரொபர்ட் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். வசதியான குடும்பத்துப்பிள்ளை என்றாலும், ராஜீவ் காந்தி குடும்பம் அளவுக்கு வசதி படைத்த குடும்பம் அல்ல.

தாயாரைப் பணியவைத்து இறுதியில் சம்மதமும் வாங்கிவிட்டார் பிரியங்கா. எதிர் வரும் பெப்ரவரிமாதம் கல்யாணம் நடக்கப் போகிறது.

ரொபர்ட்டுக்கு 28 வயது. அவரது தந்தை ஒரு பஞ்சாபி. தாயார் ஆங்கிலோ இந்தியப் பெண்மணி.

நகைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் நடத்தி வருகிறார் ரொபர்ட்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு விருந்தில்தான் இருவரும் சந்தித்தனர். கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தன காதல் என்ற மின்சாரம் இருவர் மனதிலும் அடித்தது.

அடிக்கடி பிரியங்காவைச் சந்திக்க செல்லுவார் ரொபர்ட். ராஜீவ் காந்தியின் வீட்டுக்குச் செல்பவர்கள் பற்றி உளவுத்துறை ஆராய்ச்சி நடத்துவது வழக்கம்.

ரொபர்ட் பற்றியும் ஆராய்ச்சி செய்து ரிப்போட் கொடுத்தது உளவுத்துறை.

அந்த ரிப்போட்டைப் பார்த்துவிட்டுத் தான் தன்மகளின் காதலுக்கு பச்சைக் கொடி காட்டினாராம் ராஜீவ் காந்தி.

நீண்டகாலமாக இந்தக் காதல் விவகாரம் மிக இரகசியமாகவே இருந்தது. ரொபர்ட்டைச் சந்திக்கச் செல்லும்போது தனக்கு பாதுகாப்பாக செல்லும் அதிகாரிகளை பாதி வழியில் திருப்பி அனுப்பிவிடுவார் பிரியங்கா.

அதன்பின்னரே மெல்ல மெல்ல காதல் விவகாரம் கசியத் தொடங்கியது. இறுதியில் இரு வீட்டாரும் 'லைசன்ஸ்' கொடுத்துவிட்ட தால் கல்யாணத்தில் வந்து நிற்கிறது.

பொப் இசை, நடனம், பிராணி வளர்ப்பு, டிசைன்கள் போடுவது என்பவற்றில் ரொபர்ட்டுக்கு கொள்ளைப் பிரியம். பிரியங்காவுக்கும் அவற்றில் ஈடுபாடு உண்டு.

சோனியா காந்தி அரசியலுக்கு வர வேண்டும் என்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி அரசியலுக்கு வந்தால் சோனியா இத்தாலியைச் சேர்ந்தவர். என்னதான் இருந்தாலும் வெளிநாட்டு மருமகள். அவருக்கு எப்படி ஆட்சியைக் கொடுக்கலாம் என்று இந்து தீவிரவாதிகள் மக்களின் உணர்ச்சியைக் கிளறிவிட முனைவார்கள்.

பிரியங்கா எதிர்காலத்தில் அரசியலுக்கு வந்தால்கூட அவரை எதிர்க்க மதவாதிகளிடம் இப்போது ஒரு ஆயுதம் கிடைத்துவிட்டது. பிரியங்காவின் கணவராகப் போகும் ரொபர்ட் ஒரு கிறிஸ்தவர். இந்துக்களின் நாட்டுக்கு ஒரு கிறிஸ்தவக் குடும்பப்பெண் தலைமை தாங்க முடியுமா? என்று கேள்விகள் எழும்.

ஆனால் பிரியங்காவுக்கு அதைப்பற்றியெல்லாம் கவலையில்லை. ஏனெனில் "அரசியலின் பக்கமே திரும்பப் போவதில்லை" என்கிறார் உறுதியாக. எப்படியோ, காதலுக்கு ஜே.

# பைத்தியக்காரன் பத்தும் சொல்வான்

'பிரியங்கா என் மனைவி' என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார் ஒருவர். அவரது பெயர்: இராமகிருஷ்ண கவுடு.



புத்திசாலிப் பைத்தியம்

அவரது பின்னணி தெரியாமல் இந்தியப் பத்திரிகைகள் அந்தச் செய்திக்கு உடனடியாக முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.பின்னர் எப்படியோ அந்த ஆசாமி பற்றிய விபரங்களை அறிந்து வெளியிட்டு விட்டன.

இராமகிருஷ்ண கவுடு ஒரு புத்திசாலித்தனமான மனநோயாளி. நீண்டகாலமாகத் திட்டமிட்டு 'பிரியங்கா என் மனைவி' என்ற நாடகத்தை நடத்தியிருக்கிறான்.

தேர்தல் வாக்காளர் இடாப்பு, மற்றும் ரேஷன் காட் என்பவற்றில் தனது மனைவியின் பெயர் பிரியங்கா என்று பதிவு செய்து வைத்துக்கொண்டான். அவற்றைத் தான் தனது தரப்பு ஆதாரமாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்தான். அதனால்தான் அவனது வழக்கை விசாரிக்க வேண்டிய கட்டாயம் நீதிமன்றத்துக்கு ஏற்பட்டது.

இராமகிருஷ்ண கவுடு முன்னரும் நடிகை ஸ்ரீதேவி, ஜெயப்பிரதா போன்றோரை தனது மனைவிகள் என்று உரிமை கோரியவன். சில பெண்களை பலாத்காரம் செய்ய முயன்ற குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன.

இராமகிருஷ்ண கவுடை பதிலுக்கு பதில் புத்திசாலித்தனத்தால் மடக்கி கைது செய்துள்ளது பொலிஸ். ஆந்திர மாநில காங்கிரஸ் கட்சிப் பெண்கள் சிலரை அவன் தகாத வார்த்தைகளால் பேசியதாக ஒரு முறைப்பாட்டை பதிவு செய்துவிட்டு ஆசாமியைக் கைது செய்து நாலு தட்டுத் தட்டிவிட்டார்கள்.

அப்படியும் வழக்கை விடமாட்டேன் என்று அடம் பிடிகிறானாம். அவனது குற்றச்சாட்டை யாருமே நம்பவில்லை.

# முதல் உதவி

**தி**டீரென்று உங்களுக்கு ஏதாவது ஆகிவிட்டதா? பக்கத்தில் இருப்பவருக்கு மாரடைப்பு வந்துவிட்டதா? விபத்தில் சிக்கிக் கொண்டீர்களா? அப்படியான அவசர நேரங்களில் ஆளாளுக்கு யோசனை சொல்வார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் என்ன செய்ய வேண்டும் என்பதில் குழப்பம் வந்து விடும்.

இந்தக் குழப்பத்தைத் தவிர்க்க ஒரு புதுமையான கருவியை அமெரிக்காவில் கண்டுபிடித்து விட்டனர்.

அந்தக் கருவிக்குள் ஒவ்வொரு அவசர நேரத்துக்கும் எத்தகைய முதல் உதவிச் சிகிச்சை செய்யவேண்டும் என்று பதிவாகி இருக்கும். எந்த மாதிரியான நெருக்கடி என்று தெரிந்து கொண்டு அதற்குரிய பட்டனை அமுக்கிவிட்டால் போதும். எப்படி முதல் உதவி செய்ய வேண்டும் என்று குரல் கேட்கும்.

கேட்டுக் கேட்டுச் செய்ய வேண்டியது தான் முதலுதவியை. புதுமையான கருவி தானே!

# மலரும் நினைவுகள்

காதல் மன்னன் என்று முன்னர் அழைக்கப்பட்டவர் நடிகர் ஜெமினி கணேசன். பட்டத்திற்கு ஏற்பவே சொந்த வாழ்க்கையிலும் காதல் மன்னன் தான்.



அவரது வாயைக் கிளறி சுயசரிதை சொல்ல வைத்துள்ளார்கள். "நானாக எந்தப் பெண்ணிடமும் வலியப்போனதில்லை. பெண்கள்தான் என்னை விடாமல் இழுத்துக்கொண்டு போய் விடுவார்கள்," என்று தனது மலரும் நினைவுகளை மீட்டத் தொடங்கியுள்ளார் ஜெமினி.

போகப் போக என்னவெல்லாம் சொல்லப்போகிறாரோ என்று அவரது பழைய காதலிகளும் இந்நாள் ஆச்சிகளுமான பெண்கள் கலங்கிப் போய் இருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com


# மலேசியாவில் தைப் பூசம்



→ மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில்தான் தைப்பூசத் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது, சமீபத்தில் நடைபெற்ற தைப்பூசத் திருவிழாவில் 70 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

உடம்பில் அலகுகளைக் குத்திக்கொண்டு பக்தர்கள் வலம் வந்தனர். ஒரு பக்தர் தனது உடலில் அலகு குத்தி அதனால் தேர் இழுத்தபோது எடுக்கப்பட்ட படம்தான் இது. பக்திக்கு பலம் அதிகம்!

# தகவல் பெட்டி



## உண்டால் கிழிக்கும்

↑ அளவு சிறிதானாலும் பயங்கரமான மீன் இது. இதன் பெயர் 'அர்ச்சின்'. இதன் உடம்பில்தான் இருக்கிறது சூட்சமம். கத்தி போன்ற கூர்மையான முட்கள் உடம்பில் இருக்கின்றன. இதனை இரையாக கல்வி சுறாக்கள் விழுங்குவதுண்டு. அவ்வளவுதான், சுறாக்களின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு 'அர்ச்சின்' சொமிங் என்று வெளியே வந்து விடும். சுறாவுக்கு சாவுதான்.

## அந்தரத்தில் ஊஞ்சல்

→ பெண்களும் அசத்தலான துணிச்சலான சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.

படத்தில் பாருங்கள் தொங்கிக் கொண்டிருக்கிறார் ஒரு பெண்மணி. 169 மீட்டர் உயரமுள்ள கட்டடம் ஒன்றில் இருந்து இடுப்பில் கயிற்றைக் கட்டிக் கொண்டு தரைநோக்கித் தொங்குகிறார். கீழே விழுந்தால் சிதறு தேங்காய் ஆகிவிடுவார். ஆனாலும் பயமே இல்லாமல் தொங்கியபடி கையில் உள்ள குளிர் பானத்தை அருந்திக் கொண்டு ஹாயாக கேக்குச் சாப்பிட்டுக்கொண்டு, இடைக்கிடையே புத்தகமும் படித்துக் கொண்டு பலமணிநேரம் இப்படியே தொங்கிக் கொண்டிருந்தார்.

அவர் ஹாயாகத் தொங்கினார். கீழே நின்றவர்கள்தான் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். உலக சாதனை முயற்சியாக இது செய்யப்பட்டது. ருமேனியா தலைநகரான புச்சரெஸ்ட்டில் இந்த துணிகரச் சாதனை செய்த பெண்ணின் பெயர் ஸ்டீபன் சிக்மாண்ட். வயது 29. இளம் கன்று பயமறியாது.



## ஆழத்தில் இரகசியம்



← போகப் போக ஆழத்தில்தான் எத்தனை இரகசியங்கள். எத்தனை அதிசயங்கள்! கடலுக்கு அடியில் இறங்கிக்கொண்டே இருந்தால் கிறங்கிக் கொண்டே இருக்கலாம். படத்தில் இருக்கிறது பாருங்கள், இதன்பெயர் 'சீபேன்ஸ்' இதனைத் தாவரம் என்று சொல்லுவதா, விலங்கு என்று சொல்லுவதா என்று தெரியாமல் கடல் ஆராய்ச்சியாளர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாவரம் போலவே பார்வைக்குத் தெரியும். இதில் ஆயிரக்கணக்கான ஓட்டைகள் உள்ளன. தாவரம் என்று நினைத்து இதனை நெருங்கும் கடல் பூச்சிகள் ஓட்டைகளில் மாட்டிக்கொண்டு இரையாகிவிடுகின்றன. சிறு கடல் பூச்சிகளை கப்பென்று விழுங்கிவிடும் இந்த 'சீபேன்ஸ்'. கரீபியத் தீவுக் கடல்களுக்குள் இந்த 'சீபேன்ஸ்' ஏராளமாக உண்டாம். அழகுதான் ஆனால் ஆபத்தானவை.

## வெட்டிப் போட்டது யார்?



→ ஆட்டுக்குட்டியின் தலையை வெட்டிப் போட்டது யார்? என்கிறீர்களா?

உருளைக்கிழங்கு ஒன்றின் அதிசயத் தோற்றம்தான் இது. தமிழ்நாட்டில் தேகோட்டைப் பகுதியில் விளைந்த உருளைக் கிழங்குகளில் ஒன்றுதான் இப்படி அதிசயக் கிழங்காக காட்சியளிக்கிறது. ஆட்டுக்கிழங்கு!

# காந்தி மட்டும் அல்ல

↓ இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர் காந்தி என்று சொல்வது சுத்தமான பொய். சுதந்திரம் பெறக் காரணமானவர்களில் காந்தி முக்கியமானவர் முதல் வரிசையில் நின்றவர்களில் ஒருவர் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இந்தியச் சுதந்திரத்துக்கான போராட்டம் அமைதி வழியில் மட்டுமல்லாமல், ஆயுதப் போராட்டம் மூலமாகவும் நடைபெற்றது. ஜான்சி ராணி, பகவத்சிங், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் போன்ற பல வீரமிக்கவர்களின் உயிர்ப்பலிகளும் சுதந்திரப் போருக்கு உரமாய் அமைந்தன.

இந்திய சுதந்திரத்துக்காக தனியான இராணுவத்தை உருவாக்கியவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ். இந்திய தேசிய இராணுவம் என்பது அதன் பெயர். 1943 அக்டோபர் 21ம் திகதி தனது தலைமையில் தற்காலிக இந்திய அரசு அமைக்கப்பட்டதாக பிரகடனம் செய்தார் நேதாஜி. ஜப்பான் உட்பட ஒன்பது நாடுகள் நேதாஜி தலைமையிலான இந்திய அரசை அங்கீகரித்தன. பின்னர் இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் தோல்விகண்டதால் நேதாஜியின் இராணுவம் பலவீனமானது. நேதாஜியும் விமான விபத்து ஒன்றில் இறந்தார்.எனினும் இந்தியா சுதந்திரம் பெறும்வரை ஆயுதக் கிளர்ச்சிகள் நடந்து கொண்டே இருந்தன.

காந்தியையும், நேருவையும் முக்கியத்துவப்படுத்துமளவுக்கு நேதாஜிக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கவில்லைத் தெரியுமா? பதவிக்கு வந்த இந்திய ஆட்சியாளர்களின் பயம்தான் காரணம். நேதாஜி போன்றோரையும் அவர்களது ஆயுதப் போராட்டத்தையும் பிரபலப்படுத்தினால் தங்களுக்கு எதிராகவும் ஆயுதப் புரட்சி வெடித்துவிடுமோ என்ற பயம்தான் காரணம்.

தமது எதிரிகள் காந்தி வழியில் போராடினால் ஆபத்தில்லாமல் ஆட்சியில் இருக்கலாம் அல்லவா. நம் நாட்டிலும் சில தமிழ் அரசியல் தலைவர்கள் இளைஞர்களை தூண்டி உணர்ச்சிவசப்பட வைக்கும் தேவை இருந்தபோது பகவத்சிங் பெயரை இழுத்தார்கள். பின்னர் இளைஞர்களின் எழுச்சிகண்டு பயந்துபோன அதே தலைவர்கள் காந்தியின் பெயரைச் சொன்னார்கள்.

படத்தில் இருக்கும் காட்சி: இந்திய தேசிய இராணுவத்தின் மகளிர் படைப்பிரிவின் (ஜான்சி ராணி ரெஜிமென்ட்) அணிவகுப்பைப் பார்வையிடுகிறார் நேதாஜி. அவர் அருகில் கப்டன் டாக்டர் எஸ். லட்சுமி.

இந்தக் காட்சியில் ஒரு பகுதியைத்தான் 'இந்தியன்' படத்திலும் இணைத்திருந்தனர்.

நேதாஜியின் நூற்றாண்டு நினைவு விழா சமீபத்தில் இந்தியாவில் கொண்டாடப்பட்டது.





படிப்பகம்

www.padippakam.com

# மி னி சி னி

*மணிரத்னத்தின் 'இருவர்' படத்தில் இடம்பெற்ற 'பூ கொடியின் புன்னகை' என்ற பாடலைப்பாடியவர் சந்தியா என்ற புதிய பாடகி. இவர் பிரபல பின்னணிப் பாடகியான பி. சுசீலாவின் உறவினர்.

*'வள்ளல்' படத்தைத் தயாரித்து வரும் சத்யராஜின் மனேஜர் ராமநாதன், இது முடிந்ததும் தயாரிக்க இருக்கும் அடுத்த படத்திலும் சத்யராஜே கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கவுள்ளார்.

* பிரபு இரட்டை வேடத்தில் நடித்த 'தர்மசீலன்' படத்தை இயக்கியவர் செய்யாறு ரவி. 'தர்மசீலனு'க்குப் பின்னர் படவாய்ப்புக்கள் இல்லாதிருந்த இவர், மீண்டும் வருகிறார். இவர் இயக்கும் புதிய படத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கிறார்.

*'நசர்' என்ற இந்திப்படத்தின் மூலம் இந்தித் திரையுலகில் நுழைந்த வினிதாவுக்கு மூன்று புதிய படங்களில் நடிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த மூன்று படங்களிலும் அஜய்தேவ்கன், மிதுன் சக்கரவர்த்தி, ஜாக்கி ஷெரப் ஆகியோருக்கு ஜோடியாக நடிக்கிறார் வினிதா.

* விஜய்-சுவாதி நடித்த 'செல்வா' படத்தை இயக்கிய வெங்கடேசன். அடுத்து இயக்கும் படத்திற்கு 'கபிலன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தையும் இயக்குநர் பவித்ரனே தயாரிக்கிறார்.

*தெலுங்கில் பெருவெற்றிபெற்ற 'பெல்லி சந்தடி' படம் தமிழில் தயாரிக்கப்படவுள்ளது. இந்தப்படத்தை தமிழில் இயக்குபவர் கே. செல்வபாரதி. இவர் 'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி' போன்ற படங்களுக்கு வசனம் எழுதியவர்.

*'என்றும் அன்புடன்' படத்தை இயக்கிய பாக்யநாதன் தற்போது ராதிகாவுக்கு ஜோடியாக 'சித்திரச் சோலை' படத்தில் நடித்து வருகிறார். இவர் மீண்டும் படமொன்றை இயக்கவுள்ளார். இதில் முரளி கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

*கோவை சரளா தமிழை விட அதிகமாக தெலுங்குப் படங்களில் நடித்து வருகிறார். மௌலி இயக்கும் புதிய தெலுங்குப்படமொன்றில் கோவைசரளா எண்பது வயதுப் பாட்டி வேடத்தில் நடித்து வருகிறார்.

*சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் 'ஆஹா' படத்தைத் தயாரித்து வரும் குட்நைட் மோகன் அடுத்து, பிரபு, ஜெயராம் நடிக்கும் இரண்டு படங்களைத தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்.

*கே. பாக்யராஜிடம் உதவி இயக்குநராக இருந்த சரவணன், தற்போது பிரகாஷ்ராஜ்-சங்கீதா இணைந்து நடிக்கும் 'பிறந்தநாள்' என்ற படத்தை கே.பி. ராஜில் என்ற பெயரில் இயக்கி வருகிறார்.

## சரத்–நக்மா கலக்க[...] சத்யராஜ் சொன்ன கின[...]

சரத்குமார்-நக்மா நடித்துள்ள 'அரவிந்தன்' [...] பார்த்தாராம் சத்யராஜ். படம் முழுக்க சரத்-நக்[...] நெருக்கம் பளிச் பளிச்.

'வில்லாதிவில்லன்' படத்தில் நக்மாவை [...] போட்டுவிட்டார் சத்யராஜ் என்று விமர்சனங்க[...] தன. சத்யராஜ் சொன்னபடிதான் நடித்தேன். [...] கவர்ச்சியான போஸ் கொடுக்குமாறும் கேட்[...] நான் மறுத்து விட்டேன் என்று அப்பாவியாகப்[...] கொடுத்திருந்தார் நக்மா.

'அரவிந்தன்' படத்தில் நக்மாவின் அ[...] பயங்கரமாக இருக்கின்றன. சரத் எட்டடி பா[...] நக்மா பதினாறடி பாய்ந்து ஒத்துழைத்திருக்[...]

படத்தைப் பார்த்துவிட்டு சத்யராஜ் சொன்ன[...] இது: "வில்லாதி வில்லன்' படத்தில் நக்மாவை[...] கவர்ச்சியாகக் காட்டிவிட்டேன் என்ற குறை [...] சொல்லப்பட்டது. அந்தக் குறையை 'அரவிந்த[...] போக்கிவிட்டது." நாசூக்காக நக்மாவை குத்தி[...] சத்யராஜ்.

## 'தாலி' இல்லாத படம் உண்டா?

முதலில் ஒரு கதாநாயகி. அடுத்தது இரண்டு. வள்ளல் படத்தில் மூன்று. ஒன்றுக்கு மேற்பட்ட கதாநாயகிகள் உங்கள் சென்டிமெண்டா?

இது சத்யராஜிடம் கேட்கப்பட்ட கேள்வி. அதற்கு சத்யராஜ் சொன்ன பதில்:

"நான் என்னைக்குக்க சென்டிமெண்ட் பாத்துருக்கேன்? நமக்கு இதெல்லாம் ஒத்துவராத சமாச்சாரம். நம்ப சினிமாவில் செண்டிமெண்டுக்கு பஞ்சமே இருக்காது. கமராவில் பிலிம் இல்லாமல் படம் எடுப்பாங்க. தாலி இல்லாமல் மட்டும் படம் பண்ணமாட்டாங்க.

ஏ.வி.எம் பிள்ளையாருக்கு தேங்காய் உடைச்ச படம் ஆரம்பிச்சா ஒகோன்னு ஒடும்னு சொல்றாங்க. சிவசக்தி இந்தப் பிள்ளையார் கோயிலில் பூஜை போட்டது தான். என்னாச்சி? ஊத்திகிச்சி. அமைதிப்படைக்கு தேங்காய் இல்லை. பூசணிக்காய் இல்லை. படம் சூப்பர் ஹிட்" என்று நெத்தியடியாகப் பதில் சொல்லியிருக்கிறார் சத்யராஜ்.

## ரவீனாவின் சீற்றம்

நடிகர் அக்ஷய்குமாருடன் ரவீனா ராண்டனுக்கு திகட்டிவிட்டதா என்ன? என்ன சொல்கிறார் கேளுங்கள்:

"அக்ஷய் அக்ஷய் என்று எல்லோரும் ஏன் உயிரை வாங்குகிறீர்கள்? அக்ஷய் பற்றி நினைப்பதையும், பேசுவதையும்விட எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன.

எனக்கு ரிலாக்ஸ் தேவைப்பட்டால் யாரோடு வேண்டுமானாலும் சேர்ந்து கூடிக் குலவி தேவையானதைப் பெறமுடியும். நிம்மதியாக தூங்க முடியும். அக்ஷயை விட்டால் வேறு ஆளே இல்லாதது போல! அவரைப் பற்றியே கிண்டிக் கொண்டிருக்காதீர்கள்" என்கிறார் ரவீனா.




சரத்குமார்-நக்மா
படம்-அரவிந்தன்

## லைலா துரத்தப்பட்டார்

கலைப்புலி தாணுவின் பிரமாண்டமான தயாரிப்பு 'வி.ஐ.பி.' பிரபுதேவா, அப்பாஸ் இருவரும் நடிக்கின்றனர். ரம்பா, லைலா இருவரும் கதாநாயகிகளாக நடித்தனர். இப்போது லைலாவுக்கு கட். அவருக்குப் பதிலாக சிம்ரான் என்னும் நடிகை நடிக்கிறார்.

தயாரிப்பாளருக்கும் லைலாவுக்கும் இடையே ஏற்பட்ட கசமுசாதான் லைலாவை ஒரம்கட்டிவிடக் காரணமாம்.

இப்போது நடிக்கும் சிம்ரான் பாரதிராஜாவின் 'சிறகுகள் முறிவதில்லை' படத்தில் நடிப்பதாக இருந்தவர். பின்னர் பயூரதிராஜாவால் விலக்கப்பட்டவர். 'சிறகுகள் முறிவதில்லை' படத்தில் அகிலா என்ற புதுமுகத்தை அறிமுகம் செய்யப்போகிறார் பாரதிராஜா.

## வினிதாவை மறக்கலாமா

"நான் ஒரு படத்தில் நடித்தால் போதும், அதே பட ஹீரோ[...] இயக்குநரும் தமது அடுத்த படத்திலும் எனக்குத்தான் வாய்[...] தருவார்கள். அந்தளவுக்கு எனது ஒத்துழைப்பு இருக்கும். [...] யாரோடு பழகினாலும் என்னை அவர்கள் மறக்கவே முடியா[...] செய்துவிடுவேன்." என்றெல்லாம் தம்பட்டம் அடித்[...] வினிதா.எல்லாம் கொஞ்சக் காலம்தான். வினிதாவை தமிழ்[...] உலகம் மறந்து கொண்டிருக்கிறது.

'நான் ஒரு இந்தியன்' பட இயக்குநர்தான் வினிதா[...] மறக்கமுடியாமல் இருக்கிறார். படத்திலும் வினிதாவுக்கு முக்கிய[...] கொடுக்கும் வகையில் கதையை மாற்றினாராம். அத[...] கதாநாயகன் பாபுகணேஷ் கோபப்ப[...] கொண்டார்.

வினிதா மயக்கத்தில் படம் எடுத்த[...] படம் வெளிவரமுடியாமல் திண்டாடுகிறது[...] நஷ்டத்தை மறக்கவும் இயக்குநருக்கு வினிதாதான் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறார்.



## பெயர் மாறிய பேபி நீனா

முரசின் முகப்பில் தோன்றும் புன்னகை அழகியின் பெயர் தரங்கிணி. 'நாயகன்' படத்தில் கமலஹாசனின் மகளாக நடித்தவர். 'கேளடி கண்மணி' படத்தில் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் மகளாக தோன்றியவர். பேபி நீனா என்ற பெயரில் குழந்தை நட்சத்திரமாக இருந்தவர்தான் இப்போது இளம் நாயகியாக வளர்ந்து விட்டார். பெயரையும் மாற்றிக் கொண்டார்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் பல படங்களில் நடிக்கிறார் தரங்கிணி.

தமிழில் 'முக்குத்தி காசி' படத்தில் முக்கிய வேடமொன்றிலும், 'ராசி' படத்தில் அஜித்குமாரின் சகோதரியாகவும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

சரியாக வாய்ப்புக் கிடைத்தால் கதாநாயகியாக ஒரு ரவுண்ட் வருவேன் என்கிறார். ரசனையுள்ள இயக்குநர்கள் யாராவது வாய்ப்புக்கொடுப்பார்கள் என்று காத்திருக்கிறார் அழகான தரங்கிணி.



தேவயாணி-ஜெயஸ்ரீ
படம்-விவசாயி மகன்

## புதிய படம் 'சந்தோசம்'

'காதல் கோட்டை', 'கோகுலத்தில் சீதை' படங்களை இயக்கி பிரபலமான அகத்தியன் அடுத்து இயக்கப்போகும் படம் 'விடுகதை'. பாலச்சந்தரின் பட நிறுவனம் இதனை தயாரிக்கிறது. நடிகர், நடிகைகள் இன்னமும் முடிவாகவில்லை.

அதற்கிடையே ஒரு படத்திற்கு கதை வசனம் மட்டும் எழுதப்போகிறார் அகத்தியன்.

படத்தின் பெயர்: 'சந்தோசம்'. கதாநாயகனாக நடிப்பவர் சரவணன். படத்தை இயக்கப்போவது கார்த்திக் என்னும் புதிய இயக்குநர்

## சுகன்யாவுக்கு மிரட்ட[...]

ராமராஜனுடன் சுகன்யா இணைந்து நடித்த ப[...] கோபுரதீபம். சுகன்யா முன்னாள் அமைச்சர் கண்ணப்ப[...] காதலி. கண்ணப்பன் இப்போது ஜெயலலிதாவின் எ[...] ராமராஜன் ஜெயலலிதாவின் அபிமானி. சுகன்யாவுடன் ராமரா[...] இனிமேல் இணைந்து நடிக்கக்கூடாது என்று உத்த[...] போட்டுவிட்டாராம் அம்மா.

சந்தன வீரப்பன் தனது லேட்டஸ்ட் கசட்டிலும் சுகன்யா[...] கிண்டல் செய்திருக்கிறான். கண்ணப்பனுடன் தமிழக அரச[...] மறைமுக தொடர்பு இருப்பதால்தான் சுகன்யாவை தொல்ல[...] படுத்தாமல் இருக்கிறார்கள்.

இதற்கிடையே தி.மு.க. புள்ளிகள் சிலர் சுகன்யாவை மிர[...] தங்களுக்கும் சேவை செய்யச் சொல்லுகிறார்களாம். கண்ணப்[...] காதுக்கு விஷயம் போயிருக்கிறது. ஒரு தூதுவர் மூலம் தம[...] முதல்வர் காதுக்கு அதை அனுப்பினார் கண்ணப்பன். குறிப்[...] தனது கட்சிப் புள்ளிகளை முதல்வர் எச்சரித்திருக்கிறார[...] பாவம் சுகன்யா எல்லாப் பக்கமும் இடிபடுகிறார்.

ஷகீலா
படம்-குடும்பச்சங்கிலி


படிப்பகம்

www.padippakam.com

## சினி விசிட்

## கார்த்திக்-நக்மா 'பிஸ்தா'

கார்த்திக்-நக்மா ஜோடியாக நடித்த படம் 'மேட்டுக்குடி'. அப் படப்பிடிப்பின்போது கார்த்திக்கை கைக்குள் போட்டுக்கொண்டார் நக்மா. அந்தப் புண்ணியத்தில் தனது தங்கைக்கும் கார்த்திக் மூலம் சிபாரிசு தேடிக்கொடுத்தார்.

இப்போது மீண்டும் கார்த்திக்-நக்மா ஜோடி புதிய படமொன்றில் நடிக்கப்போகிறது. சரத்குமாரை தீவிரமாகக் காதலித்துவரும் நக்மா சமீபகாலமாக கார்த்திக்கை சந்திப்பதை தவிர்த்து வந்தார்.

இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் தனது படத்தில் நடிக்க கார்த்திக்கை அணுகினார். ஜோடியாக நடிக்க நக்மாவை சிபாரிசு செய்தாராம் கார்த்திக். மீண்டும் நக்மாவை சந்திக்க கார்த்திக் செய்த தந்திரம்தான் அது.

நக்மாவும் சம்மதித்துவிட்டாராம். இருவரும் ஜோடியாக நடிக்கப்போகும் புதிய படத்திற்கு 'பிஸ்தா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கே.எஸ். ரவிக்குமார் இயக்கப் போகும் பிஸ்தாவுக்கு இசையமைப்பவர் கே.எஸ்.ராஜ்குமார். கதை, வசனம், எம்.ஏ. கென்னடி. பாடல்கள்: காளிதாசன்.

## ஜொள்ளுவிடும் மாமா

குருதனபால் இயக்கத்தில் சத்யராஜ் நடித்த 'மாமன் மகள்', 'தாய்மாமன்' இரண்டும் சூப்பர் ஹிட்டான படங்கள்.

குருதனபால் இயக்கத்தில் இப்போது சத்யராஜ் நடித்துக் கொண்டிருக்கும் படம்: 'பெரிய மனுசன்.' இதில் சத்யராஜுக்கு இரட்டை வேடம். மாமனும் அவரே. மருமகனும் அவரே.

பெரிய மனுசனாக தோன்றும் மாமா சத்யராஜ் ஒரு ஜொள்ளுப் பேர்வழி. ஊரே மதிக்கும் கோடீஸ்வரனாக இருந்துகொண்டு திரைமறைவில் அவர் செய்யும் வில்லத்தனங்கள்தான் படத்தின் கதை. பெரிய மனுசன் சத்யராஜுக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் அம்பிகா. இன்னொருவர் கோவை சரளா. மருமகன் சத்யராஜுக்கு ஜோடி ரம்பா.

## கூடிதார் மாமி?

கமலின் அவ்வை சண்முகி இந்தியில் தயாராகப் போகிறது. மடிசார் சேலையில் தமிழில் நடித்தார் கமல். பிராமண சமூகத்தை கிண்டல் செய்துவிட்டார். ஆபாசமாக சித்தரித்து விட்டார் என்று மாமிகள் பலர் முணு முணுக்கிறார்கள்.

அதனால் இந்தியில் சுடிதார் போட்டுக்கொண்டு மாமியாக நடிக்கலாமா என்று யோசிக்கிறாராம் கமல்.

தமிழில் மீனா நடித்த வேடத்தில் இந்தியில் ஜுஹி சாவ்லா நடிக்கவுள்ளார்.

## பிடியுங்கள் தேவயாணியை

'தொட்டாச்சிணுங்கி' படம் மூலமாக கவர்ச்சிப் பாவையாக அறிமுகமானவர் தேவயாணி. அதன் பின்னர் 'கல்லூரி வாசல்' படத்திலும் கவர்ச்சியில் தூள் கிளப்பினார். சிவசக்தி படத்திலும் கவர்ச்சி நடனம் ஆடினார்.

படத்துக்குப் படம் ஆடைகளை குறைத்துக்கொண்டிருந்த தேவயாணியை 'காதல் கோட்டை' பட வெற்றி தடுத்து நிறுத்தி விட்டது.

சேலையை இழுத்து முடிக் கட்டிக் கொண்டு கலக்க ஆரம்பித்து விட்டார்.

'குடும்பப் பாங்கான வேடமா, பிடி தேவயாணியை' என்று இயக்குநர்கள் துரத்துகிறார்கள். 97ல் தேவயாணிக்கு கைவசம் நிறையப் படங்கள் இருக்கின்றன.

எக்கச்சக்கமான படங்களில் நடிக்க ஒப்பந்தமாகிவிட்டு ஓடியோடி நடித்துக் கொண்டிருக்கிறார்.

தேவயாணியின் அப்பா ஒரு மலையாளி. அம்மா கொங்கனி. "பார்த்தால் தமிழ் பெண் போலவே இருக்கிறேன். என்னை தமிழ்ப்பட உலகம் அங்கீகரித்துவிட்டதில் மகிழ்ச்சி" என்கிறார்.

இருக்காதே பின்னே. வந்தாரை வாழ வைப்பதுதானே தமிழ்ப் பண்பாடு. தமிழ்ப் படவுலகப் பண்பாடும் அதே!





வெங்கட் பிரபு-ரவிகா
படம்-பூஞ்சோலை



வினிதா
படம்-நான் ஒரு இந்தியன்

## மறுப்பால் வாய்ப்பு

ஜின்ஸ் படத்தில் நடிக்க ஷங்கர் முதலில் அணுகியது அப்பாஸை. அவர் மறுத்துவிட்டதால் அஜித்குமாரை நாடினார். தொடர்ச்சியாக நூறு நாட்கள் நடித்துக்கொடுக்க வேண்டும் என்று நிபந்தனையைக் கேட்டதும் அஜித் 'நோ' சொல்லிவிட்டார்.

அஜித், அப்பாஸ் இருவருமே பயங்கர பிஸி. அதனால் பிரசாந்தைப் பிடித்தார் ஷங்கர். அப்பாஸ் போல இருக்கட்டும் என்று பிரசாந்தின் மீசையை சுத்தமாக எடுக்கச் சொல்லிவிட்டாராம் ஷங்கர்.

### ○○○முகப்பில்○○○

| தரங்கிணி | பார்த்திபன் |
|---|---|
| படம்:-ராசி | படம்:-கல்யாணசுந்தரம் |

## சர்ச்சைக்குரிய 'இருவர்' மணிரத்னத்தின் துணிச்சல்!

மணிரத்னத்தின் 'இருவர்' படம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. எம்.ஜி.ஆர், கருணாநிதி இருவரையும் துணிந்து கிண்டல் செய்திருக்கிறார் மணிரத்னம். ஐஸ்வர்யாராயை ஜெயலலிதாவாக நடிக்க வைத்துள்ளார். கவர்ச்சி காட்டி எம்.ஜி.ஆரை மயக்கும் கெட்ட பெண்ணாக ஜெயலலிதாவை சித்தரித்துள்ளார். அண்ணாவாக நடிப்பவர் நாசர். அண்ணாவுக்கும் கிண்டல்தான்.

கருணாநிதியின் இரண்டு மனைவிகளின் சக்களத்தி சண்டைகளையும் மணிரத்னம் சொல்லியிருந்தாராம். தணிக்கைக் குழுவினர் வெட்டிவிட்டனர்.

ஈ.வே.கி சம்பத்தாக ராஜேஷ் நடித்துள்ளார். கருணாநிதியாக பிரகாஷ்ராஜ் நடித்திருக்கிறார். கருணாநிதியின் இரு மனைவிகளாக ரேவதி, தபு ஆகியோர் நடித்துள்ளனர்.

எம்.ஜி.ஆராக மோகன்லால் நடித்துள்ளார். அவரை மலையாளம் பேசவைத்து எம்.ஜி.ஆரை மலையாளி என்று நினைவூட்டுகிறார் மணிரத்னம். எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகியாக கௌதமி நடிக்கிறார்.

சகல கட்சியினரதும் ஒட்டுமொத்த எதிர்ப்பை துணிந்து சம்பாதித்துள்ளார் மணிரத்னம்.

எம்.ஜி.ஆர் சடப்படுவது, அவரது முதல் மனைவி மரணமாவது, கருணாநிதி கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்க எம்.ஜி.ஆர். வரும்போது மக்கள் அவர் பக்கம் திரும்புவது என்று பல உண்மைச் சம்பவங்களை கொஞ்சம் கற்பனை, பிரமாண்டமான படப்பிடிப்பு, சூப்பர் இசை, ஹிட் பாடல்கள் கலந்து தந்திருக்கிறார் மணிரத்னம்

படத்தைத் திரையிடாமல் செய்திருப்பார் கருணாநிதி. பெயர் கெட்டுவிட்டுமோ என்ற பயத்தில் பேசாமல் இருக்கிறார்கள்.



பிரபு-நக்மா
படம்-பெரிய தம்பி

## தைரியமான சங்கவி

மும்பாய் நடிகைகளின் கவர்ச்சிப் புயலில் அடிபட்டுப் போகாமல் தாக்குப் பிடிக்கிறார் சங்கவி. 'எத்தனை புது முகம் வந்தாலும் எனக்குக் கவலையில்லை' என்று படு தைரியமாகச் சொல்கிறார். அவரது தைரியத்துக்குக் காரணம் தன்னம்பிக்கை. தன்னம்பிக்கைக்கு காரணம் தன் கவர்ச்சியில் நம்பிக்கை.

'இனி எல்லாம் சுகமே' படத்தில் அப்பாஸுடன் ஜோடியாக நடிக்கிறார். 'மன்னவா' படத்தில் பிரசாந்தின் ஜோடியாக நடித்தார். முன்னர் விஜயுடன் நடித்தார். இளம் ஹீரோக்கள் மத்தியில் சங்கவி என்றால் ஒரு கிளு கிளுப்புத்தான்.

'தினமும் என்னைக் கவனி' படத்தில் கட்டைப் பாவாடை, குட்டை ரவிக்கை சகிதம் ஒரு கவர்ச்சி விருந்தே படைத்திருக்கிறாராம். சங்கவியின் துணிச்சல் யாருக்கு வரும்?

## பெயர் இரகசியம்

ஊர்வசி என்று ஒரு விருதுக்கும் பெயர் இருக்கிறது. நடிகை ஊர்வசிக்கு அந்தப் பெயரை ஏன் சூட்டினார்கள்? ஊர்வசியே தனது பெயர் இரகசியத்தைச் சொல்லுகிறார்.

"என் சொந்தப் பெயர் மனோரஞ்சனி. 'தொடரும் உறவு' படத்தில் கார்த்திக்குடன் ஜோடியாக நடித்தேன். அப்போது எனக்கு என்ன பெயர் சூட்டலாம் என்று ஊர்வசி ஹோட்டலில் வைத்து ஆலோசனை நடந்தது. வேறு நல்ல பெயர் கிடைக்காததால் ஊர்வசி என்று அந்த ஹோட்டலின் பெயரையே வைத்துவிட்டார்கள்." என்கிறார் ஊர்வசி.

ஊர்வசி பற்றி மற்றொரு செய்தி: ஆர்.சி.சக்தி இயக்கும் படம்: 'இத்தனை நாள் எங்கிருந்தாய்?' ஊர்வசிதான் கதாநாயகியாக நடிப்பதாக இருந்தது. இப்போது ஊர்வசியைத் தூக்கிவிட்டு குஷ்புவை ஒப்பந்தம் செய்துள்ளார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# பிரசவத்திற்குத் தயாராகும் பெண்களுக்கு.....

## உபயோகமான யோசனைகள்

பிரசவத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் கர்ப்பிணிப் பெண்களில் நீங்களும் ஒருவரா? பிறக்கப்போகும் குழந்தையைப் பற்றிய கனவுகளிலும், கற்பனைகளிலுமே பத்து மாதங்களையும் செலவிடும் சராசரிப் பெண்மணியாக நீங்களும் இருந்துவிடாதீர்கள். புத்தம் புதிய உலகில் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கவரவிருக்கும் உங்கள் குழந்தைக்காக, பிரசவ காலத்திற்கு முன்பிருந்தே சில முன்னேற்பாடுகளைச் செய்து வரவேண்டியது உங்கள் கடமையல்லவா?



மருத்துவர் உங்களிடம் தெரிவித்துள்ள பிரசவ நாளுக்கு மூன்று வாரங்களுக்கு முன்பே, பிரசவத்திற்குப்பிறகு உங்களுக்கும், உங்கள் குழந்தைக்கும் தேவையான பொருட்களைக் கவனமாக எடுத்துவைப்பது, குழந்தை பிறப்பிற்குப் பிறகான உங்களது பதட்டநிலையினைப் பாதியாகக் குறைத்துவிடும்.

பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன் நீங்கள் தயாராக வைத்துக் கொள்ள வேண்டியவை:

* மென்மையான, சுத்தமான பேபி சோப்.
* பேபி கிறீம் மற்றும் பேபி ஒயில்.
* ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நிப்பிள்களுடன் கூடிய பால் புகட்டும் போத்தல்.
* தண்ணீர் வைக்க ஒரு சிறிய கூஜா மற்றும் வட்ட வடிவ கரண்டி.
* பஞ்சு.
* சுத்தமான துவாய்.
* குழந்தையைச் சுற்றி வைத்துக் கொள்ளுமளவு பெரிய துவாய்கள்.
* தொற்றுநீக்கித் திரவம் (அன்ரிசெப்டிக் லோஷன்)

குழந்தை பிறந்ததும் அதற்கு அதிக அளவில் உடைகள் தேவைப்படாது. குளிர் காலத்தில் குழந்தையைக் கம்பளியிலோ, அழுத்தமான போர்வையிலோ சுற்றுவதைத் தவிர்க்க வேண்டியது அவசியம். அதற்குப் பதிலாக தேவைப்பட்டால் குழந்தைக்கு-ஸ்வெட்டர், தலையில் குல்லா மற்றும் கால்களுக்கு சொக்ஸ் மட்டும் அணிவிக்கலாம். குழந்தைகளை அழகாக்கும் எண்ணத்தில் அதற்கு அளவுக்கதிகமான ஃப்ரில்களுடனும், லேஸ் மற்றும் பொத்தான்களுடனும் கூடிய கனமான ஆடைகளை அணிவிப்பது நல்லதல்ல.

குழந்தையை வீட்டிற்கு அழைத்து வரும்போது தயார் நிலையில் இருக்க வேண்டியவை:

* பின்புறம் திறந்தபடியோ அல்லது நாடா வைத்துக் சட்டியபடியோ இருக்கும் சிறிய சட்டைகள்.
* குளிர்க்காலமாக இருப்பின் ஸ்வெட்டர்கள்.
* பழைய, சுத்தமான புடவை அல்லது வேட்டிகளில் இருந்து தயாரிக்கப்பட்ட நாப்கின்கள். இவற்றை 45 சென்டிமீட்டர் அளவிலான துணிகளாக வெட்டி வைத்துக் கொள்ளலாம். குழந்தை சிறுநீர் அல்லது மலம் கழிக்கும்போது இவற்றை உபயோகப்படுத்திவிட்டு, உடனுக்குடன் அப்புறப்படுத்தி விடுதல் நல்லது.
* சிறிய, மெல்லிய தலையணைகள் மற்றும் தலையணை உறைகள்.
* தொட்டிலைச் சுற்றி மூடும் வகையில் கொசுவலை.
* ரப்பர் ஷீட்கள்.
* டொய்லட் பேப்பர்கள்.
* ஒரு சுடுநீர்ப் போத்தல்.

குழந்தை அவ்வப்போது சிறுநீர் அல்லது மலம் கழிக்கும்போது, உடனுக்குடன் அதன் உறுப்புக்களை வெதுவெதுப்பான தண்ணீர் மற்றும் மிருதுவான சோப் கலந்து துடைத்துச் சுத்தப்படுத்த வேண்டும். குழந்தையின் உடல் ஈரம் போகக் காய்ந்ததும், பேபி ஒயிலோ, லோஷனோ தடவிவிட்டு நாப்கின் அணிவிக்கலாம். குழந்தைக்குப் பவுடர் போடும் போது, அது அதன் மூக்கினுள் செல்லாதவாறு பொறுமையாகப் போட வேண்டும். குழந்தையின் கண்களுக்கு மை தீட்டுவதையும் தவிர்க்கவும். குழந்தைக்கு உபயோகிக்கும் துணிகள் அனைத்தும் தொற்றுநீக்கித் திரவக் (அன்டிசெப்டிக்) கரைசலில் அலசப்பட்டு, வெயிலில்காய வைக்கப்பட வேண்டும்.

மருத்துவமனையில் இருக்கும்போது தாய்மார்கள் தயாராக வைத்திருக்க வேண்டியவை:

* சுத்தமான துவாய்கள்
* பற்பசை மற்றும் பிரஷ்
* பாலூட்டுவதற்கு ஏதுவான நைட்டிகள் மற்றும் உள்ளாடைகள்.
* தேவையான அழகுசாதனப் பொருட்கள்.
* ஒவ்வொரு முறை குழந்தைக்குப் பாலூட்டுவதற்கு முன்பு மார்பகங்களை மசாஜ் செய்ய ஒரு போத்தல் ஒலிவ் ஒயில். மசாஜ் செய்தபின்னர் மார்பகங்களைச் சுத்தமாகத் துடைத்துவிட வேண்டியது அவசியம்.

# நம்பலாமா நாங்களும்?

## பெண்புத்தி பின் புத்தி....

'பெண் புத்தி பின் புத்தி' என்று ஒரு பழமொழி நிலவுகின்றது. மனிதர்களின் புத்திக்கூர்மை அவரவர்களின் மூளை எந்த அளவில் உள்ளதோ அதற்கேற்ப அமையும் என்பது உண்மை. பார்ப்பதற்கு வேண்டுமானால், ஆண்களின் மூளையை விடப் பெண்களின் மூளை சிறியது போல் தோன்றலாம். ஆனால் மூளையின் அளவு ஒவ்வொருவரின் உடல் எடை, அமைப்பு, வயது, இனம் ஆகியவற்றைப் பொறுத்து அதற்கேற்ப அமைகின்றது. அப்படிப்பார்க்கும் போது ஆண், பெண் இருவரின் மூளையின் அளவும் ஒன்றுதான்.



## ஷம்பூ போட்டுக் குளிக்காதீர்கள்!

"அடிக்கடி ஷம்பூ போட்டுக் குளிக்காதே, தலைமுடியெல்லாம் கொட்டிப் போய்விடும்," என்று வீட்டில் உள்ளவர்களோ அல்லது சிநேகிதிகளோ அடிக்கடி அட்வைஸ் பண்ணிக்கொண்டிருப்பார்கள். இது தவறானது. உண்மையில் நாளொன்றுக்கு ஐம்பது முதல் நூறு முடிகள் உதிர்வது சாதாரண விஷயம். ஷம்பூ போட்டுக் குளித்தாலும் சரி, ஷம்பூ போடாமல் குளித்தாலும் சரி, இது நிகழும். ஆனால் இதற்கு அதிகமாக முடி உதிர்ந்தால் அதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். நாளமில்லா சுரப்பிகளின் குறைபாடு, தூக்கமின்மை, நாட்பட்ட நோய்கள் போன்றவற்றை உதாரணமாகச் சொல்லலாம்.

## சிவப்பான குழந்தை வேண்டுமா?

கர்ப்பிணிப் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்று அவரவர்கள், தங்கள் காதுவழி கேட்ட செய்திகளைக் கொண்டு ஆலோசனைகள் வழங்குவதைப் பார்த்திருப்பீர்கள். "குழந்தை சிவப்பாக இருக்க வேண்டுமா? பாலில் குங்குமப்பூ போட்டுப் பருகினால் பிறக்கும் குழந்தை நல்ல சிவப்பாக இருக்கும்," என்று கூறுவார்கள். இது முற்றிலும் தவறானது. பால் குடிப்பது கருவில் இருக்கும் சிசுவிற்கு விட்டமின் சத்துக்களைத் தர உதவலாம். ஆனால் குழந்தையின் குணம், நிறம் போன்றவற்றையெல்லாம் ஆண், பெண் கரு அணுக்களில் உள்ள பாரம்பரிய சக்திதான் தீர்மானிக்கும்.

# பிஸியான கணவனா?



"என் கணவருக்கு என் மீது அக்கறையே இல்லை. அவருக்கு எப்போதும் தனது வேலை, தொழில், அலுவலகம் ஆகியவற்றைப் பற்றிய சிந்தனைகள்தான்," என்று அலுத்துக்கொள்ளும் பெண்கள் பலர். வேலையை நேசிக்கும் கணவரைக் குறை கூறிக்கொண்டிருப்பதாலோ, சண்டை போடுவதாலோ, கணவரது மனத்தை மாற்றி விட முடியாது. அவரது கவனம் உங்கள் பக்கம் திரும்ப சில ஆலோசனைகள்:

* உங்கள் கணவரது வேலையைக் குறை கூறுவதைத் தவிர்த்து, முடிந்தால் அவருக்கு வேலையில் ஏதேனும் உதவிகள் செய்யவோ, ஆலோசனைகள் சொல்லவோ முயற்சி செய்யுங்கள். இதன் மூலம் உங்களை அறியாமல் உங்கள் மனம் திசை திரும்பும்.
* ஒவ்வொரு விஷயத்திற்கும் உங்கள் கணவரது உதவியையும், துணையையும் எதிர்பார்க்காமல், சுயமாகச் செயற்படக் கற்றுக்கொள்ளுங்கள்.
* உங்களுக்கென ஒரு நட்பு வட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஓய்வு நேரத்தைத் தனிமையில் கழிக்காமல், அவர்களுடன் செலவிடுங்கள்.
* வேலைச் சுமை காரணமாக உங்கள் கணவர், உங்களுடனும் குழந்தைகளுடனும் போதிய நேரத்தைச் செலவிட முடியாமல் இருக்கக்கூடும். அதற்காக மற்ற ஆண்களுடன் அவரை ஒப்பிட்டுப் பேசுவதையும், அவரது இயலாமையைச் சுட்டிக்காட்டுவதையும் தவிர்த்து விடுங்கள். நேரம் கிடைக்கும்போது, உங்கள் உணர்வுகளை அவருக்குப் பக்குவமாகச் சொல்லிப் புரிய வைக்க முயற்சி செய்யுங்கள்.
* திருமணத்திற்கு முன்பு நீங்கள் ஏதேனும் பயனுள்ள பொழுதுபோக்கிலோ, கலைகளிலோ ஈடுபட்டிருக்கலாம். திருமணத்திற்குப் பிறகு அவற்றில் முறையாகக் கவனம் செலுத்த முடியாமல் போயிருக்கலாம். கணவர் அருகில் இல்லாத உணர்வை மறக்க மீண்டும் உங்களுக்கு விருப்பமான விஷயங்கள் சிலவற்றில் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். இது உங்கள் கணவரது கவனத்தைக் கண்டிப்பாக உங்கள் பக்கம் திரும்பச் செய்யும்.

# யோகம் நல்ல யோகம்

## உச்சி முதல் - உள்ளங்கால் வரை

ஓர் ஆணையோ, பெண்ணையோ பார்த்தவுடன் வட்டமான முகம், நேர்த்தியான புருவம், கயல் விழி, ரோஜா நிறப்பாதம் என்றெல்லாம் அளவீடு செய்கின்றோம் அல்லவா? இந்த அங்க அமைப்பை வைத்துக்கூட அதிஷ்ட பலன்களைக் கூறி விடலாமாம். இதோ அந்தப் பலன்கள்:

### பாதம்

<u>சிவப்பு நிறப்பாதம்:</u>
அதிஷ்ட சாலி, பெயர்-புகழ் பெறுவார்.

<u>ரோஜா நிறப்பாதம்:</u>
யோகம்: ஆனால் வாழ்க்கையின் பிற்பகுதியில் தான் யோகம் உண்டு.

<u>வெள்ளை நிறப்பாதம்:</u>
அபாயம், நோய், துன்பம், வாழ்க்கையில் கஷ்டம்.

### கண்கள்

<u>மீன்போன்ற கண்கள்:</u>
யோகம், வீடு, மனை, வாகனம் உண்டு.

<u>சிவந்த கண்:</u>
அதிஷ்டசாலி, பொன், பொருள் கிடைக்கும்.

<u>பெரிய கண்:</u>
யோக்கியமானவர், காதல் மனம் கொண்டவர்.

<u>சிறிய கண்:</u>
புத்திக் கூர்மை கொண்டவர். வாழ்க்கையில் பல வெற்றி உண்டு.

### புருவம்

<u>வளைவான புருவம்:</u>
திடமானவர்: வெற்றி, வீரம், உணர்ச்சி வசப்படுபவர். உடனே புரிந்து கொள்ளும் தன்மை, ஒழுக்கமான குணங்கள் உள்ளவர்.

<u>அடர்த்தியான புருவம்:</u>
தலைமையான, உயர்ந்த, பலமான அதிகாரம் செலுத்துபவர்.

<u>அடர்த்தியான வெட்டுள்ள புருவம்:</u>
சோம்பல், சுயநலம், தெளிவற்ற நிலை.

<u>கோடு போன்ற புருவம்:</u>
துன்பம், கவலை, நோய்.

<u>ஒழுங்கான, அடர்த்தியான, வளைந்த புருவம்:</u>
கவர்ச்சியான பேச்சு, வெற்றி, தன்னம்பிக்கை, சந்தோஷம்.

### முகம்

<u>சதுரமுகம்:</u>
தைரியம், துன்பத்தைத் தாங்குவார், துன்பத்தை நீக்கும் திறமை உள்ளவர், அறிவாளி, மரியாதை உள்ளவர்.

<u>வட்டமுகம்:</u>
வெற்றி, சந்தோஷம், புகழ், பொன்-பொருள் உடையவர்.

<u>முட்டை வடிவ முகம்:</u>
எதையும் தாங்கும் இதயம், புத்திசாலி, திடமானவர்.

### நெற்றி

<u>அகன்ற நெற்றி:</u>
அகன்ற நெற்றியில் குறுக்குக் கோடுகள் இல்லாமல் இருந்தால் அறிவாளி. நல்ல எதிர்காலம். விஞ்ஞானிகள் மற்றும் உலகப் புகழ்பெற்றவர் பலருக்கு நெற்றி அகன்று இருந்தது. பெயர், புகழ், சாதனைகள், புலமை, எழுத்துத் துறையில் முன்னேற்றம் கிடைக்கும்.

<u>சின்ன நெற்றி:</u>
சின்ன நெற்றியில் குறுக்குக் கோடுகள் இல்லையென்றால் கஷ்டமான வாழ்க்கை,



துன்பம், கடன், நோய், வாழ்க்கையே போராட்டம். காரியங்களில் தடை ஏற்படும். இவர்கள் காதல் மணம் புரிவார்கள். அதிலும் போராட்டம்தான்.

<u>வளைந்த கோடுகள் உள்ள நெற்றி:</u>
நல்ல எதிர்காலம், எதிலும் வெற்றி, பெரிய தொழிலதிபர், பெரிய சாதனையாளர்கள் இவர்களுக்குத்தான் இப்படிப் பட்ட நெற்றி இருக்கும்.

<u>நெற்றியில் மூன்று கோடுகள் மட்டும்:</u>
நெற்றியில் மூன்று கோடுகள் உள்ளவர்கள் தெய்வ அருள் பெற்றவர்கள். இவர்களுக்கு யோகம் உண்டு. புகழ், பெயர், ஆடம்பரம் எல்லாம் கிடைக்கும்.

<u>சதுர வட்டக் கோண நெற்றி:</u>
இப்படி நெற்றியுள்ளவர்கள் மிகவும் புகழ் பெறுவார்கள். சினிமா, அரசியல் போன்ற துறைகளில் இருப்பார்கள். இவர்கள் சொந்த முயற்சியால் வெற்றி பெறுவார்கள். இவர்கள் முன்னேற்றத்தை யாரும் தடுக்க முடியாது.

(மிகுதி அடுத்த வாரம்)

# லேடீஸ் ஸ்பெஷல்

சமைப்போம் · சுவைப்போம்

தொகுத்துத் தருவது: சுகந்தினி

## ரைஸ் ரிசோட்ஸ்

<u>தேவையானவை:</u>
சோறு-2 கப்
பெரிய வெங்காயம்-1
பச்சை மிளகாய்- 2
இஞ்சி- 1 சிறிய துண்டு
மிளகாய்த்தூள்-1 தேக்கரண்டி
கொத்தமல்லி-1 தேக்கரண்டி
உப்பு-தேவையான அளவு
பாண்தூள்-தேவையான அளவு
எண்ணெய்- தேவையான அளவு

<u>செய்முறை:</u>
சோற்றை ஒரு பாத்திரத்தில் கொட்டி நன்றாக மசித்துக் கொள்ள வேண்டும். வெங்காயத்தை நறுக்கவும். இஞ்சி, பச்சை மிளகாய் ஆகியவற்றைப் பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். வாணலியில் சிறிதளவு எண்ணெய்விட்டு நன்கு கொதித்ததும் வெங்காயம், மிளகாய், இஞ்சி, கொத்தமல்லி, உப்பு, மிளகாய்த்தூள் ஆகியவற்றைச் சேர்த்து நன்கு வதக்கி சோற்றில் கொட்டி நன்றாகக் கிளறவும்.

பின்னர் கலவையைச் சிறிய அளவுள்ள நீள உருண்டைகளாக்கி பாண் தூளில் புரட்டி எடுத்து எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். இதைச் சம்பலோடு சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

## சமையலறை யோசனைகள்

* பூண்டின் தோலை உரிக்க வேண்டுமானால் சிறிது நேரம் பிடிக்கும். ஆகையால் சிறிது நேரம் வெந்நீரில் பூண்டை ஊற வைத்து விட்டு, அதன் பின்னர் எடுத்து உரித்தால் சுலபமாக உரித்து விடலாம்.
* தேங்காய் உடைக்கும்போது சில சமயம் மூடி பெரியதாகவும், சிறியதாகவும் உடைந்து விடும். அல்லது கோணல் மாணலாக உடைந்து விடும். இதனைத் தவிர்க்க தேங்காயைச் சிறிது நேரம் தண்ணீரில் ஊற வைத்து நடுவில் தட்டினால் சமமாக உடையும்
* வீடுகளில் இலையான் தொல்லையா? இலையான்களை விரட்ட சிறிதளவு வசம்பை அல்லது சமையலுக்குப் பயன்படும் உப்பைத் தண்ணீரில் கரைத்து, வீடு முழுவதும் தெளித்தால் அந்த இடத்தில் இலையான்கள் தலை காட்டாது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை BB

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷடசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-02-1997

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

திருமதி சிமித்திரா பற்பநாதன்
18/1,அலோ அவனியூ கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

## இந்தக் காயம் ஆறுவதில்லை...!

உனோடு வாழ
நூறு வாழ்வும்
நிச்சயமாய்ப் போதாதென
நான் நினைத்திருந்த வேளை
நிமிட வாழ்வு கூட
இல்லாமற் போனது!
-o-
தாவணித் தொங்கலை
முகத்தருகே
பொத்திப் பிடித்தவாறு
விசித்து விசித்தழுத
பௌர்ணமி இரவுகளில்
எனது தலையணை
கண்ணீரில் மிதந்தது!
-o-
நீ- யுவதிகளை
எப்போதும்
திகைக்க வைக்கிறாய்!
உன் இமைகளுக்குள்
அநேக முகங்களைச்
சிறைப் பிடிக்கிறாய்!
என் அன்புக்கு
அப்பாற் பட்டவனாக
அலைந்து திரிகிறாய்!
வேறெதை நான்
கூற முடியும்...?
-o-
எனது இதயமே!
அன்பின்
ஆரம்பத்தையுடைய
எனது பின்னால் தான
அடியெடுத்து வந்தாய்!
-o-
காதலின் மர்மங்களை
எனது எழுதுகோல்தானே
உனக் கெடுத்தோதியது?
-o-
நல்லதோ, கெட்டதோ
நான் சொன்னவைகளில்
ஏராளமானவை
உனக்கன்று
பேதமாகத் தெரிந்ததால் தானே
உருகி, உருகி
ஓதிக் கொண்டிருந்தாய்!
-o-
இன்று,
ஆதாரங்களுக்கு
அப்பாற்பட்டவையாக
உன் காதலும்
என் கனவுகளும்
அடிபட்டுப் போயின!
-o-
கடந்த காலம் மாத்திரம்
கல் வெட்டுப் போல
என் நெஞ்சில்
செதுக்கப்பட்டுள்ளது!
-o-
உன் கடிதங்களும்
நிழற்படங்களும்
தாயத்தும் போல
என்னிடம் உள்ளன:
எந்த நம்பிக்கையில்
அவற்றைக் காத்துவருகிறேன்
என்பது எனக்கே தெரியவில்லை!
-o-
காணிக்கைகளைத்
தீண்டக் கூடாது என்பதற்காக
உனக்கான
கனவுகளையெல்லாம்
உனோடு விட்டு விட்டேன்!
-o-
வரங்களைத் தான்
வேண்டினேன்:
சாபங்களைச் சுட்டி
என் முகத்தில்
எறிந்து போனது விதி!

செல்வி பஹீமா ஜஹான்,
மெல்சிரிபுர.

## உடைந்து போகும் ஒரு சூரியன்

ஒரு
சூரியன்
உதயத்திலேயே
உடைந்து
போய் விட்டது!
* *
அஸ்தமிக்கும்
சூரியன்
அதிகாலையில்
புதிதாய் உதித்துவிடும்-ஆனால்
உதயத்திலேயே
உடைந்து போன
சூரியன் நான்!
* *
தண்ணீரிலேயே
தவழ்ந்து வரும்
தாமரையும்
தண்ணீரை
தன்னுடனே ஒட்டுவதில்லை;
என்
இதயத்தில்
இருக்கும்
உன்னை
எண்ணி எண்ணி
உயிர் வாழும்
என்னை-உனக்கும்
பிடிக்கவில்லை.
* *
உன்னால் ஒரு
அன்பு
உதித்தது-அது
உன்னால்
இன்று
உடைந்து போகின்றது.....!
* *
விடியலுக்கும்
விடி வெள்ளிக்கும்-வேறு
வேலையில்லை;
என் வாழ்க்கை
விடியாத போது
உலகம்
விடிந்தது என்பது
பொய்தானே!?

மொரதுறை-
எல்.கே. நாதன்.

## மாற்றங்கள்

நிலாவை வரச்சொல்....!
கண்களில் காய்ந்த
குருதிப்புனலில்
விழுந்து தொடுத்து
விளையாடப் போகிறேன்:
நிலாவை வரச்சொல்.....!
***
சந்திர முலைக்காம்பில்
ஏகாந்தத்தை
அள்ளிப் பருகியதும்
மனசு நிறைய
காதலைக்கொய்து
இதய ஆலையில்
அரைத்து அரைத்து
அழிந்து போனதும் போதும்!
***
என் நரைத்துப்போன
கனவை வரச்சொல்...!
கடைசி முத்தம்
கொடுத்துவிட்டு
இந்தப் போலி உடம்பை
எரித்துவிடப்போகிறேன்!
என் நரைத்துப் போன
கனவை வரச்சொல்.....!
***
சரித்திரம் சொல்லிச் சொல்லி
புளித்துப்போன
இந்தக் காதலை
வைத்துக்கொண்டு
ஏன் இன்னும்....
இந்த ஆத்மாக்களை
சிதைத்துக்கொள்ள வேண்டும்?
***
ஒளிந்துகொள்....!
காமம்...
காதல்....
எல்லாம்
கரைந்து ஒழுகி ஓடட்டும்.....
புதிய மாற்றங்கள்
பிரசவிக்கட்டும்!

சம்மாந்துறை- ஏயெம்மே நிலாம்.

## தேன் கிண்ணம்

## பேசு கிளியே பேசு!

உன் தரிசனங்கள்
வரிசையாக
இதயம் அடுக்கி
நான் படுத்துக்கிடக்கிறேன்.
இப்போது என் இளமை
நிற்பது போலிருக்கிறது.
சுவாசங்கள்
சந்திப்பு நடத்தும்
ஊமை அறைக்குள்
நீ விழுவதால்
என்
உணர்வுகள்
பாம்புகளாக
எனக்குள்!
**
மொழி இல்லாதவளா
நீ?
மொழி கல்லாதவளா
நீ?
**
உன்
பார்வைப் பௌர்ணமி
கடிதம் போடுதே!
உன் வார்த்தைகளுக்காக
நான் ராத்திரிகளால்
கொல்லப்படுகிறேன்.
**
நீ
மௌனத்திற்கு
மரியாதை கொடுக்கிறாய்!
நான்
சுவாசித்துக் கொண்டே
இறந்து கிடக்கிறேன்!
**
பேசுகிளியே
பேசு!
**
உன் இதயம்
பிரம்புகளால்
பின்னப்பட்டதா?
நரம்புகளை
இழந்தவளா நீ?
**
உன் குரலுக்கு
காதல் வர்ணம்
பூசு!
உன் உணர்வால்
பழுதான
என் நாட்கள்
அழகு தழுவட்டும்!
**
நான் வெளிச்சம்!
என்னை
இருளாக நினைத்து
உன்னை
உனக்குள் புதைக்காமல்
என்னில் விதை!
**
கதவுகள் இல்லாத
இதயம் நான்!
என் இதயம்
இப்போது
திறந்து கிடக்கிறது;
உன்னோடு
சேர்ந்தே
விரைந்து நடக்கிறது.
**
என்
எழில் நதியே!
நான்
கடலாகக் கிடக்கிறேன்!
நீ
எப்போது
நதியாகப் போகிறாய்?
**

நிந்ததாசன்.

## நாடும் நாங்களும்

அராஜக வெயிலில்
கருகிக் கிடக்கிறோம்!
அநீதி மழையில்
நனைந்து தவிக்கிறோம்!
▫▫
சுதந்திர வீட்டை
கட்டிய முன்னோர்
பலமான
சமத்துவ அடித்தளம்
இட்டாரில்லை.
▫▫
அடக்குமுறைக் கறையான்
மெல்லியதாய் அரித்ததை
பெரிதாய் பெரியோர்
எண்ணினாரில்லை.
▫▫
இனவாத எலிகள்
கூரையில் கூடி
குஞ்சு பொரித்ததை
கருதினாரில்லை.
▫▫
வீட்டுச் சிறுவர்கள்
சுட்டிக் காட்ட
கணக்கிலெடுக்காது
கதிரையில் இருந்தனர்!
▫▫
எல்லாம் தகர்ந்து
வீழும் தறுவாயில்
இனவாத முட்டு
கொடுத்து தோற்றனர்.
▫▫
இடிந்து வீழ்ந்த
சிதைவு நெரிசலில்
வீழ்ந்து கிடந்து
எழுந்து நிமிர
எத்தனை பாடுகள்!
எத்தனை முயற்சிகள்!
▫▫

எஸ். புஸ்பானந்தன்.

## யார் இவர்கள்?



↑ தாய்-தந்தை-உடன் பிறந்த சகோதரர் சகிதம் அமர்ந்திருக்கும் சிறுமி யார் தெரிகிறதா? பிரபலமானவர். உங்களுக்கெல்லாம் நன்கு நன்கு தெரிந்தவர். கலைகளில் வல்லவர். யார் என்று கண்டுபிடித்துவிட்டீர்களா?



இந்த அழகான இளைஞனை எங்கோ பார்த்த ஞாபகம் வருகிறதல்லவா? கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் தெரிந்து கொள்வீர்கள். யார் தெரிகிறதா? இன்று பிரபலமாக உள்ள இந்த இளைஞர் முன்னர் விளம்பரப் படங்களில் நடித்தபோது எடுத்த படம் இது. -

விடைகள் பக்கம் 18ல்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(02.02.1997 தொடக்கம் 08.02.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன், வியாழன், வெள்ளி. |
| மீனம் | - சனி, கேது. |
| கன்னி | - இராகு, செவ்வாய். |

★ சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தொழில் உயர்ச்சி. | பகல் | 1 | மணி |
| புதன்- கடன் படல், மனக் கவலை. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- அந்நியர் பகை, கௌரவக் குறைவு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| சனி- உறவினர் இழப்பு, மனக் கவலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, செல்வாக்கு நிலை. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மனக் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் விருத்தி, இனசன நன்மை. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பொருள் வரவு குன்றும். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- காரியசித்தி, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரியத்தடை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன்- வீண் முயற்சி, தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செல்வாக்கு நிலை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | மு.ப. | 10 | மணி |
| சனி- உறவினர் உதவி, பலவித நன்மை. | மு.ப. | 9 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- பிரயாண மிகுதி, இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன் - வீண் குறை கேட்டல், அந்நியர் நட்பு. | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பண வரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை | 8 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் இலாபம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- உறவினர் உதவி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- கடன் தொல்லை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| சனி- புதிய தொழில், பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், அந்நியர் உதவி. | பகல் | 2 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| புதன்- கௌரவம், பயனுள்ள செயல். | பகல் | 12 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை | 7 | மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கடன் படல். | பி.ப. | 1 | மணி |
| புதன்- காரியானுகூலம், பெரியோர் உதவி. | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- பொருள் வரவு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், மனக்கிலேசம். | பகல் | 12 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, தொழில் பேறு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், கடன் தொல்லை. | மு.ப. | 9 | மணி |
| சனி- செலவு மிகுதி, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, கடன் படல். | பி.ப. | 1 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்





## கற்றுக் கொள்

பூக்களைப் பார்
சிரிப்பைக் கற்றுக் கொள்!
நாய்களைப் பார்
நன்றியைக் கற்றுக் கொள்!

எறும்புகளைப் பார்
உழைப்பைக் கற்றுக் கொள்!
காக்கையைப் பார்
ஒற்றுமையைக் கற்றுக் கொள்!

அலையைப் பார்
முயற்சியைக் கற்றுக் கொள்!
கொக்குகளைப் பார்
பொறுமையைக் கற்றுக் கொள்!

தேனீக்களைப் பார்
சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்!
மரங்களைப் பார்
உதவும் குணத்தைக் கற்றுக் கொள்!

-ஆர்.வி.பதி-

பாருக்குள்ளே சமத்தன்மை தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்குந் தீமைசெய் யாது-புவி
யெங்கும் விடுதலை செய்யும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# மணற்கோட்டையான மனக்கோட்டை

ஓர் ஊரில் ஓர் இடையன் இருந்தான். அவனுக்கு சுந்தரி என்னும் மகள் இருந்தாள். அவள் நல்ல அழகி. தான் அழகி என்பதால் அவளுக்குக் கர்வம் உண்டு.

வீட்டில் அவள் பெற்றோர் கறந்து கொடுக்கும் பாலை அவள் ஒரு குடத்தில் எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு அயலூர் சென்று விற்று வருவாள்.

ஒரு நாள் சுந்தரி தலையில் பால் குடத்தைச் சுமந்து கொண்டு அடுத்த ஊருக்குப் புறப்பட்டாள். வழியில் நடந்து செல்லும் போது தனக்குள் பலவிதமாக மனக்கோட்டைகள் கட்டுவதில் ஈடுபட்டாள்.

'இன்று பாலை மிகவும் சிரமம் எடுத்து நல்ல விலைக்கு விற்பேன். விற்ற பணத்தைக் கொண்டு, இருபது கோழி முட்டைகள் வாங்குவேன். அந்த இருபது கோழி முட்டைகளையும் அடை காக்க வைப்பேன். அவற்றில் இருந்து இருபது கோழிக்குஞ்சுகள் வரும். பின் இருபது கோழிக்குஞ்சுகளும், பெரிய கோழிகளாக வளரும். அந்த இருபது கோழிகளும் நானூறு முட்டைகள் இடும். அந்த நானூறு முட்டைகளை அடை வைத்தால் நானூறு குஞ்சுகள் பொரிக்கும். நானூறு குஞ்சுகளும் பெரிய கோழிகளாக வளரும். அந்த நானூறு கோழிகளும் ஆயிரம் முட்டைகளை இடும். அந்த முட்டைகளையும் அடைகாக்க வைப்பேன்.

இப்போது என்னிடம் ஒரு பெரிய கோழிப்பண்ணையே வந்து விடும். என்னிடம் இருக்கும் கோழிப் பண்ணையில் இருந்து கோழிகளையும், கோழி முட்டைகளையும் விற்பேன். இதன் மூலம் எனக்கு நிறையப் பணம் கிடைக்கும்.

இவ்வாறு கிடைக்கும் பணத்தைச் சேமித்து வைத்து, பெரிய பணக்காரி ஆகி விடுவேன். அந்தப் பணத்தை வைத்துப் பெரிய மாளிகை ஒன்றைக் கட்டுவேன். நல்ல பட்டாடைகளை வாங்கி உடுத்துவேன். விலையுயர்ந்த நகைகள் செய்து அணிந்து கொள்வேன்.

அப்போது என்னை விடச் சிறந்த அழகி இந்த உலகிலேயே இல்லை என்று எல்லோரும் பேசிக்கொள்வார்கள். பெரிய கோடீஸ்வரர் வீட்டுப் பிள்ளைகள் எல்லாரும் என்னைத் திருமணம் செய்யப் போட்டி போடுவார்கள். அவர்களை அலட்சியமாக நோக்கி,

"உங்களில் யாரையுமே எனக்குப் பிடிக்கவில்லை", என்று தலையை அசைத்து விடுவேன்.'

இப்படிப் பலவாறு கற்பனை செய்து கொண்டே சுந்தரி தன் தலையை வேகமாக அசைத்தாள்.

அவள் தலையில் இருந்த பால் குடம் நழுவிக் கீழே விழுந்து உடைந்தது. அவ்வளவு பாலும் நாசமாகியது. சுந்தரி கட்டிய மனக் கோட்டை மணற் கோட்டையாகச் சிதைந்து விட்டது.

சுந்தரி மிகுந்த சோகத்துடன், வெறுங்கையாக வீடு திரும்பினாள்.



## வாரம் ஒரு நாடு

**செண்ட் கிட்ஸ்-நெவிஸ்**

தலைநகர் - பாஸெட்ரே
பரப்பு - 269 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 42,000
மொழி - ஆங்கிலம், படோய்ஸ்
எழுத்தறிவு - 98%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - கிழக்கு கரீபியன் டொலர்
தனி நபர் வருமானம் - 3960 டொலர்



**அமைவிடம்:**

செண்ட் கிட்ஸ்-நெவிஸ் ஆகிய இந்த இரு தீவுகளும் கிழக்கு கரீபியனில் இரண்டு மைல் நீளச் சிறுகால்வாயினால் பிரிக்கப் பட்டுள்ளன.

**வரலாறு:**

1493ல் கொலம்பஸ் இதைக் கண்டு பிடித்தார். 1967ல் இவ்விரு தீவுகளும் பிரிட்டனிடமிருந்து இணை நாடு என்னும் அந்தஸ்தைப் பெற்றன. 1983ல் பிரிட்டன் இதற்குச் சுதந்திரம் வழங்கியது. 14 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றம் இங்கு உள்ளது. ஃபெடரல் பாராளுமன்ற அமைப்புடையது. பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியான கவர்னர்ஜெனரல் நாட்டின் தலைவராக இருக்கிறார்.

**பொருளாதாரம்:**

இந்நாட்டின் பொருளாதாரம் விவசாயம் சார்ந்தது. பருத்தி, கரும்பு ஆகியன முக்கிய விளைபொருட்கள்.

## விடுகதைகளும் விடைகளும்

1. நாக்கில்லாதவன் நாலு விஷயம் சொல்வான்.
அவன் யார்?
2. மரத்திற்கு மேலே பழம், பழத்திற்கு மேலே மரம்.
அது என்ன?
3. உயிரில்லாத பெட்டி, ஆனால் உள்ளே இருப்பதை மட்டும் கடத்திக் கொண்டிருக்கும்.
அது என்ன?
4. வெட்டியவனையே அழ வைப்பான் வீரப்பன்.
அவன் யார்?
5. தலையில் மரம் முளைத்தவன் தாவி ஓடுவதில் வல்லவன்.
அவன் யார்?
6. ஆழ்கடலில் தேடிப் பிடித்தவன் அழகாய்க் கண் சிமிட்டுவான். அவன் யார்?
7. சுடு பட்டவனுக்கு ஆயுள் அதிகம்.
அவன் யார்?
8. தலையைச் சீவினால் தடையின்றி வேலை செய்வான்.
அவன் யார்?
9. ஒட்டுவது ஒருவன் பிரிப்பது இன்னொருவன்.
அது என்ன?
10. வரிசைக்குப் பதினாறு, ஆனால் என்றும் பதினாறு அல்ல.
அது என்ன?

**விடைகள்**

1. புத்தகம் 2. அன்னாசிப்பழம்
3. தபால்பெட்டி 4. வெங்காயம்
5. மான் 6. முத்து
7. செங்கல் 8. பென்சில்
9. கடிதம் 10. பற்கள்.

தொகுப்பு: ஆர்.தமிழ்ச்செல்வன், வவுனியா.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.02.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 178
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 176

பரிசுக்குரியவர்:
யோகினி - திருக்கணேசன்.
சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ்.எச். நிஸ்றஸ், களு/ஜீலான் முஸ்லிம்.ம.மகா.வி.,ஹேனமுல்லை. | இரத்தினகுமார் அன்புராஜ், மட்/செங்கலடி மகா வித்தியாலயம், செங்கலடி. |
| செல்வி எம்.எல். பர்ஹா லாஹிர், பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம். | முஹம்மட் மின்ஹாஜ், பலந்தொட்டை முஸ்லிம் வித்தியாலயம். |
| ஜூடித் டிரோசினி பர்ணாந்து, நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு-13. | மதிவதனி பரமசிவம், தமிழ் மகா வித்தியாலயம், டில்லரி-ப-கணக்கு, டிக்கோயா. |
| பிரசிந்தா சிவானந்தன், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | பி.ஜெறூஷான், இந்துக் கல்லூரி, கொழும்பு-04. |
| ஏ.கே.எம். ஸர்ஜுன், கமு/அல்மனார் மத்திய கல்லூரி, மருதமுனை. | சூரியகாந்தன் மதுசன், செண். மைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு. |

## முசோலினி

'அரசு என்ன செய்தாலும் குடிமக்கள் அதை எதிர்க்கக் கூடாது. ஆட்சியில் உள்ளவர்கள் என்ன சொன்னாலும் அதைக் குடிமக்கள் பின்பற்றி நடக்க வேண்டும்' என்னும் கொள்கைக்குப் 'ஃபாசிஸம்' (FACISM) என்று பெயர். இக் கொள்கையை நிறுவியவர் முசோலினி. இவர் இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக 21 ஆண்டு காலம் இருந்தவர்.

இத்தாலியில் உள்ள பொர்லீ மாகாணத்திலுள்ள டோவியா என்ற கிராமத்தில் 1883ம் ஆண்டு முசோலினி பிறந்தார். அங்கு ஆசிரியராகச் சிலகாலம் பணிபுரிந்தார். 1902ம் ஆண்டு சுவிற்ஸர்லாந்து சென்று அங்கு வேலை பார்த்தார். அங்கு நடைபெற்ற பல அரசியல் கிளர்ச்சிகளில் பங்கு கொண்டு பலமுறை சிறை சென்றார்.

1904ல் மீண்டும் இத்தாலிக்குத் திரும்பினார். சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்து, கட்சிப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். 1914ல் முதலாம் உலக மகா யுத்தம் தொடங்கியது. அதை இவர் ஆதரித்தார். அதனால் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார். 1915ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து, 1917ல் காயமடைந்து அங்கிருந்து விலகினார்.

1919ம் ஆண்டு முசோலினி ஃபாசிஸ்ட் கட்சியைத் தொடங்கினார் ஃபாசிஸம் குடியாட்சி முறைக்கு முரணானது. எனினும் முசோலினி தம் நாவன்மையாலும், திறமையாலும் இக்கொள்கையை இத்தாலிய மக்கள் ஏற்கும்படி செய்தார். இவருடைய கட்சி விரைவாகச் செல்வாக்குப் பெற்றது. இவர் 1922ம் ஆண்டு பிரதமரானார். தம்மை எதிர்த்தவர்களை எல்லாம் கொன்று சர்வாதிகாரியானார்.




இரண்டாம் உலக மகா யுத்தம் 1939ம் ஆண்டு தொடங்கியது. இந்த யுத்தத்திற்குக் காரணமான ஜெர்மனியையும், ஜப்பானையும் ஆதரித்தார். இத்தாலிய மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது இத்தாலியை யுத்தத்தில் ஈடுபடுத்தினார். போரில் இத்தாலிக்கு ஏற்பட்ட பெருந்தோல்வியால் மக்கள் இவரை வெறுத்தனர்.

1945ம் ஆண்டு யுத்தத்தில் ஜெர்மனி தோற்றதும், மாறுவேடம் பூண்டு சுவிற்ஸர்லாந்திற்கு இவர் தப்ப முயன்றார். வழியில் பிடிபட்டு விசாரணைக்குப்பின் தூக்கிலிடப்பட்டார்.

## கங்காரு

கங்காரு மான் போன்ற தலையையும், நீண்ட காதுகளையும் உடையது. இது குதித்துக் குதித்து வேகமாக ஓடுவதால் மணிக்கு 64 கிலோமீட்டர் தூரம் ஓடும். ஒரே தாவலில் 25 அடி தூரம் போகும். நல்ல குதிக்கும் திறனையுடைய கங்காரு ஏழு அடி உயரத்தைச் சுலபமாகத் தாண்டிவிடும்.



கங்காருவின் முக்கிய உணவு புல் மற்றும் இலை தழைகள். சாதுவான இவை யாரையும் தாக்காது. ஆனால் தேவைப்படும்போது கடுமையாக எதிர்த்துப் போரிடும். அவுஸ்திரேலியாவின் காட்டு நாய்களை இவை தம் முன்னங்கால்களால் தண்ணீரில் அமிழ்த்திக் கொன்றுவிடும்.


குட்டிக் கங்காரு பத்து மாதங்கள் வரை தாய்ப்பால் குடிக்கும். 50 வகையான கங்காருகள் உள்ளன. பெரிய கங்காரு ஆறு அடி நீளமும், சிறிய கங்காரு இரண்டு அடி நீளமும் இருக்கும்.

மர உச்சியில் வசிக்கும் கங்காருகள் 'மரக் கங்காரு'. எனப்படும். இந்தக் கங்காரு இனத்தில் 7 வகை உள்ளன. நியூகினியா, வடக்கு குயின்லாந்து பகுதிகளில் இவை உள்ளன. 'பூன்கரே' எனப்படும் மரக்கங்காருகள், மரத்தின் மேலே சர்வசாதாரணமாக நடக்கும். அப்போது இவற்றின் கால்கள் தனித்தனியாகச் செயற்படும். மற்ற சாதாரணக் கங்காருகள் இப்படிச் செயற்பட முடியாது.

'புரோகொப்டாடன்' என்னும் ஒரு வகைக் கங்காருகள் பல வருடங்களுக்கு முன்பிருந்தே இருக்கின்றன. இவை 18 அடி உயரம் வரை இருக்கும்.

அவுஸ்திரேலிய பாலைவனங்களில் வசிக்கும் கங்காரு எச்சிலைத் தனது உடல் மற்றும் முகத்தில் தடவித் தன்னைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளும்.

## சாக்கடலின் சிறப்பு




ஜோர்டானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சாக்கடல் (DEAD SEA) அமைந்துள்ளது. சாக்கடல் தான் உலகிலேயே அதிக அளவில் உப்பைக் கொண்டது என்ற பெருமையையும், மிகவும் பள்ளமான (399 மீட்டர்) இடத்தில் அமைந்துள்ளது என்ற பெருமையையும் பெற்றுள்ளது. அதிக உப்பால் நீரின் அடர்த்தி மிகவும் உயர்ந்து மனிதர்கள் நீரில் படுத்தால் கூட மூழ்க மாட்டார்களாம்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

அனிதா பொய் சொல்லவில்லை. இல்லை இல்லை, அதிகம் பொய் சொல்லவில்லை....

ஹாலில் மீனாட்சியைப் பார்த்தான்.

"அனிதா இருக்கிறார்களா?"

"இருக்கிறார்கள்."

'வந்துவிட்டாளா? எங்கே போயிருந்தாள்? கேட்கலாமா?... மோனிக்கா வந்திருக்கமாட்டாள்; அனிதா இருக்கிறாள்...' மாடிப்படிகளில் மேலே செல்லும் போது, 'இன்று தெரிந்துவிடும். இன்று தெரிந்துவிடும்' என்று அவன் எண்ணிக்கொண்டான்.

அனிதா நிச்சயம் அழுதிருக்க வேண்டும். அவசர அவசரமாக முகத்தில் பவுடர் ஒற்றி இருந்தாள். கண்கள் சற்று சிவந்து இருந்தன. அவனைப் பார்த்ததும் உடனே பேசவில்லை. அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.....

அவன் காத்திருந்தான்.

"கணேஷ்! உங்களை நான் எவ்வளவு தூரம் நம்பலாம்?"

'படித்துக் கொண்டிருக்கிறேன்.... ஜன்னல் திறக்கிறது. காற்று என்று தாமதமாகவே திரும்பினேன். அவன் நிற்கிறான்....!' என்று மிக அழகாகச் சொன்னீர்கள். உங்கள் கழுத்தில் மெலிதாக விரல் அடையாளங்கள் கூடத் தத்ரூபமாக இருந்தன. ஆனால் அந்த அடையாளங்கள் லிப்ஸ்டிக்கினால் வரையப்பட்டவை. அப்புறம் அந்த நகக்கீறல்கள்....."

அனிதா பேசவில்லை.

"நீங்கள் என்னை அழைத்த காரணம் எனக்குப் புரிகிறது. பாஸ்கர் சொல்லிக் கொடுத்தது. பாஸ்கரின் திட்டம் அது. என்னை அழைத்து, என் அனுதாபத்தைப் பெற்று, என்னை இரவு தங்கவைத்து, என்னை ஹாலில் அடித்துப் போடுவது திட்டம்! உங்களைத் தாக்க வந்தவன் தான் என்னையும் தாக்கி இருக்கிறான் என்று நான் நினைத்துக்கொள்ள! என்னை விலக வைக்க! அன்று இரவு என்னைத் தாக்கியது சொல்லி விடுங்களேன்!"

"என்ன சொல்ல? நான் அவரைப் பழிதீர்த்துக் கொண்டேன் என்றா? கோவிந்தை மறைவாக இருக்க வைத்தேன் என்றா? நானா? நானா? உங்களுக்கு மனத் தத்துவத்தில் ஆரம்பப் பாடம் தேவை கணேஷ்!"

"ஷர்மா சவுக்கால் அடிபட்டிருக்கிறார், தெரியுமா அனிதா?"

"அப்படியா?"

"நீங்கள் அப்படியா என்று கேட்பதில் எவ்வளவு குரூரம் புதைந்திருக்கிறது தெரியுமா? நான் உங்கள் அறையில் மேஜையில், ஓர் இழுப்பறையில் சவுக்கைப் பார்த்தேன்!"

"அப்படியா?"

கணேஷ் அவளை நேராகப்பார்த்தான். 'அனிதா! நீ யார் நீ யார் நீ யார்?' என்றன அவன் கண்கள். 'நான், ஒன்றும் அறியாதவள், ஆதரவு தேடுபவள்' என்றன அவள் கண்கள்.

அவள் அசந்தர்ப்பமாகச் சிரித்தாள். சற்று உரக்கவே. "கணேஷ், நானும் பாஸ்கரும் திட்டமிட்டுச் செய்திருக்கிறோம் என்கிறீர்கள்; கேளுங்கள். பாஸ்கர் முற்பகல் இங்கு வந்திருந்தான். அவன் என்னிடம் என்ன சொன்னான் தெரியுமா? 'ஷர்மாதான் இல்லையே நீ எனக்கு மனைவியாகி விடேன்' என்றான்! கண்ணாடியைக் கழற்றி வைத்துவிட்டு என்னைப் படுக்கையில் சாய்த்தான். 'எல்லாச் சொத்தும் உனக்கே கிடைக்குமாறு செய்கிறேன் வா என் ராணியே!' என்று அழைத்தான். எனக்காக இந்த வீட்டில் எட்டு வருஷங்கள் காத்திருந்தானாம். என்னை இப்படி அடைவதற்காக எட்டு வருஷங்கள் காத்திருந்தானாம். இன்று சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்ததாம்! நான் எத்தனை ஆண் புயல்களைச் சமாளிப்பது கணேஷ்? என்னைப் படைத்தவன் இப்படி ஒரு உடலையும் முகத்தையும் கொடுத்து, எல்லோர் பார்வையிலும் காமத்தைக் கொடுக்கிறான். நான் உன்னிடம் விரும்பியது ஆதரவு. வெறும் ஆதரவு. எனக்கு இருப்பது என் பெண்மை. எப்படியாவது உன் அனுதாபத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதற்காக நான் கொஞ்சம் பொய் சொன்னது தப்பா? இப்படி வேலைக்காரனிலிருந்து செக்ரட்ரி வரைக்கும் என்னை அடைய முயன்று கொண்டிருக்கையில் ஒரு சாசுவதமான நட்பைத் தேடிக்கொள்ள விரும்புவது தப்பா...?"

"பாஸ்கர் உங்களை அப்படியா கேட்டான்?"

"நம்புங்கள், ஆம்! மீனாட்சியைக் கூப்பிடுங்கள். அவள் அறையில் நுழைந்தபோது என்ன பார்த்தாள் என்று கேளுங்கள்! நானும் பாஸ்கரும் கூட்டுச்சேர்ந்து கொண்டோம் என்கிறீர்களே! மீனாட்சி!"

"வேண்டாம். நான் வருகிறேன்!"

"எங்கே போகிறீர்கள்?"

"பாஸ்கரைப் பார்க்க! அனிதா, சற்றுப் பொறுத்திருங்கள். நான் உங்களை உபாசிக்கிறேன். அது உங்களுக்குத் தெரியும். நீங்கள் பொய்சொல்லவில்லை என்று அறிய எவ்வளவு தூரம் விரும்புகிறேன் தெரியுமா? இருங்கள். பாஸ்கரை எனக்கு உடனே பார்க்க வேண்டும். ஒன்றில்லை ஒன்று தீர்த்துவிடுகிறேன்."

"பாஸ்கர் அபாயகரமானவன்."

"தெரியும் அனிதா."

கணேஷினுள் அசாத்திய வேகமும் கோபமும் கொந்தளித்தன. காரில் விழுந்தான். சீறிச் சுழன்று மூலைகளில் கிறீச்சிட்டான். 'பாஸ்கர்! பாஸ்கர்! வருகிறேன். வருகிறேன். உன்னை எனக்குத் தெளிவாக இப்போது தெரிகிறது. அனிதாவைத் தொட்டாயா? வருகிறேன். அவளைக் கேட்டாயா? வருகிறேன்.'

இருட்டி விட்டது. பாஸ்கரின் வீட்டின் முன்காரை நிறுத்தி, கதவை அறைந்து சாத்திவிட்டு மாடிப்படிகளை இரண்டு இரண்டாகக் கடந்து இடது பக்கம் திரும்பி பாஸ்கரின் அறையை அடைந்து அதன் கதவைக் காலால் உதைத்து....



# 12 அனிதா இளம் மனைவி

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் சுஜாதா

## சென்றவாரம்



கானாட் பிளேஸிலுள்ள ஓட்டலில் ஏகப்பட்ட கலாட்டா. ஒரு வழியாக மோனிக்காவை இழுத்துக்கொண்டு காரிலேறி தனது றூமுக்கு வருகிறான் கணேஷ்.

கிழிந்து போயிருந்த ஸ்கர்ட்டை ஊசி நூல் போட்டுத் தைத்துக் கொள்கிறாள் மோனிக்கா.

தனக்கிருக்கும் சந்தேகங்கள் பற்றி மனம் விட்டுப் பேசுகிறான் கணேஷ். தான் எல்லோரையும் சந்தேகிப்பதாகக் கூறும் கணேஷ் மோனிக்காவை யூனிவர்ஸிட்டி ஏரியாவில் இறக்கி விட்டுவிட்டு விமானப் படைத் தலைமைச் செயலகத்துக்குச் செல்கிறான்.

அங்கே ஸ்க்வாட்ரன் லீடர் ராமலிங்கத்தைச் சந்திக்கிறான். ஃப்ளைட் லெஃப்டினெண்ட் ராஜா என்றொருவர் விமான விபத்தில் இறந்து போனது உண்மைதான் என்கிறார் அவர்.

அங்கிருந்து புறப்படும் கணேஷ் வசந்த் விஹாருக்குச் செல்கிறான். அங்கே...

கணேஷின் ரத்தம் உறைந்தது.

அறையில் மேலே ஃபான் சுற்றிக் கொண்டிருந்தது. ஒற்றை பல்ப் எரிந்து கொண்டிருந்தது. படுக்கைக்கும் அந்த மேஜைக்கும் இடையில் பாஸ்கரின் மூக்குக் கண்ணாடி விழுந்து நொறுங்கி இருந்தது.

சற்றுத் தள்ளி, குறுக்குவாட்டில் பாஸ்கர் கிடந்தான். சத்தியமாகச் செத்த உடல்!

இறந்த உடலை அவ்வளவு கிட்டத்தில் பார்ப்பது கணேஷுக்கு முதல் தடவை.

இறந்து போனவர்களுக்காக எவ்வளவோ வாதாடி இருக்கிறான். ஆனால் இத்தனை அந்தரங்கமாகச் சந்தித்ததில்லை. பாஸ்கர் அடையாளம் மாறி இருந்தான். இரத்த ஓட்டம் இருந்தபோது அவன் முகத்திலிருந்த புத்திசாலித்தனமான பார்வை இப்போது இரத்தத் தயக்கத்தினால் பயமா அல்லது ஆச்சரியமா என்று சொல்ல முடியாத மையமான மெழுகுத் தன்மையில் நின்றிருந்தது. அவன் பற்கள் தெரிந்தன. மேம்போக்கான அடி எதுவும் உடலில் தென்படவில்லை. வேஷ்டி அணிந்திருந்தான். செத்துப் போயிருந்தான்.

தொட்டுப் பார்க்கலாமா? ம்ஹூம். கூடாது! ஓடி விடலாமா? சே!

கணேஷ் அப்போதுதான் பார்த்தான் பாஸ்கர் ரத்தத்தின் மேல் படுத்திருந்ததை. மிகச் சிறிய செங்குழம்பு தேக்கம். கணேஷ் சுற்றிலும் பார்த்தான். சுவரில் ஆணியில் ஒரு கோட்டு தொங்கிக் கொண்டிருந்தது. டெலிபோனைப் பார்த்தான். தீர்மானித்தான்.

பாஸ்கரைத் தாண்டிச் செல்லும்போது நிச்சயம் பயந்தான். 'குபுக்' என்று பாஸ்கர் எழுந்து விடுவதைக் கூட எதிர்பார்த்தான்.

பாஸ்கர் எழுந்திருக்க மாட்டான். இன்னும் ரத்தத்தின் மேல்தான் கிடந்தான். செங்குழம்புத் தேக்கம். "டெட்," என்று கணேஷ் சொல்லிக் கொண்டான்.

கிர்ர்ர்ர்ர்ரக் கிர்ர்ர்ர்ர்ரக்.

"என் பெயர் கணேஷ். நான் 33 ஹெய்லி ரோடிலிருந்து பேசுகிறேன். இங்கே ஓர் ஆள் இறந்து போயிருக்கிறார். கீழே கிடக்கிறார். தரையில் ஃப்ளாட்டில். உள்ளே..... அறையில் பூமியில். 33 ஹெய்லி ரோட், முதல் மாடி. ஆம். கொலை என்று நினைக்கிறேன். நான் நகரவில்லை; உங்களுக்காகக் காத்திருக்கிறேன். 33 தேதீஸ்...தர்ட்டி த்ரீ."

பாஸ்கரும் கணேஷும் காத்திருந்தார்கள். கணேஷ் என்ன செய்யலாம் என்று யோசித்தான். மறுபடி ஒரு தடவை பாஸ்கரைப் பார்த்துக் கொண்டான். பச்சோந்தியோ? கணேஷ் மறுபடி டெலிபோன் செய்தான்.

"இன்ஸ்பெக்டர் ராஜேஷ், கணேஷ் ஹியர். நான் பாஸ்கர் வீட்டிலிருந்து பேசுகிறேன். பாஸ்கர் இறந்துவிட்டான்."

"வாட்? எப்பொழுது? எப்படி?"

"நான் அவனைப் பார்த்துப் பேச இங்கு ஹெய்லி ரோடு வந்தேன். இவன் உடலைப் பார்த்தேன் ஸிம்பிள்."

"உடனே ரிப்போர்ட் கொடுத்தீங்களா?"

"உடனே; ஃப்ளையிங் ஸ்க்வாட் எந்த நிமிஷமும் வரும்"

"நான் உடனே வருகிறேன். ரியலி பஸ்லிங்."

காலடிச் சப்தம் கேட்டது. அறைக்குள் அருகில் வருவது கேட்டது. எவ்வளவு வியர்த்திருக்கிறேன்! கதவுப் பக்கம் பார்த்துக் கொண்டே கணேஷ் தன் கைக்குட்டையைத் துடைத்துக் கொள்ள எடுத்தபோது அந்தப் பையன் 'மேரா ஸா... ம்னேவாலி கிடுக்கிமே' என்று பாடிக்கொண்டே வந்தான். அவன் கையில் டிபன் காரியரும் ஒரு புதிய சிகரெட் பெட்டியும் இருந்தன.

பையன் மேஜைமேல் காரியரை வைத்தான். கீழே கிடந்தவனையும் உடனே கணேஷையும் பார்த்தான். பாட்டு நின்றது. சிகரெட் பெட்டி நழுவியது.

"ஊய்!" என்றான் பையன். அவன் கண்கள்!

"பயப்படாதே இது வெறும்...."

அவன் கீழே பார்த்துக் கொண்டிருந்தான். "கூன் சோர்!" என்று உரக்கக் கத்திக்கொண்டே பாய்ந்து கொண்டு வெளியே ஓடினான். அவன் கத்திப் படியிறங்கிச் செல்வது கணேஷுக்குக் கேட்டது. கீழே கொஞ்சம் கொஞ்சமாகக் குரல்கள் முழுவதும் கேட்டன. குழப்பமான ஹிந்தியில் அவனுக்குச் சில வாக்கியங்கள்தான் புரிந்தன. "முற்பகல் இவன்தான் வந்து விசாரித்தான் சோப்ராஜி. உள்ளே நிற்கிறான். கையில் ஏதோ வெளுப்பாக வைத்துக் கொண்டிருக்கிறான். பாஸ்கர் ஸாப் கீழே கிடக்கிறார். ரத்தம் கொட்டியிருக்கிறது. அவன் நின்று கொண்டே இருக்கிறான்."

"இன்னும் அங்கேதான் இருக்கிறானா?"

"ஆம் நிற்கிறான்."

"கையில் கத்தி வைத்துக் கொண்டிருக்கிறானா?"

"ஏதோ இருக்கிறது அவன் கையில்."

"என்ன வயதிருக்கும் அவனுக்கு?"

"உயரமாக, சிவப்பாக இருக்கிறான்."

"சோப்ராஜி, வாருங்கள் பார்த்துவிடலாம்."

குரல்கள் தைரியம் பெற்று அருகே அருகே கேட்க ஆரம்பித்தன. அவர்கள் மேலே வருகிறார்கள்.

'விய்ய்ஞ்' என்று சைரன் ஒலித்தது. பூட்ஸ் கால்கள் ஒலித்தன.

"பொலிஸ்!"

கணேஷ் பெருமூச்சு விட்டான். அறைக்கு வெளியே வந்து அறைவாசலில் கையைக் கட்டிக் கொண்டு நின்றான். எத்தனை பேர் மேலே வருகிறார்கள்? குரல்கள் கால் அடிகளின் ஓசைகள். அதட்டல்கள். அதிகாரி தெரிந்தார். கணேஷைப் பார்த்தார். பார்வையில் ஸி.ஆர்.பி.ஸி. கலந்திருந்தது.

"நீங்கள்தான் ஃபோன் செய்ததா?"

"ஆம். என் பெயர் கணேஷ்."

"பாடி எங்கே?"

கணேஷ் உள்ளே காட்டினான்.

"எங்கே?"

"இதோ கீழே கிடக்கிறதே."

"ஓ எஸ்." அவர் சற்றுத் தயங்கினார்.

ஒரு கான்ஸ்டபிள் பத்துப் பதினைந்து ஜனங்களைத் தள்ளி மாடிப் படிகளில் சரித்துக்கொண்டிருந்தார்.

அந்த இன்ஸ்பெக்டர் தன் பையிலிருந்து பேனாவை எடுத்துத் திறந்து ஓர் உதறு உதறிவிட்டு குறிப்புப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு எச்சில் பண்ணிய விரலால் புரட்டி வெள்ளைத் தாளுக்கு வருவதை கணேஷ் உன்னிப்பாகப் பார்த்தான்.

"ஏன் அனிதா?"

"நம்பி, சில விஷயங்களைச் சொல்வதற்கு எனக்கு ஆட்களே இல்லையே... நான் இன்று அனுபவித்த நரகம்– வேதனை– அவமானம் எவருக்கும் வேண்டாம்....."

"என்ன ஆயிற்று அனிதா?"

"முதலில் நான்கேட்க வேண்டிய கேள்வி ஒன்று இருக்கிறது. "நீங்கள் என்னைச் சந்தேகப்படுகிறீர்களா, இல்லையா?"

"நான் எல்லோரையும் சந்தேகப்படுகிறேன் அனிதா?"

"என்னை எதற்காக?"

"அனிதா, இந்த வீட்டில் எல்லோரும் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்."

"நான் கூடவா?"

"ஆம்!"

"என்ன பொய்?"

"அன்று இரவு என்னை அழைத்தீர்களே.... உங்களை யாரோ கொல்ல முயற்சி செய்ததாக.... வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தீர்களே? உள்ளே சாமான்கள் உருண்டிருந்தனவே? உங்கள் வளையல் உடைந்திருந்தனவே? உடை கிழிந்திருந்ததே.... யாவும் பொய் நாடகம்!"

அனிதா தலை குனிந்து கொண்டிருந்தாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"நான் சில சமயங்களில் முட்டாள் போல் தோற்றமளிக்கிறேன். ஆனால் முட்டாள் அல்ல. நீங்கள் சொன்ன விவரங்களும் நான் அறையில் பார்த்த விவரங்களும் ஒத்துப்போகவில்லை. பாஸ்கர்தான் என்பது எனக்குத் தெரியாதா என்ன! அனிதா, உங்கள் இருவருக்கும் நான் இந்தக் கொலையைப் பற்றி ஆராய்வதோ உயில் விஷயமாக மோனிக்காவுக்கு உதவி செய்வதோ பிடிக்கவில்லை. பாஸ்கர் ஆளை அனுப்பிவைத்துப் பணம் கொடுக்கிறேன் விலகு என்றான். உங்கள் இருவருக்கும் பொதுவாக ஒரு ரகசியம் இருக்கிறது......"

"என்ன ரகசியம்?"

'இவளிடம் அதிகம் பேசுகிறோமோ? இருந்தாலும் முயன்று பார்க்கலாம். சொல்வாளா?'


"உங்கள் கணவரை நீங்கள் பழிவாங்கியிருக்கிறீர்கள்; பாஸ்கரின் உதவி கொண்டு...."

அவள் சிரித்தாள்.

"என்னைப் பாருங்கள் கணேஷ். என் உடம்பைப்பாருங்கள். என் செயலற்ற கைகளைப்பாருங்கள். என் வலிமையைப் பாருங்கள்."

"நான் உடல் வலிமையைச் சொல்லவில்லை. மனவலிமை! அனிதா, நான் நேற்றுப் பிறந்தவன் அல்ல. கோவிந்த் கொலை செய்தான் என்பதை நான் நம்பத் தயாராயில்லை. அவன் தலைமறைவாக இருக்கிறான். பாஸ்கர் அன்று ஆக்ராவில் இருந்ததாகச் சொன்னது பொய். அவன் டில்லியை விட்டு எங்கும் செல்லவில்லை. ஒரு கொலை செய்யுமளவுக்கு கோவிந்த்திற்கு காரணம் போதாது. மர்டர் இஸ் எ க்ரைம் ஆஃப் பேஷன்... அதீத வெறுப்பு, ஏமாற்றம், உலக அளவுக்குக் கோபம், தற்காலிகமான குரூரம்...இது போன்ற ஆதார உணர்ச்சிகள் தான் கொலைகளைச் செய்யும். அனிதா!

(தொடர்ந்து வரும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
|  |  |  |  |  |  |
| பெயர்: என். அருந்தவராஜா, வயது: 22 முகவரி: 114, கண்ணன் கிராமம், வாழைச்சேனை. பொழுது போக்கு: ரீ.வி., உதைபந்து, பத்திரிகை. | பெயர்: எம். காமில். வயது: 19 முகவரி: 135, மீரிப் பண்ணை, தர்கா நகர். பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை. | பெயர்: எம். சுந்தரேசன், வயது: 24 முகவரி: ROYALINN, IZZUDHEENUMAGU, MAAFANNU, MALE, MALDIVES. பொழுது போக்கு: வழமையானவை. | பெயர்: அஞ்சலா ஞானரட்ணம், வயது: 21 முகவரி: 4-1/1, ஐ.பி.சி. வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6. பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல், கரம். | பெயர்: எம். இனாமத்துல்லா, வயது: 21 முகவரி: 23/1, நயாவலை, மாவனல்லை. பொழுது போக்கு: சினிமா, நண்பர் தொடர்பு. | பெயர்: ஏ. ஜபார், வயது: 27 முகவரி: P.O.BOX-229 AL WAHA-02253, AL JAHRA, KUWAIT. பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி. |

பெயர்: கே. அமீர் அலி, வயது: 18 முகவரி: 49/3, திக்ஹின்ன, மடவளை பசார். பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். பௌசர், வயது: 20 முகவரி: 17, 3ம் குறுக்குத் தெரு, திருகோணமலை. பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஐ. சிவராஜா, வயது: 20 முகவரி: மன்னார் வீதி, சேவந்தீவு, புத்தளம். பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: செல்லையா றோமன், வயது: 20 முகவரி: ஸ்பிரிங்வூட், இறக்குவானை. பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம்.

பெயர்: ஜி. பிரேம், வயது: 30 முகவரி: 76. WAKEMAN'S HILL AVE, KINGSBURY, LONDON, NW9 OVN. பொழுது போக்கு: உதைபந்து, ரீ.வி.

பெயர்: எம். நௌபல், வயது: 20 முகவரி: 380, எம்.பி.சி.எஸ். குறுக்கு வீதி, ஓட்டமாவடி. பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

அரங்கம்



படிப்பகம்

www.padippakam.com

உணர்வோடு கலக்கும் உண்மைக் கதை

# தூக்கு மேடைக் குறிப்பு 14

ஜூலிஸ் பூசிக்

## இதுவரை

செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.

ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.

அவர் இறந்து விட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.

அவளை மட்டும் போலந்துக்கு கடின வேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள். சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக், சிறை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.

அவர்களது முரண்பாடான குணங்களை சுவாரசியமாகச் சொல்கிறார்.

## 'கோலின்'

அவன் செக் மொழியைத் தவிர, வேறு எந்தப் பாஷையிலும் பேசுவதில்லை. அவனைப் பற்றிய ஒவ்வொரு அம்சமும்; மற்றவர்களுக்கு அவன் மாறுபட்டவன் என்பதை உணர்த்தின. ஆனால் அதற்குக் காரணம் என்ன என்பது இலேசில் புலப்படவில்லை. அவர்கள் கூட இதை உணர்ந்தார்கள். ஆனால் காரணத்தை அவர்களாலேயும் அறிய முடியவில்லை.

எங்கு அவன் தேவையோ, அங்கு சாமர்த்தியமாகப் போய்விடுகிறான். எங்கு எல்லோரும் படபடத்துக் குழப்பமடைகிறார்களோ, அங்கு அவன் அமைதியை உண்டு பண்ணுகிறான். தலையைத் தொங்கவிட்டுக் கவலைப்படுகிறவர்களுக்கு அவன் உற்சாகமூட்டுகிறான்.

வெளியில் புதிய உயிர்களுக்கு அபாயம் என்றால், அந்த அபாயத்தைத் தவிர்க்கக்கூடிய நபர்களுடன் எங்களுக்குத் தொடர்பு அறுந்துவிட்டது என்றால், உடனே அவன் புதிய தொடர்பை வெளியில் ஏற்படுத்தித் தருகிறான். அவன் விவரங்களில் மூழ்கிவிடாமல், விரிவான அளவில் ஒரு திட்டப்படி வேலை செய்கிறான்.

> "ஆட்சியந்திரத்திற்கு வேறு வழி இல்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னென்ன காரியங்களை இந்த ஆட்சி செய்ய வேண்டுமோ, அந்தக் காரியங்கள் அனைத்தையும் செய்வதற்குப் போதிய ஆட்கள் இந்த ஆட்சியிடம் இல்லை"

இது ஒன்றும் புதிதல்ல. பாசிசப்படையில் சேர்ந்தபோதே, அவன் இந்தக் கருத்தை மனதில் வைத்துத்தான் சேர்ந்தான்.

நாம் இவ்வளவு தூரம் பேசுகிற இந்தச் செக் காவலாளி பெயர் அடால்ப் கோலின்ஸ்கி. மொரோவியாவில் ஒரு பழைய செக் குடும்பத்தில் பிறந்தவன். செக் கைதிகளுக்குக் காவல் புரியும் பொருட்டு, காவலாளி வேலைக்கு மனுச் செய்தபோது, ஒரு ஜெர்மானியன் போல் நடித்தான்.

முதலில் ஹிராடிக் கிரார்லாவ் என்னுமிடத்திலும் பிறகு பான்கிராப்ட்ஸிலும் இவ்வேலையைச் செய்து வருகிறான். அவனை அறிந்திருப்பவர்களில் பலர் அவன் பேரில் குரோதம் பாராட்டியிருக்க வேண்டும்.

நான்கு வருடங்கள் கழிந்த பிறகு, ஜெர்மன் சிறைச்சூப்பிரின்டென்ட் ஒரு நாள் கோலின்ஸ்கியின் முகத்தருகே கையை வீசி, "அந்தச் செக் குணத்தை உன்னிடமிருந்து விரட்டியடிப்பேன்!" என்று மிரட்டுகிறான்.

அதற்குக் காலம் கடந்துவிட்டது. சூப்பிரின்டென்ட் தவறாக நினைத்து விட்டான். அவன் கோலின்ஸ்கியுடைய செக் குணத்தை மட்டுமல்ல; அவனிடமுள்ள மனிதத் தன்மையையே அழிக்க வேண்டியிருக்கும்.

கோலின்ஸ்கி மனமறிந்து, தானாகவே எதிரியிடம் கையெழுத்திட்டுச் சேவகத்தில் சேர்ந்தான்.

எதற்காக?

எதிரியை அவன் அணியிலேயே நின்று எதிர்க்க! அவ்னை எதிர்த்துப் போராடுகிறவர்களுக்கு உதவ! நிரந்தரமான அபாயம், அவனுடைய காரியார்த்த மனதை உறுதியாக்கியிருக்கிறது.

### நம்மவர்கள்

1943, பெப்ரவரி 11-ம் தேதியன்று காலையில் கருப்புக் காப்பிக்குப் பதில் அவர்கள் கோக்கோ கொடுத்திருந்தால் அந்த ஆச்சரியம் என் கவனத்தில் பட்டிருக்காது. ஏனெனில் அன்று காலை வேறு ஒரு அதிசயம் என் கவனம் முழுவதையும் ஈர்த்திருந்தது. அதுதான் ஒரு செக் பொலிஸ் காரனின் வருகை.

முதலில் அவனுடைய உடுப்பு மட்டும் தான் தெரிந்தது. நாங்கள் பார்த்தது எல்லாம் ஒரு காலின் சட்டையும், உயர்ந்த பூட்ஸும் தான்.

ஒரு கருநீலக் கால் சட்டையும், ஒரு கையும் பூட்டைத் திறந்தன. பிறகு அறைக் கதவை மூடின; மறைந்தன. அது எல்லாம் ஒரு நொடி நேரத்தில் நடந்ததால், அரை மணிக்குப் பிறகு, அப்படி ஒன்றையும் பார்க்கவில்லை என்று நம்பக்கூட நாங்கள் தயாராக இருந்தோம்.

பான்கிராப்ட்ஸில் ஒரு செக் பொலிஸ் காரன்! அந்த ஒரு விஷயத்திலிருந்து எத்தகைய முடிவுகளுக்கு ஒருவன் வரக்கூடும்.

இரண்டு மணி நேரத்திற்குள் நாங்கள் அந்த முடிவுகளுக்கு வந்து கொண்டிருந்தோம்: அறையின் கதவு மீண்டும் திறந்தது. ஒரு செக் பொலிஸ் தொப்பி உள்ளே எட்டிப் பார்த்தது. நாங்கள் வைத்த கண் வாங்காமல் பார்க்க, பல்லை இளித்தவாறு, உதடுகள் சொல்லிற்று.

"ஓய்வு!"

இப்போது சந்தேகத்திற்கு இடமில்லை. தாழ்வாரத்தில் பசுங்காவி உடையில் நிற்கும் எல்.எஸ். காவலாளிகளிடையில் அநேக கரும்புள்ளிகள்-செக் பொலிஸ் அதிகாரிகள் காணப்பட்டனர். அவர்களுடைய வருகை எங்களை ஆகர்ஷித்தது.

இதற்கு என்ன அர்த்தம்? எங்களுக்கு என்ன நேரும்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்த போதிலும், அவர்கள் இவ்விடத்திற்கு வந்திருக்கின்றனர் என்ற ஒரு செய்தியே, அநேக விஷயங்களை தெளிவாக உணர்த்துகின்றது.

**ஒரு ஆட்சி தன்னுடைய மிக மிக முக்கியமான நுண்ணிய கருவியிலேயே-தன்னைத் தாங்கி நிறுத்துவதற்காக இருக்கும் சிறை ஸ்தாபனத்திலேயே அது அடக்கி ஒடுக்க விரும்புகிற தேசத்தின் ஆசாமிகளையே சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசிய நிர்ப்பந்தம் அதற்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், அது முடிவை எவ்வளவு தூரம் நெருங்கியிருக்க வேண்டும்?**

ஒரு சில படைவீரர்களைப் போர் முனைக்குக் கொண்டு போவதற்காக, அது தன் பொலிஸ் படையை பலவீனப்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்றால், போர்முனையில் அதற்கு எத்தகைய ஆள் பஞ்சம் ஏற்பட்டிருக்க வேண்டும்! இதே மாதிரி நடந்தால் இன்னும் எத்தனை நாட்களுக்கு அந்த ஆட்சி நீடிக்க முடியும்?

அவர்கள் நிரம்ப ஜாக்கிரதையாகப் பொறுக்கிய ஆட்களையே இங்கு அனுப்புவார்கள் என்பது உண்மைதான். ஜெர்மன் காவலாளிகளைவிட மோசமாக மாறக் கூடியவர்களை, வெற்றியில் நம்பிக்கை யிழந்தவர்களை, விழிப்பற்றவர்களைத்தான் பொறுக்குவார்கள் என்பதும் சரியே.

ஆனால் எஸ்.எஸ்.காரர்களுக்குப் பதிலாக, செக் பொலிஸ்காரர்கள் நியமிக்கப் படுகின்றனர் என்ற ஒரு உண்மையே; செய்தியே முடிவு நிரம்ப நெருங்கிவிட்டதென்பதற்கு மறுக்க முடியாத ஆதாரம்.

இப்படித்தான் நாங்கள் விவாதித்தோம்.

**முதலில் நாங்கள் நினைத்ததைவிட அவர்கள் அதிகமாக இருந்தனர். உண்மை இதுதான். ஆட்சியந்திரத்திற்கு வேறு வழி இல்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னென்ன காரியங்களை இந்த ஆட்சி செய்ய வேண்டுமோ, அந்தக் காரியங்கள் அனைத்தையும் செய்வதற்குப் போதிய ஆட்கள் இந்த ஆட்சியிடம் இல்லை.**

முதல் தடவையாக, பான்கிராப்ட்ஸ் சிறையில் செக் உடுப்புகளைப் பார்த்தது பெப்ரவரி 11ல் ஆகும், மறுநாள் அவற்றினுள் இருந்த ஆசாமிகளைத் தெரிந்து கொள்ள ஆரம்பித்தோம்.

ஒருவன் அப்படியே வருவான்: அறைக்குள் எட்டிப் பார்ப்பான். அவன் அடி எடுத்து வைப்பதைப் பார்த்தால் ஏதோ செய்யக் கூடாத காரியத்தை அவன் செய்வதாக நினைக்கிறான் என்று தோன்றும்.

பிறகு திடீரென்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, எங்களுடைய பார்வைக்குப் பதிலளிப்பான். அதைப் பார்த்தால் சின்னஞ்சிறிய குழந்தை ஊர்ந்துவரும் போதே உற்சாகத்துடன் நான்கு கால்களாலும் திடீரென்று துள்ளிக் குதிப்பதுபோல இருக்கும்.

"கனவான்களே, எப்படி இருக்கிறீர்கள்?" நாங்கள் புன்னகை மூலம் பதிலளிக்கிறோம். அவனும் புன்னகை செய்கிறான். பிறகு திடீரென்று கூறுகிறான்:

**"எங்கள் பேரில் ஆத்திரப்படாதீர்கள். நான் சொல்வது உண்மை. இங்கே உங்களைப் பார்ப்பதைவிட, நாங்கள் வெளியே நடைபோட்டுக் கொண்டிருக்கவே விரும்புவோம். ஆனால் உள்ளே எட்டிப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதைத் தவிர்க்க முடியாது. ஒருவேளை இதனால் ஏதாவது நன்மை ஏற்படலாம்... ஆமாம், ஒருவேளை..."**

நாங்கள் அவர்களுடைய வருகையைப் பற்றி என்ன நினைத்தோம், அவர்களைப் பற்றி என்ன நினைத்தோம் என்பதை அவனுக்குச் சொன்னபோது, அவன் நிரம்பச் சந்தோஷப்பட்டான். இவ்விதம் முதலிலேயே நாங்கள் நண்பர்களானோம். அவன்தான் விடெக். நல்ல மனதுள்ள இளைஞன். அவன்தான் காலையில் அறைக்குள் தலையை நீட்டிய முதல் ஆசாமி.

இரண்டாவது ஆசாமி பெயர் டூமா. பழைய செக் கான்ஸ்டேபிள். கெடுபிடியும் சப்தமும் அதிகம். ஆனால் அடிப்படையில் நல்லவன்தான். இவனைப் போன்றவர்களைத்தான், குடியரசுச் சிறைகளில் நாங்கள் 'பாப்' என்று கூப்பிட்டோம்.

இவன், தன் நிலைமையில் அசாதாரணமானது எதுவும் இருப்பதாக நினைக்கவில்லை. அதற்கு மாறாக இவன் தன் பரம்பரை வேலையைச் செய்வது போலவே நடந்து கொண்டான். அமைதியைக் கெடுத்தாலும் சரி, காத்தாலும் சரி, இவன் தன் வழக்கமான ஹாஸ்யப் பேச்சுகளைப் பேசி, தன் சொந்த வழியில் நடந்து கொண்டான்.

இவன் ஒரு அறையில் கைதிக்கு ஒரு ரொட்டியோ அல்லது சிகரெட்டோ கொடுத்துவிட்டு, யாருடனாவது எதைப்பற்றியாவது அரசியல் நிலைமையைத் தவிர-பேசி நேரத்தைப் போக்குவான்.

அவையெல்லாம் சகஜமான முறையில் திறமையாகச் செய்தான். இதுதான் காவல் வேலைசெய்யும் முறை என்பது இவன் அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தை இவன்மறைக்க முயற்சிக்கவில்லை.

முதல் தடவை இது சம்பந்தமாக இவனுக்கு மேல் அதிகாரியிடமிருந்து கிடைத்த வசை இவனை உஷாராக ஆக்கிற்றேயொழிய, அடியோடு மாற்றிவிடவில்லை.

இவன் இன்னும் பழைய 'பாப்' ஆகவே, கான்ஸ்டேபிள் ஆகவே இருக்கிறான். இவனிடம் பெரிய உதவி எதையும் கேட்க உனக்குத் துணிவு வராது. ஆனால் இவன் இருக்கும்போது சகஜமாகப் பழக முடியும்.

மூன்றாவது செக் பொலிஸ்காரன், தாழ்வாரத்தில் மௌனமாக, எதையும் கவனிக்காமல் நடந்தான். அவனை அணுகி ஏதாவது கேட்க நினைக்கிறவர்களையும், கவனிப்பதில்லை.

ஒருவாரம் அவனைக் கவனமாகப் பார்த்த பிறகு, அப்பா சொன்னார்: "அவனைப் பொறுக்கியெடுத்தவர்களுக்கு அவனால் எவ்விதப் பயனும் இல்லை; அவர்களில் அவன்தான் துளியும் உருப்படாதவன், உதவாக்கரை."

"இல்லை அவர்களில் அழகன்" என்றேன் நான். வெறும் வாதத்திற்காகத்தான் இப்படிச் சொன்னேன். இதுபோன்ற சிறு விவகாரங்களில், முரண்பட்ட கருத்துக்கள் தான் சிறை வாழ்க்கைக்குச் சுவையளிக்கக் கூடியவை.

இரண்டு வாரங்களுக்குப்பிறகு ஒரு நாள், அந்த மௌனப்பேர்வழி என்னைப் பார்த்து, கண்ணைச் சிமிட்டியதுபோல் எனக்குத் தோன்றிற்று. நானும் அதே ஜாடை காட்டிப் பதிலளித்தேன். சிறையில் அந்த ஜாடைக்கு எத்தனையோ அர்த்தம். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

ஒருவேளை நான் நினைத்தது தவறாக இருக்கக்கூடும். எனினும் ஒருமாதம் கழிந்த பிறகு, எல்லாம் தெளிவாக எனக்குத் தெரிய ஆரம்பித்தது. இது ஒரு வண்ணாத்திப்பூச்சி முட்டைக் கூட்டை உடைத்து வெளிவருவது போல, திடீரென்று நிகழ்ந்தது; மௌனக்கூடு உடைந்தது. அதிலிருந்து ஒரு ஜீவன் வெளிப்பட்டது. அது வண்ணாத்திப்பூச்சி அல்ல; ஒரு மனிதன்.



இந்தக் குண விசேஷக் குறிப்புகளில் பலவற்றைப் பற்றி "நீ அழியாத நினைவுச் சின்னங்களை எழுப்புகிறாய்" என்று அப்பா சொன்னார்.

இங்கேயும் வெளியேயும், வீரத்துடனும் உண்மையுடனும் போராடி உயிர்விட்ட தோழர்களைப்பற்றிய நினைவுகள் அழியாமல் காப்பாற்றும் பொருட்டு அவர் சொல்வது போல் நினைவுச் சின்னங்களை எழுப்பவே நான் விரும்புகிறேன்.

ஆனால் நான் அத்துடன் நிற்க விரும்பவில்லை. அவர்களுக்கு எவ்விதத்திலும், தைரியத்திலும், விசுவாசத்திலும் குறையாமல், மிகவும் கஷ்டமான சந்தர்ப்பங்களில் எங்களுக்கு உதவி செய்து சாகாமல் வாழ்கிற-தோழர்களைப் பற்றியும் நான் நினைவுச் சித்திரங்களைத் தீட்ட விரும்புகிறேன்.

பான்கிராப்ட்ஸ் சிறையின் பேய்ச் சூழலில் இருந்து மீட்டு, கோலின்ஸ்கி, இந்த செக் போலிஸ்காரன் போன்றவர்களை வாழ்க்கையின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து எல்லோருக்கும் காட்ட ஆசைப்படுகிறேன். இது அவர்களுடைய புகழுக்காக அல்ல; மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான்.

(தொடர்ந்து வரும்)

# மறதி

ரூபராணி



அந்தப் பிரபல கல்லூரி மணி ஒலித்து இடைவேளை முடிந்ததை அறிவித்தது.

இரைச்சலும் கூச்சலும் அடங்கி அமைதியாக மாணவிகள் வகுப்பறையை நோக்கி வரிசையாக விரைந்தனர்.

லலிதா ரீச்சர் பரபரப்புடன் ஏழாம் ஆண்டு வகுப்பறைக்குள் நுழைந்தாள். அந்த முகத்தில் கலவரம் பௌடராய் அப்பிக் கிடந்தது. வகுப்பறையில் நிறைந்திருந்த மாணவிகள் மதிய வணக்கம் சொன்னார்கள், லலிதா ரீச்சருக்கு. பதில் வணக்கம் ரீச்சர் சொல்லாமல் விட்டது மாணவிகளை வியப்பிலாழ்த்தியது.

"எல்லோரும் இப்படியே நில்லுங்கள். படிப்பைவிட நல்ல பழக்கம் முக்கியம். என்னுடைய கைப்பையிலிருந்த நூறு ரூபாயைக் காணவில்லை. இந்த வகுப்பு மேசை மீதுதான் என் கைப்பையை வைத்தேன். யார் எடுத்தது? உண்மை சொல்லும்வரை உங்களை உட்கார விட மாட்டேன்." லலிதா ரீச்சரின் வார்த்தைகளில் அனல் கக்கியது.

புத்தகங்கள் பைகள் எல்லாம் சோதனைக்குட்படுத்தப்பட்டன. மாணவிகள் ஒருவரை ஒருவர்பார்த்து மிரளமிரள முளித்தனர். அவர்களின் முகத்தில் அச்சம் தீவிரமாய்ப்பரவியது. "நாங்க எடுக்கல்ல ரீச்சர்..." வாய்கள் முணுமுணுத்தன.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. பாடம் எதுவும் இடம் பெறவில்லை. "இப்போ எல்லாரும் உட்கார்ந்து யோசித்து உண்மையைச் சொல்லுங்கள் நான் ஒன்றும் பண்ண மாட்டன்" ரீச்சரின் குரலில் அமைதி வெளிப்பட்டது.

சடுதியாக ஒரு சலசலப்பு. எல்லோருடைய கண்களும் ஒரு முகத்தை மொய்த்தன. அந்த முகம் மேரியினுடையது. பழுப்பேறிய ஒட்டுப்போட்ட சீருடை. காய்ந்து வரண்ட இரண்டு குட்டிப் பின்னலில் சோர்ந்து தொங்கிய நீல றிப்பன்கள். மேரியின் அகன்ற விழிகள் அத்தனை முகங்களையும் பார்க்க முடியாமல் அங்கும் இங்கும் தவித்தது. "மேரி நீ எடுத்தியா?" திடீரென்று ரீச்சர் கேட்டாள்.

"நா... எடுக்கல்ல ரீச்சர்"

"ரீச்சர் இவ பொய் சொல்றா". சக மாணவிகள் சத்தமிட்டனர்.

"உண்மை ரீச்சர் நான் எடுக்கவேயில்ல" மேரியின் குரல் உடைந்து விம்மியது.

"மேரியின்ர அப்பா ஒரு கடையில களவெடுத்து, மறியலுக்குப் போனவராம் ரீச்சர்". கமலினி புதையல் கண்ட உற்சாகத்துடன் சொன்னாள்.

மேரியின் விழிகளில் வழிந்த நீர் அவள் சட்டைக் கொலரை நனைத்தது. "ரீச்சர் நான் எடுக்..கல்..ல" என்று திரும்பத் திரும்ப அதையே சொல்லியழுதாள் மேரி.

"சும்மா கேட்டால் உண்மை வராது. பிறின்சிப்பலிடம் பதிலைச் சொல்" என்று காரமாகக் கூறிய ரீச்சர் பள்ளிக்கூடம் விட்டதும் ஏனையோர் வீட்டுக்குப் போகலாம் என்று அனுமதி கொடுத்து மேரியை மட்டும் பிறின்சிப்பல் ஆபீசுக்குக் கூட்டிச் சென்றாள்.

பிறின்சிப்பல் பஞ்சலிங்கம் மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மறுபடியும் போட்டுக் கொண்டார். மேரியின் வறுமைக் கோலம் அவர் கண்களில் அப்பட்டமாய்த் தெரிந்தது. அவள் தன் கைவிரல்கள் ஒவ்வொன்றையும் முறித்தபடி நின்றாள். அவள் கன்ன மேடுகளில் கண்ணீர் உலர்ந்திருந்தது.

"மேரி.. திருடுவது தப்புத் தானே? அந்த நூறு ரூபாவை எங்கேயாவது ஒளிச்சியா?" மெதுவாக அன்பாகக் கேட்டார் பிறின்சிப்பல்.

அவள் தலையைப் பலமாக அசைத்துத் தான் எடுக்கவில்லை என்று உறுதியாகச் சொன்னாள். "நீ நாளக்கி உன் அம்மாவோடு தான் வரணும் புரியுதா?" என்று உரத்துக் கூறியவர் மேரியை வீட்டுக்குச் செல்லுமாறு உத்தரவிட்டார்.

லலிதா ரீச்சர் வீடுபோய்ச் சேரும் போது மணி ஐந்தை நெருங்கி விட்டது. அவளுடைய மகன் ராகுலன் அடுத்த வீட்டு ஜயந்தவுடன் விளையாடப் போயிருந்தான்.

ராகுலனின் உடைகளை அள்ளிக் கொண்டு குளியலறைக்குள் போனாள். ஒவ்வொரு கால் சட்டையாகப் புரட்டியவளுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. அவள் தலையில் யாரோ ஓங்கி அடித்ததுபோலிருந்தது. ராகுலனின் நீலக்காற்சட்டைப் பையுள் ஒரு நூறு ரூபாய் எட்டிப்பார்த்தது. புத்தம் புதிய நோட் நாலாக மடிந்து கிடந்தது.

லலிதா ரீச்சர் பதட்டப்பட்டவளாய் ஜயந்த வீட்டுப்பக்கம் நின்று அவசர அவசரமாய் ராகுலை அழைத்தாள். அவன் வேர்க்க விறு விறுக்க ஓடி வந்தான். "என் ஹான்ட் பாக்கிலிருந்த நூறு ரூபாயைக் காணல்லியே நீ எடுத்தியா?" லலிதா ரீச்சரின் குரல் நடுங்கியது.

"நான் எடுக்கல மம்மி"

"நீ எடுக்கவே இல்லியா?"

"ப்றொமிஸ் மம்மி நான் எடுக்கல்ல"

"ராகுல் உண்மை சொல். உன்ர கால் சட்டைப் பொக்கற்ல நூறு ரூபாய் எப்படி வந்தது?" கேள்வியில் கோபம் கொதித்தது.

"அது மம்மி காலையில நீங்க ரியூஷன் பீஸ் கட்டச் சொல்லித் தந்த காசு. சிவராம் சேர் இண்டைக்கி வரல. அந்தக் காசுதான் இது". ராகுல் ஆச்சரியத்துடன் தாயைப் பார்த்தான். "ஓ.மை காட்" ரீச்சர் அலறினாள்.

மறதி அவளைச் சவுக்கால் அடித்தது. மேரியின் கண்ணீர், லலிதா ரீச்சரின் இதயத்தை வாளாக அறுத்தது.

"சே.. என்ன மறதி எனக்கு". எவ்வளவு சீக்கிரம் ஏழைகளைச் சந்தேகம் விழுங்குகிறது? மேரியின் வாயிலிருந்து வந்த சத்தியம் தோற்றுப்போனதுக்கு வறுமை தான் காரணமா?

வழமைபோல் காலை மலர்ந்தது. இன்று மேரிக்காகப் பாடசாலைக்கு ஓடுகிறாள் லலிதா ரீச்சர். அந்த வகுப்பில் மேரியின் இடம் காலியாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# தீபமும் தீக்குச்சியும்......

இரா. கலைவாணி
கனடா

அவன் அந்த இடத்திற்குத் தான் பொருத்தமற்று இருப்பதை உணர்ந்தான். தன் பாதங்களின் அழுக்கு ஜமுக்காளத்தில் ஒட்டிக்கொண்டு விடுமோ எனத் தயங்கினான்.

அதற்கிடையில் எங்கிருந்தோ ஒரு குரல் அவனை அழைத்தது.

"வாருங்கள்....!"

'அடடா...! அத்தனை வாத்தியங்களிலிருந்தும் பிறந்த இசையைக் குழைத்து இவள் குரலைச் செய்தது யார்....?' அவன் மலைத்துப் போய் நின்றான். அவள் அவன் கைகளைப் பற்றி அங்கு விரிக்கப் பட்டிருந்த ஜமுக்காளத்தில் அமரச் செய்தாள். வேறொரு பெண் பட்டுத்தலையணைகளை இவன் முதுகுக்கு அணையாகக் கொடுத்தாள்.

**"போகலாமா?" தேனில் தோய்த்தெடுத்த வார்த்தைகள் வந்துவிழுந்தன....**



இவளோ தானே அவனுக்கு அணையானாள்!

'சொர்க்கம்....சொர்க்கம் என்று சொல்கிறார்களே....அது இந்தக் கூடத்தின் பக்கத்தில் நிற்கத்தகுதி உடையதா?' என அவன் பிரமித்தான்.

கூடத்தின் நடுவில் பெண்ணொருத்தி சல்லாத்துணிகள் சுழல ஆடிக்கொண்டிருந்தாள். அந்த ஆட்டத்தை இரசித்தபடி ஆண்கள் கூட்டம் மயங்கிக் கிடந்தது. மதுக்கோப்பைகள் உதடுகளோடு சரசம் செய்து கொண்டிருந்தன.

இன்பம்... இன்பம்.... இதைத்தவிர வேறு எதுவும் இங்கில்லை.

"அப்பா! பசிக்கிறது!" என்ற குழந்தைகளின் கூக்குரல் இல்லை.

"ஒரு பொருள்கூட இல்லை. எல்லாம் தீர்ந்து விட்டன!" என்ற மனைவியின் முறையீடு இல்லை.

அந்த மாளிகையின் கதவைத் திறந்து கொண்டு தெருவில் இறங்கியதுமே அத்தனை இல்லாமையும் ஓவென்ற இரைச்சலோடு அவனிடம் ஓடிவரப்போவதை அவன் உணர்ந்திருந்தான்.

ஆனால்... "எடுத்துக் கொள்ளுங்கள்." என அவனிடம் நீட்டப்பட்ட மதுவை மறுக்கத் திராணியில்லாமற்போனது. "எனக்குப் பழக்கமில்லை! வேண்டாம்!" என்ற வார்த்தைகள் உதட்டைத் தாண்டாமலே உறங்கிப் போயின.

இளம் சிவப்பு நிறமான அந்தத் திரவத்தினுள் வந்து நின்று கெஞ்சியது மனைவியின் மெலிந்த முகம்.... "வேண்டாம்! மது மதியை மயக்கி விடும்!"

"ஆ.... இங்கேயும் வந்துவிட்டாயா என்னை வருத்த...?" என்று கேட்டபடி அவளையே விழுங்குவதாய் எண்ணி ஒரே மூச்சில் மதுவை உள்ளிழுத்தான்.

'ஆஹா! இது என்ன... காற்றில் மிதப்பதாய் ஒரு உணர்வு.... உடம்பே இல்லாமல் உயிர் மட்டும் சொகுசாய் நடக்கிற சுகம்....! என்னை அணைத்திருக்கும் இந்தத் தோகையின் தேகம் மயிலிறகாய் மாறி விட்டதா என்ன...? அதோ சுழன்று சுழன்று ஆடுகிறாளே அந்தச் சுந்தரியின் கால்களிலிருந்துதான் தாழம்பூ தன் நிறம் பெற்றதோ....எல்லாம் அழகாய்...எல்லாம் இனிதாய்.... எல்லாம் சுகமாய்...எங்கே பெண்ணே! கொண்டு வா...இன்னொரு கோப்பை மது....!'

மது உள்ளே இறங்க இறங்க அவன் தன்னுடைய துன்பங்கள் வெளியேறுவதாய் உணர்ந்தான்.

"போகலாமா....?" தேனில் தோய்த்தெடுத்த வார்த்தைகள் வந்து விழுந்தன.

அவனை அணைத்திருந்தவள் மெல்லிய விளக்கொளியில் இன்னொரு சிற்பமாய் எழுந்து நின்றாள்.

அவன் உடனே பதிலளித்துவிடவில்லை. அவள் எழுந்து நின்ற எழிலை கண்களால் பருகினான். அவள் இடையைச் செதுக்கிய சிற்பியின் கைவண்ணத்தை அவனால் வியக்காதிருக்க முடியவில்லை. அவளைப் பார்த்தபோது அவன் ஏனோ தன் மனைவியை நினைத்துக்கொண்டான்.

சதைப்பிடிப்பற்ற உடல்... ஒட்டிய கன்னங்கள்.....உள்ளடங்கிப் போன விழிகள்....ஏழ்மையைப் பறைசாற்றுகிற பரட்டைத் தலை....சதா ஒரு ஏக்கப்பார்வை; இல்லாமையின் இன்னொரு உருவமான அவள்.....கங்கா.....!

'சே...! இந்த வேளையில் அவள் நினைவு எதற்கு....?' மதுபோதையில் அவன் வெற்று வெளியை நோக்கி கைகளை வீசினான். கண்ணெதிரே இல்லாத மனைவியின் நினைவுகளைக் கலைத்து விடுவதாய் எண்ணிக்கொண்டே கைகளை வீசினான்.

அவனுடைய செயல் அந்த நித்திய கன்னிக்குப் பைத்தியச் செயலாய்த் தோன்றியிருக்க வேண்டும்.

கலீரென நகைத்தாள்!

'அற்புதமான ஜலதரங்கம். வெள்ளி மணிகளை அள்ளி இறைத்தாற்போல சிரிக்கிறாளே இந்தக் கள்ளி....' என்று தனக்குள் வியந்தபடி எழுந்து நின்றான் அவன்.

பொய்யோ எனும் இடையில் கையது கோர்த்து அவள்மீது மெய்யது சேர்த்து மெல்ல நடந்தான்.

அவள் அவனை அழைத்துச் சென்ற அறையின் சுவர்களில் காமனே கண்டு கண் புதைக்கும் வகையில் ஓவியங்கள் தொங்கின. ஊதுபத்தியும், சந்தனமும், அத்தரும் கலந்த வாசனை கமழ்ந்து கொண்டிருந்தது.

கட்டிலில் சாய்ந்த காரிகை அவனைக் கண்களால் அளந்தாள்; பின் அழைத்தாள். இதோ இன்பம் கண்முன்னே கைவிரித்தழைக்கிறது! 'இன்னமும் தயக்கமா?' என்று தன் இருவிழிகளை ஏவினாள்; அவன் மார்பில் தாவினாள்.

இத்தனை மிருதுவாய் பெண் இருக்கக் கூடுமா....? முன்னம் அறிந்ததில்லையே.... என்ற ஆராய்ச்சி பிறந்தது.

'ஆனால்.... ஆனால்.... ஏன் இப்படி தலை சுழல்கிறது? உள்ளே போன மது தொண்டைக்குள் வந்து துன்புறுத்துகிறதே...! பழகாத மாதுவோடு மயங்க உடல் இடம் கொடுக்கிறது. பழக்கமில்லை என்று குடல் மதுவை மறுதலிக்கிறதே...!'

சிந்திப்பதற்குள் அது நிகழ்ந்தே விட்டது!

உரத்த இரைச்சலோடு மது வெளியே வந்தது. பஞ்சணையில் புளித்த பதார்த்தங்களின் நெடி...! அந்தப் பாவையிலும் கூட.

"சே...!" அவள் ஒற்றைச் சொல்லில் உதறி எழுந்தாள்.

"பிச்சைக்காரனுக்கு பெண் இன்பமா...? என்ன நாற்றம்....சகிக்க முடியவில்லை!"

தேன் இப்போது தேளாய்ப் பாய்ந்தது.

"பிச்சைக்காரன்....!" அந்த வார்த்தை அவனைச் சுட்டது. போதை விடுபட்டது.

"சே...! பரத்தை...! நீ காசுக்குக் கட்டிய வேஷமல்லவா இது...?"

துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு நடந்தான். 'இந்தச் சங்கீதம்....இந்த சாகசப்பெண்கள்... இந்த சதிராட்டம்...இந்த இன்பம்...எல்லாம் கற்பனை சுகம்.... இவர்கள் அந்த சுகத்தை விற்பனை செய்யும் ஒப்பனை உறவுகள்..!'

கையிலிருந்த காசை அள்ளி எடுத்து அரங்கத்தில் எறிந்தான்.

கதவு திறந்தது காற்றென நடந்தான்.

'கங்கா! கங்கா!' அவன் மனம் ஓலமிட்டது.

அவள் காத்திருந்தாள்!

"எங்கே போனீர்கள்...? இத்தனை நேரமாய் எங்கிருந்தீர்கள்? குழந்தை அப்பா... அப்பா...என்று அழுது அழுது உறங்கிப் போய் விட்டது." படபடத்தாள்.

அவன் அவளுடைய மெலிந்த தோள்களில் சாய்ந்து கொண்டான். அவளுடைய எலும்புகள் அவன் முகத்தில் உறுத்தின. அவனுக்கு சுகமாக இருந்தது. அவள் மீண்டும் கேட்டாள்.

"எங்கே போயிருந்தீர்கள்.....?"

"கடைவீதிக்கு...!"

"ஒன்றும் வாங்கி வரவில்லையே.....?"– மனைவி

"உண்மையை வாங்கி வந்தேன்!"

அவள் கன்னத்து எலும்புகள் துருத்தி நிற்க உரத்து நகைத்தாள்.

தூளியில் கிடந்த குழந்தை எழுந்து "அப்பா" என்று அழுதது. தகப்பன் அள்ளிக் கொண்டான். குழந்தை அவன் கையில் சொர்க்கமாய், சொக்கத்தங்கமாய்க் கிடந்தான். தாயின் அழகையெல்லாம் தான் வாங்கிக் கொண்டு விட்டதை தந்தைக்கு உணர்த்தினான். அவன் கண்கள் கங்காவைக் காதலோடு நோக்கின.

'இந்தத் தீபத்தை ஏற்றிய தீக்குச்சி நீ... உன்னை எரித்தல்லோ இதை ஏற்றினாய்.... என்னை மன்னித்துவிடு.' மானசீகமாக மன்றாடினான்.

# 'குப்பை...'

கிண்ணியா அமீரலி



பொழுது விடிந்தது.

சேவல் கூவியது.

காகம் கரைந்தது.

பாலா நித்திரை விட்டு எழுந்தான்.

அவன் பல் துலக்கி, முகம் கழுவினான்.

காலைச் சாப்பாடு சாப்பிட்டான்.

சுத்தமான உடை உடுத்தான்.

மனைவி வந்தாள்.

"இந்தக் குப்பை கூளத்தைக் கொஞ்சம் அள்ளி எறிஞ்சா என்னய்யா....?"

"நீ சும்மாத்தானே நின்னுட்டுக்கே.......... அள்ளிப் போடேன்டி..."

"எனக்கு நேரமாவுதுய்யா...."

"எங்களுக்கு மட்டும் என்னவாம்...?"

"அள்ளிப் போடுய்யா...."

"அட...சும்மா போ புள்ள.... மனுஷன் இஞ்ச வேல வெட்டின்னு போகக்குள்ள...."

"யோவ்....ஒம் பையனோட குனிய ஏலாதுய்யா....."

"அறைஞ்சேன்னா பாரு.... வூடு வாசல....நாந்தாங் கூட்டணுமாக்கும்.....?"

"ஒடம்புக்கு முடிஞ்சா ஒன்னயேன் கெஞ்சுறன்....?"

"இந்தா...எனக்கு டைமாயிடிச்சி...இந்தக் குப்பையெல்லாம் அள்ளிக்கிட்டிருக்க நேரமில்லை...ஆளவுடு..."

"சரி...அத வுடுய்யா.....'கஞ அய்யா' கள்ளுக் குடிக்கக் கூப்பிட்டான்னு இன்னிக்கும் போயிராத...சொணங்காம வந்துருய்யா.... 'இந்தியன்' பார்க்கப்போவம்...."

"ம்...ம்....நான் வாறன் புள்ளோய்...."– வாசலுக்கு ஓடினான். அதோ....அவனையும் ஏற்றிக்கொண்டு போக– புத்தம் புதிதாய்.... அழகாய்....வந்து கொண்டிருக்கிறது அந்தக் குப்பை வண்டி!

ராஜசேகருக்கு ஒரு பக்கம் ஆச்சரியமாகவும் இன்னொரு பக்கம் கவலையாகவும் இருந்தது.

டாக்டர் பட்டம் பெற்றபின் நல்ல சீதனத்தோடு ஒரு அழகான பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று அவன் போட்ட திட்டம் நடைமுறையில் சிக்கல் மிக்கதாக இருந்தது.

நல்ல சீதனத்தோடு நிறையப் பெண்கள் கிடைத்தார்கள். ஆனால் ராஜசேகர் எதிர்பார்த்ததுபோல் அழகான பெண் கிடைக்கவில்லை.

சீதனத்தை மட்டும் வைத்து என்ன செய்வது? பெண் ஓரளவாவது தன் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடியவாறு அழகாக இருக்க வேண்டும் என்பதில் ராஜசேகர் உறுதியாக இருந்தான்.

ஏற்கனவே ஆறு பெரிய இடத்துப் பெண்களைப் பார்த்தாயிற்று. ஒன்றும் அவனுக்குப் பிடிக்கவில்லை. இப்பொழுது ஏழாவதாக நிவேதா என்ற பெண்ணின் புகைப்படத்தை ராஜசேகருக்குப் பெற்றோர் காட்டினர். நிவேதா மிக அழகாக இருந்தாள். ராஜசேகருக்கும் அந்தப் பெண்ணைப் பிடித்திருந்தது. இருப்பினும் உடனடியாகச் சம்மதம் சொல்லவில்லை. ஒரு நாள் முழுவதும் நன்கு யோசித்துவிட்டு "பெண் பிடிக்கவில்லை" என்று சொல்லி விட்டான்.

அப்படிச் சொன்னதில் அவனுக்கும் உடன்பாடில்லை. இருப்பினும் அவசரப் படாமல் இருந்தால் இதைவிட அழகான, வசதியான ஒரு பெண்ணைத் தேடிப் பிடித்துத் திருமணம் செய்யலாம் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

**சீதனப்பிரச்சனையால் ஆண்களும் பாதிக்கப்படுகிறார்கள்!**

# ச்சே!



எம். சுரேஷ்

இப்பொழுது 18வது புகைப் படம், 19வது புகைப்படம்....ச்சே! ஒன்றுமே சரியில்லை. அழகிருந்தால் சீதனமில்லை. சீதனமிருந்தால் அழகில்லை. இரண்டுமே இருந்தால் ஜாதகக் கோளாறு..... ராஜசேகருக்கு வெறுப்பாய் இருந்தது.

'ச்சே! பேசாமல் அந்த நிவேதாவையே கல்யாணம் செய்திருக்கலாம்.' மனச்சாட்சி சொல்லியது.

'இந்த மனச்சாட்சி எப்பொழுதுமே இப்படித்தான். காலம் கடந்த பின்புதான் உருப்படியான யோசனையைச் சொல்லும்.'

ராஜசேகர் அலுத்துக் கொண்டான்.

நாளைக்கு இன்னொரு படத்தையும் பார்க்க வேண்டும்!

# கருகிப்போன நினைவுகள்!

புன்னகை வேந்தன்

சிறு பிராய நினைவுகள் இன்னும் என் மனதில் பசுமையாக நிறைந்துள்ளன. அதை நினைக்கும்போது ஆற்றுக்கு அருகில் உள்ள மூத்தவாப்பாவின் பழைய வீடுதான் என் மனதைத் தொட்டுத் தழுவி நிற்கும்! நான் சிறு பிராயத்தில் வாழ்ந்த வதிவிடம் அல்லவா அது!

அங்கே பற்றைக் காடு போல் வளர்ந்த தோட்டத்தில் அலரி மரங்களும் பெருங்கிளை பரப்பி வளர்ந்திருந்தன. இங்கிதமான மாலைப் பொழுதில் இதமான தென்றல் வந்து அலரிப் பூக்களை ஆலிங்கனம் செய்து சுகந்தமான மணத்தை வாரி இறைக்கும்.

புல் தரைகள் கச்சிதமாகக் கத்தரிக்கப் பட்டு எழிலாகக் காட்சியளிக்கும். அதே போன்று மலர்ச்செடிகளும் நன்றாகப் பராமரிக்கப்பட்ட நிலையில் கவின்பெற்றுக் காட்சியளிக்கும். புல் தரையின் மத்தியில் அமைந்துள்ள ரோஜாச் செடிகள் எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல மனோரம்மியமாகக் காட்சியளிக்கும்.

ஜூன் மாத ஆரம்பத்தில் வண்ணாத்திப் பூச்சிகள் ரோஜாப் பூக்களை முத்தமிட்டுப் புளகாங்கிதம் அடையும். அதே வேளை தேனீக்கள் மொட்டவிழ்ந்த ரோஜாவிலிருந்து மகரந்தம் நுகர்ந்து கானம் பாடிக் களிக்கும்– இளம் காலைப் பொழுதில் வெட்டுக்கிளிகள் புல் தரையில் பவனி வந்து சுகம் காணும்! இவைகள் அனைத்தும் குட்டிச் சொர்க்கத்தை உற்பத்திசெய்து மனதில் மனோகரமான உணர்வுகளை உதயமாக்கின.

தோட்டக்கலையில் அலாதியான விருப்பம் கொண்ட எனது மூத்தவாப்பா ஒவ்வொரு நாளும் அந்திசாயும் போதில் கோலூன்றி மெதுவாக நடந்து வந்து தோட்டத்தின் பேரழகைப் பார்த்து மனம் கொண்ட மட்டும் அள்ளிப் பருகி இரசித்து மகிழ்ச்சி பெறுவார். சில சமயங்களில் தோட்டத்து திண்ணையில் உள்ள சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து தோட்டத்தின் அழகை எல்லாம் உற்று நோக்கி இரசிப்பார். அவருக்கு அந்த ரசனை இதமாகவும், அருமருந்தாகவும் அமைந்தது.

காலங்கள் கரைந்து கொண்டிருந்தன. எனது அம்மாவின் சகோதரிக்குத் திருமணம் செய்து வைக்கும் நாளும் நெருங்கி வந்தது. அதனால் இரண்டு சகோதரிகளுக்கும் சொத்துகளைப் பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டும் அல்லவா? பிரச்சனை சூடு பிடிக்க ஆரம்பித்துவிட்டது. ஐக்கியமாக, நேசமாகப் பழகிய சகோதரிகள் பாகப்பிரிவினை தொடர்பாகச் சண்டையிட்டுக் கொண்டனர். அற்பமான விடயங்களும் பெரும் சமராக முளைவிட்டன.

சகோதர வாஞ்சை உணர்வுகளில் நஞ்சேறி வக்கிரமான உணர்வுகள் மனதை ஆதிக்கம் செலுத்தின. பாசமும் பிரியமும் நிரந்தரமாகவே விடை பெற்றுக் கொண்டன. விளைவு! நிரந்தரமான வேலி போட்டு நிலம் பிரிக்கப்பட்டது. மக்கள் சீனாவின் நீண்ட நெடுஞ்சுவர்போல அந்த வேலி மரக்கட்டைகளால் அமைக்கப்படலாயிற்று.

ஆண்டுகள் உருண்டோடின! சின்னம்மா தனது பங்கு நிலத்தை நல்ல காசுக்கு விற்றுவிட்டு குடும்பத்தோடு அவுஸ்திரேலியாவுக்குக் கப்பலேறிவிட்டாள். எனது கல்வியை முன்னிட்டு எனது பெற்றோரும் தமது பங்கை விற்றுவிட்டு கொழும்புக்கு வந்து விட்டனர்.

காலத்தின் அசுர வேகத்தில் அந்தப் பழைய வீட்டு ஞாபகங்களும் மனதில் இருந்து மீளாத்துயில் கொண்டுவிட்டன. அந்திப் பொழுதில் வாடிவிடும் அலரிப்பூக்களைப்போல அந்த ஞாபகங்களும் கருகித் தான் போய்விட்டன.

ஒரு ஞாயிற்றுக்கிழமை! அந்த வீட்டைப் பார்க்க எனக்கு ஆவல் உண்டானது. நான் சென்று பார்த்தேன். அந்த வேலி கறையான்களின் அரிப்புக்கு ஆளாகி அலங்கோலமாகக் காட்சி தந்தது! தோட்டம் முழுமையாகவே கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. ஆள் உயரத்துக்கு களைகளும், செடிகளும் வளர்ந்து காடு மண்டிக் கிடந்தது. பாம்புகள், நுளம்புகள், தவளைகள் ஏகபோக ஆட்சி செலுத்தின. வண்டுகளின் ரீங்காரம் காற்றில் எதிரொலி செய்தது.

நான் அந்த வேலியை நோக்கி நடந்தேன். அருகில் நெருங்கியதும் என் நேத்திரங்கள் பனித்தன. பழைய நினைவுகள் என் மனதில் ஊர்வலம் வந்து சோகங்களைக் கக்கின.



பகலவன் பள்ளியறை நோக்கி நடைபோட இருள் அரக்கனின் ஆட்சி ஆரம்பம்! சில்லூரிகள் ஓசையிடத் தொடங்கி விட்டன! வேலியின் கட்டைகள் வெடித்து வாய் பிளந்த நிலையில் இருந்தன.

உடலெல்லாம் வியர்வையால் ஈரமாகி விட்டன. கால்கள் தள்ளாடின. பாகப் பிரிவினைச் சண்டைக் காட்சிகள் சினிமாப்படம் போல மனத்திரையில் உலா வந்தன. மீண்டும் கண்களில் நீர் சுரந்தது. எனது அனுபவத்தை ஒரு கிராமவாசியிடம் தெரிவித்தேன்.

அந்தக் கிராமவாசி, "மூத்தவாப்பா மரணித்த நாளில் இருந்து பேய் பிசாசு வாழும் இடமாகவே இந்த வீடு இருக்கிறது! துணிச்சலும், தைரியமும் உள்ள சிலரால் தான் இந்தப் பகுதியை இராக்காலத்தில் கடந்துபோக முடிகிறது!" என்று சொன்னான். 'என்ன விந்தை இது!' நான் மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்!

அற்ப காரியங்களுக்காக பொறாமை கொண்டு, பகைமையை வளர்த்துக் கொள்வதனால் குடும்பத்துக்கும் இலாபமில்லை! தேசத்துக்கும் பிரயோசனமில்லை! வீண் பெருமை பேசி கசப்பைச் சம்பாதிப்பதில் என்னதான் பயன் வரப்போகிறது? வீண் பிடிவாதமும் வீண் பெருமையும் வேலி போட்டுச் சொத்தைப் பிரித்துவிட்டது. விலை மதிப்பில்லாத சொத்து இன்று காடு மண்டி விஷப்பிராணிகள் வாழும் இடமாக மாறி விட்டது.



படிப்பகம்

புலவருக்கெல்லாம் புலவர் பொன்முடி
பகைவருக்கெல்லாம் எமன் தளபதி.
தளபதிக்கும் புலவருக்கும் தினம் பிணக்கு
தலையிட்டு தீர்வு கண்ட மன்னருக்கு சலிப்பு!

"ஏனப்பா தளபதி, புலவர் சொல்லுக்கு அதிபதி
நீயோ வில்லுக்கு அதிபதி
வேண்டும்தானா அவருடன் விரோதம்?
மன்னன் தளபதிக்கு புத்தி சொன்னான்.

"வாள்தான் பெரிது என்கிறேன் நான்
நா தான் பெரிது என்கிறார் அவர்
வில் கண்டுதான் பகை அஞ்சும் என்றால்
சொல் கண்டும் பகை நடுங்கும் என்கிறார்!"
தளபதி தன் தரப்பு நியாயம் சொன்னான்.

"கல்லடி பட்டால் உடல்தான் காயப்படும்
சொல்லடி பட்டால் உள்ளம் காயப்படும்
கைவாள் வீசினால் உயிர்தான் சாகும்
நா வாள் வீசினால் உள்ளமே வேகும்"
மன்னன் முன்பாய் புலவர் பொருமினார்.

"கண்ணே, மணியே- கட்டிக் கரும்பே என்றால்
கையிடை விழுந்து கட்டித்தழுவ பாவையர் அல்ல பகைவர்;
சொல் அங்கே உதவாது, வில்தான் உதவும்!
கல் கூட எதிரியின் நெற்றியைப் பிளக்கும்
சொல் அங்கே வெற்றிக்கு துரும்பாயும் உதவாது!"
தளபதி மார்பு நிமிர்த்தி முழங்கினான்.

"அறிஞர்கள் முன்னால் அரசனே அடக்கம்
அறிஞர்கள் பேச்சு சபைகளும் கேட்கும்
ஆயுதம் என்பது அறிவுக்குப் பின்தான்
ஆயிரம் காரணம்-அறிஞரே பெரியோர்!"

"ஆயுதம் இன்றி வெற்றியே இல்லை
அறிஞர்கள் சொற்கள் பகைவர் கேளார்
உருவிய வாள்தான் பகைவரை மிரட்டும்
வில்லின் அம்பே பகைவரை விரட்டும்!"

"வீரத்தை நான் வெறுத்தது இல்லை
வில்லையும் நான் இகழ்ந்தது இல்லை
ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
வில்லும் வேலும் நாட்டுக்குறுதி.
சொல்லும் எழுத்தும் உள்ளத்துக்குறுதி!
வில்லையும் மதி-பெரியோர்
சொல்லையும் மதி அதுவே உறுதி!"

புலவரின் பேச்சை தளபதி மறுத்தான்
"போதும் உங்கள் பொல்லா வாதம்
மோதும் படையாய் மாற வேண்டாம்"
மன்னன் தலையிட்டு சமரசம் செய்தான்!

புலவரைக் கண்டால் தளபதி நகைப்பான்
புழுங்கச் செய்யும் கேலி நகைப்பு
"முறைக்காதீர் புலவரே!-என்னை
முறித்துப் போட நினைக்கிறீர் அல்லவா?
முடியாது உம்மால் நான் வில்லில் வீரன்
வில்லெடுத்து நீரும் வாரும்
சொல்லெடுத்து என்னை அசைக்கவா முடியும்?"

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
அறிஞருடன் பகைக்கின் பேரும் கெடும்
பொறு மகனே நாள் அது வரும்!"
புலவர் சொல்லி விலகிப் போவார்.

காலம் வந்தது-அந்த நாளும் வந்தது
பகைக் கோலம் பூண்டது பக்கத்து நாடு



# இலக்கிய நயம்

# சொல்லோ வில்லோ?

"முதலில் பேச்சு, மறுத்தால் போர் வீச்சு
செல்லுக தூது, பணியமறுத்தால்
படையுடன் சென்று கூறுபோடு!"
மன்னன் இட்டான் உத்தரவு

"யார் மன்னா தூதன்?"
"நீதான் தளபதி, நீதான் தூதன்
பொறுப்புடன் செல்க-எதிர்த்தால்
வெறுப்புடன் வந்து படையுடன் செல்க!"

பகைநாட்டு இளவரசி-ஆனால்
பருவத்தின் வனப்பில் அரசி!
தளபதிக்கும் அந்த தங்கக் கிளிக்கும்
காதல் மலர்ந்தது. கனவாய் விரிந்தது!

"போர் என்ற நச்சுப்புகை
பூத்துவிட்ட காதல் செடியைக்
கருக்கிப் போட்டுவிடப் போகிறதோ?"
தளபதி மனம் சுருங்கிக் கொண்டே
அயல்நாட்டுக்கு தூதாய் போனான்!

"சூழப்போகும் போர்-நம்
காதல் சுவாசத்தையே
களங்கப்படுத்தி விடுமா கண்மணி?"
மனதில் இருந்தவளிடம்
மனுப்போட்டு விசாரித்தான்!

"கன்னத்தை கரங்களில் ஏந்தி
கிண்ணமென இதழ்களில் நீந்தி
சின்னமென பல குறி பதித்து
வண்ணமென பல சுகம் அள்ளி
என்னமாய் கலந்திருந்தோம் தோழி!

பதிந்த நகக்குறி காய்வதற்குள்
விழுந்த பற்குறி அழிவதற்குள்
பறந்து வருவேன் என்றுரைத்தார்.
பகையாய் வருவார் என்றறிந்து
பதையாய் துடிக்குது என் உயிரே!"
இளவரசியும் கலங்கிக் கொண்டிருந்தாள்.

தூதனாய் சென்ற தளபதியை
பகைநாட்டு மன்னன் பரிகசித்தான்.
"சமரே வேண்டாம் என்றால்
சரணடைய வேண்டும் நீங்கள்!"

வீரன்தான் தளபதி-காதல்
அந்த வீரத்தை கட்டிப்போட்டது.
கொந்தளிக்க வேண்டிய காளை
குறுகி நின்று கோரிக்கை விட்டான்;
"நமக்குள் பகை எதற்கு
உறவுதான் வெல்லம்
பாயவேண்டுமா இரத்த வெள்ளம்?"
மறு பரிசீலனை செய்க மன்னா!

"முடிவை மாற்ற வேண்டுமானால்
ஒரு நிபந்தனை!"
"என்ன மன்னா! என்னிடம் சொல்க
எங்கள் மன்னரிடம் சென்று உரைப்பேன்"

"நீ எந்தன் மருமகனாக வேண்டும்
எங்கள் சேனையின் தளபதியாக வேண்டும்!"

'கட்டிளம் பெண்ணாள்-கொவ்வை
இதழாள்-இன்பம் கொட்டுகின்ற
எழில் உரு உடையாள்.
சுட்டும் விழி, நீளும் குழல்
குத்தவரும் எழில்கள்-மடை
திறந்த வெள்ளமென சொர்க்கம்
தரும் தங்க நிகர் பெண்ணாள்'
தளபதி மனதில் அவள் உருவம்.

'பதவியை விட்டால் என்ன
பாவையை தொட்டால் போதும்'
காதல் பித்து கால் இடறியது.

"நான் தயார் மன்னா
வான் வரை உயரம் நீவிர்;
காண்கிலேன் உம்போல்
ஒரு மன்னவன் உலகில் யானே!"

தூதாக வந்தவன்-பகை நாட்டு
தோழனாக திரும்பிச் சென்றான்.

மன்னன் சபையில்
தளபதி தன் தூது விளக்கம்
உரைத்து நின்றான்.

புலவர் பக்கம் திரும்பிய மன்னன்
"தளபதியின் தூது எப்படிப்
புலவரே? வெட்கம் அன்றோ
விவேகம் இதுவோ?"
வினா தொடுத்தான்.

புலவர் உடனே மறுத்துச் சொன்னார்.
"மெச்ச வேண்டும் மன்னா
மெச்ச வேண்டும்- நான்
ஒரு பாட்டால் வாழ்த்தவேண்டும்!"

'வாழ்த்துக' என்றார் மன்னர்
வியப்புடன்!

புலவர் பாடினார். புலமையாய் பாடினார்.
"தூ!தூ! போ! நாயே!-நீ
தூ!தூ! போ! நாயே!"

தளபதி கொதித்தான்
"பதவியில் உள்ள தளபதியை
நாய் என்று இகழ்வது
நாட்டுக்கு இழுக்கு
நாயகனே தீர்ப்பு வழங்குக!"

"என்ன புலவரே!
ஏன் நீர் இகழ்ந்தீர்?"
மன்னன் கேட்க புலவர் நகைத்தார்.
தூது போனாயே என்று பாடலை
நீட்டிச் செல்ல வார்த்தை வரவில்லை
வார்த்தை வரும் வரைக்கும்
தூதுபோனாயே என்பதை நீட்டிப் பாடினேன்!
ஆச்சரியம் மன்னா!
அதனை தூ போ நாயே என்று
அர்த்தப்படுத்திக் கொண்டது?"

தளபதி தலை குனிந்தான்
சபை கலைந்தது-புலவர்
அவன் காதில் ஓதினார்
"வில்லை ஏராக உடைய
பகைவருடன் பகைத்தாலும்
சொல்லை ஏராக உள்ள
அறிஞருடன் பகைக்காதே!"

"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"
குறள்-872, அதிகாரம்-88

துருவது ரசிகன்

ஸ்போர்ட்ஸ்

## இரசிகரைத் தாக்கினார் மக் மில்லன்

இந்தியப் பார்வையாளர் ஒருவரைத் தாக்கிய குற்றத்திற்காக தென் ஆபிரிக்காவின் ஒல்ரவுண்டர் பிரைன் மக் மில்லனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக ஜோகானஸ்பேர்க்கில் நடைபெற்ற 3வது டெஸ்ட் போட்டியின் முடிவில் இச் சம்பவம் நடைபெற்றது.

தென் ஆபிரிக்க ஐக்கிய கிரிக்கெட் சபையின் ஒழுங்கு கமிட்டி, மக் மில்லன் 30,000 ராண்டுகள் (சுமார் 427000 இலங்கை ரூபாய்கள்) அபராதம் கட்ட வேண்டும் அல்லது ஒரு போட்டியிலிருந்து நீக்கவேண்டும் என்று கூறியது.

இச் சம்பவம் குறித்து மக் மில்லன் கூறுகையில்,

"நான் ஒன்றும் அவரைத் தாக்கவில்லை. என்மனைவி, குழந்தை முன் நின்று கொண்டு நகர மறுத்தார். நான் மூன்று முறை எச்சரித்தேன். அருகில் இருந்த பாதுகாவலரும் ஏதும்செய்யவில்லை. எனவே நான் அவரைத் தள்ளினேன். இது ஒரு சாதாரண விஷயம். இதைப் பெரிதுபடுத்துகிறார்கள்," என்றார்.

டெர்பனில் இருந்து வெளிவரும் ஒரு நாளிதழ், 'இந்த நிகழ்ச்சி தென் ஆபிரிக்காவுக்கும், மக் மில்லனுக்கும் அவப்பெயரை உண்டாக்கிவிட்டது,' என்று எழுதியுள்ளது.

## அப்பாவுக்கு சிறை

வரி ஏய்ப்புக் குற்றத்திற்காக ஜெர்மன் நாட்டு டென்னிஸ் வீராங்கனையான ஸ்டெபி கிராஃபின் தந்தை பீட்டர் கிராஃபிற்கு மூன்று ஆண்டு மற்றும் ஒன்பது மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கரை மாதங்களாக நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வெளியிடப்பட்டது. இந்தக் குற்றத்தில் ஸ்டெபி கிராஃபிற்கு பங்கு இல்லை என்றும், அவருக்கு எதிராக நடைபெற்று வரும் விசாரணைகளை நிறுத்தி விடுமாறும் நீதிபதி கூறியுள்ளார்.

ஸ்டெபி கிராஃப் 1989 முதல் 1993வரை சம்பாதித்த 26 மில்லியன் டொலருக்கான 12 மில்லியன் டொலர் வரிப்பணத்தை ஏய்ப்புச் செய்த குற்றத்திற்காகவே பீட்டர் கிராஃபிற்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## இவர்கள்தான் அவர்கள்



ஜெயலலிதா



அரவிந்தசாமி

**★ விமானங்கள் வீழ்ந்ததுக்கும் புலிகளுக்கும் தொடர்புண்டா?**

கே. புவனேந்திரன், வவுனியா.

'இருக்கிறது' என்பது தீர ஆராயாத பூச்சாண்டி. 'இல்லை' என்பது புலிகளின் செய்தி. எந்தக் கோணத்தில் பார்த்தாலும் தொடர்பிருந்தால் புலிகள் அதை மறைக்க காரணமே இல்லை.

✉ ✓ ✍

# சிந்தியா பதில்கள்

**★ இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ராலின் விஜயம் பற்றி என்ன நினைக்கிறீர்?**

மு. செபஸ்தியாம்பிள்ளை, நீர்கொழும்பு.

ஏமாற்றம், வியப்பு என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. எதிர்பார்க்கக்கூடாத நேரத்தில், எதிர்பார்க்கக்கூடாததை எதிர்பார்த்தால், எதிர்பார்ப்பு எதிர்பாராததாகத்தான் அமையும். முரசின் வாசகர்களுக்கு முரசு எதிர்பார்த்துச் சொன்னதுதான் நடந்திருக்கிறது என்பதால் எதிர்பாராதது எதுவும் நடக்காமல் எதிர்பார்த்ததுதான் நடந்திருக்கிறது!

✉ ✓ ✍

**★ தமிழரசுக் கட்சியின் கொள்கை தனி நாடல்ல, சமஷ்டி தான் என்கிறாரே சிவசிதம்பரம்?**

வி. சத்தியபாலன், கொழும்பு-06.

நானும் படித்தேன் அச் செய்தியை. என் மனதில் இரண்டு கேள்விகள்:

1. தமிழரசுக் கட்சியின் கொள்கைமீது இத்தனை தெளிவுள்ள சிவசிதம்பரம், தமிழரசுக் கட்சிக்கு போட்டியாக தமிழ்க் காங்கிரசில் அப்போது இருந்தது ஏன்?

2. தமிழ் ஈழக் கோரிக்கைக்கு ஆதரவாக முன்னர் ஆயிரம் உதாரணங்கள் சொன்ன சிவசிதம்பரம், இப்போது தமிழீழக் கோரிக்கைக்கு எதிரான வாதங்களை மறைமுகமாக அடுக்கிக் கொண்டு யார் சார்பாக ஆஜராகிறார்?

✉ ✓ ✍

## விமானங்கள் வீழ்த்தப்பட்டதா?

**★ சிந்தியா! அந்த நாள் காதலுக்கும், இந்த நாள் காதலுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?**

எஸ். மூர்த்தி, அக்கரைப்பற்று-08.

டியர், டார்லிங் போன்ற ஒப்பற்ற வார்த்தைகள் அந்தநாள் காதலில் கிடையாது.

✉ ✓ ✍



நேற்று இளமை

**★ உலகிலேயே மிகவும் அழகானது எது?**

என். குமாரதாஸ், முனைக்காடு.

தற்காலத்தில் அபூர்வமானது. சிலருக்கு கசப்பானது. சிலருக்கு முள்ளாகக் குத்தக்கூடியது. ஆனால் அழகானது, அதன் பெயர்: உண்மை!

✉ ✓ ✍

**★ விதியை மதியால் வெல்ல முடியுமா சிந்தியா?**

த. பரமேஸ்வரி, ஹட்டன்.

ஒரு மன்னரிடம் அடிமையாக இருந்தவன் தப்பி ஓடிவிட்டான். அவனைத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்தார்கள்.

"இந்த அடிமையை என்ன செய்யலாம்?" என்று அமைச்சரிடம் யோசனை கேட்டார் அரசர்.

அமைச்சருக்கு அடிமைமீது முன் விரோதம் இருந்தது. பழிவாங்க இதுதான் சந்தர்ப்பம் என்று நினைத்தார்.

"மன்னா! ஓடிப்போனது மகா குற்றம். இவனைக் கொன்று விடுங்கள்!" என்றார்.

சின்னக் குற்றத்துக்கு இத்தனை பெரிய தண்டனையா? என்று அதிர்ந்துபோனான் அடிமை. மன்னரிடம் அடிமை கூறினான்:

"மன்னா! நீங்கள் தண்டிக்கும் உரிமை படைத்தவர். ஆனால் சிறு குற்றத்திற்காக மரண தண்டனை விதித்தவர் என்ற பழி உங்களைச் சேரவேண்டாம். உங்களுக்கு பழி விழாதபடி நான் சாக விரும்புகிறேன். அதற்கு சட்டப்படி எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்," என்றான்.

"என்ன சந்தர்ப்பம்?" என்று கேட்டார் அரசர்.

"மன்னா! இந்த அமைச்சரைக் கொல்ல அனுமதி கொடுங்கள். கொலை செய்ததும் நான் பெரிய குற்றவாளியாகிவிடுவேன். அப்போது அமைச்சர் சொன்னபடி தண்டனையைத் தந்துவிடுங்கள்!" என்றான்.

அமைச்சர் மயக்கமாகிவிட்டார். மன்னர் அந்த அடிமையை விடுதலை செய்துவிட்டார்.

✉ ✓ ✍

**★ கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தெரியாதவர்களை என்ன செய்யலாம்?**

ஜி.ரி. அஞ்சலா, கொழும்பு-06.

வள்ளல் சீதக்காதியிடம் பாடம் கேட்கச் சொல்லலாம்.

உடலை வைத்து தொழில் நடத்தும் ஒரு பெண்ணிடம், அவளது தொழிலை நிறுத்தும்படியும், அவளது தேவைக்கேற்ற பணத்தை மாதாமாதம் தருவதாகவும் சொன்னார் சீதக்காதி.

கோயில் மாடத்தில் மாதாமாதம் அவளுக்குத் தேவையான பணம் வைக்கப்படும். அவள் வந்து எடுத்துச் செல்லலாம் என்பதுதான் ஏற்பாடு.

அப்படியே முதல் மாதம் வந்து பணம் எடுத்துச் சென்றவள் பின்னர் வரவில்லை.

ஏழு வருடங்கள் சென்றபின்னர் அந்தப் பெண் சீதக்காதியிடம் வந்தாள்.

"ஐயா என் மகளுக்குக் கல்யாணம். பணம்தந்து உதவுங்கள்!" என்று கேட்டாள்.

ஒரு தொகைப் பணத்தை உதவியாகக் கொடுத்த வள்ளல் சீதக்காதி, "கோயில் மாடத்தில் சென்று பார்" என்றார்.

அங்கே மாடத்தில், ஏழு வருடகாலமாக அவள் வந்து எடுக்கத் தவறிய பணம் அப்படியே சேர்ந்திருந்தது. வாங்க வருபவள் மறந்தாலும் வாக்குக் கொடுத்தவர் மறக்காமல் இருந்திருக்கிறார்.

நம்மில் சிலர் இருக்கிறார்கள்; கடன் வாங்கியதைக்கூட மறந்துவிடுவார்கள்.

✉ ✓ ✍

**★ அன்றைய கமல்- இன்றைய கமல் ஒப்பிடுக?**

எஸ். ஜெகநாத், திருமலை.

முதிர்ச்சி- எல்லாவற்றிலும்!

✉ ✓ ✍

**★ பொங்கல் திரைப்படங்களில் முதலில் பார்க்கக்கூடிய ஒரு படம் சொல்லுங்கள்? (வீடியோவில்)**

திருமதி ரவிவானதி, கொழும்பு-09.

அரசியல்-இசை-பாடல்கள் என்றால்- 'இருவர்.'

காதல்-இசை-பாடல்கள் என்றால்- 'பாரதி கண்ணம்மா.'

சண்டை-காதல்-விறுவிறுப்பு என்றால்- 'தர்மச்சக்கரம்.'

ஏனைய படங்களைப் பார்த்துவிட்டுத் தான் சொல்ல வேண்டும்.

✉ ✓ ✍

**★ சிலரது இதயம் இரும்பாக இருக்கிறதே! என்ன செய்யலாம்?**

எம்.ஏ.ஹுசன், கல்முனை.

இரும்பையும் வளைக்கலாம். தேவை- முயற்சி!

✉ ✓ ✍

**★ அப்பாஸின் வெற்றிக்கு என்ன காரணம்?**

ஆர். ராஜ்குமார், மாத்தளை.

மழமழவென்றிருக்கும் இளமை.

✉ ✓ ✍

**★ மனிதனுக்கு ஆசை மட்டும் இல்லாதிருந்தால்?**

ஜெ.யூட் கிலேரியேன், மட்/ தாண்டவன்வெளி.

நீரும் இல்லை. நானும் இல்லை.

✉ ✓ ✍

**★ எம்.ஜி.ஆரின் வாழ்க்கைச் சரிதம் யாவரும் அறிந்த விஷயம். 'இருவர்' படத்தில் புதுமையாக, புதிதாக என்ன காட்டியுள்ளார் மணிரத்னம்?**

என். பிரேமஹாஸன், நாரம்மல.

பெரிதாகப் புதிதாக ஒன்றும் இல்லை. பெரியாரையும், அண்ணாவையும் ஒரே ஆளாகக் காட்டியிருக்கிறார் (நாசர்). ஏதோ ஜெயலலிதாவின் விழிவீச்சில் எம்.ஜி.ஆர். கட்டுப்பட்டுக் கிடந்ததாக சித்தரிக்கிறார். ஜெயலலிதாவை பல முறை தூக்கி ஓரத்தில் போட்டவர் எம்.ஜி.ஆர். என்பது வரலாறு. எம்.ஜி.ஆரும், கலைஞரும் அரசியலில்தான் விரோதிகள்; மற்றும்படி நல்ல நண்பர்கள் என்று காட்டியிருப்பது சுத்த அபத்தம். எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்தபோதே அவர் செத்துவிட்டதாகப் பிரச்சாரம் செய்த கட்சி தி.மு.க. என்பதுதான் உண்மை. மணிரத்னம் புதிதாகச் சொல்வதைவிட சில விஷயங்களைப் பிழையாகச் சொல்லியிருக்கிறார்.

✉ ✓ ✍

**★ ஜெயலலிதாவின் நிலையில் நீங்கள் இருந்தால் மற்றவர்களுக்குக் கூறும் அறிவுரை என்ன?**

விருதோன-றியாஸ்.

நிலையாததை நிலையானது என்று மலையாக நினைத்துக் கொண்டிருந்தால், நிலையாதது நிலைக்காமல் போகும்போது நிலையாததை நினைத்து மனம் நிலையில்லாமல் தவிக்கும்போது மலைப்பாக இருக்கும்! அதனால் நிலையாததை நிலையாதது என்றெண்ணிக் கொண்டிருந்தால் நிலையாதது நிலைக்காமல் போகும்போது மலைப்பாக இருக்காது!

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 68

## அனுமனை எதிர்த்த அரக்கர் படைகள்

இராமபிரானின் தூதுவன் தான் என்று இராவணனுக்கும் அரக்கர்களுக்கும் அறிவித்தாக வேண்டும்! என்ற வெறியால் உந்தப்பட்ட ஆஞ்சநேயர் அசோகவனத்தை அழித்தொழித்தார். அவ்வனத்திலுள்ள மரம், செடி, கொடி அனைத்தையும் அடியோடு பெயர்த்தெறிந்த பின்னரும் அவருடைய ஆத்திரம் அடங்கவில்லை. அவ்வனத்தின் அருகில் இருந்த மாடமாளிகைகளையும், கூட கோபுரங்களையும் தகர்த்தெறியத் தொடங்கினார். அங்கிருந்த குன்று ஒன்றைத் தகர்த்து வீசி எறிந்தார்.

சீதாப்பிராட்டியார் அமர்ந்திருந்த பகுதி மட்டும் அனுமனுடைய அழிப்புச் செயலில் இருந்து தப்பியிருந்தது. பிராட்டியாரின் பாதுகாவலுக்குப் பொறுப்பாய் இருந்த அரக்கியர் அனைவரும் அப்போதுதான் விழித்தெழுந்தார்கள். அவர்கள் உணர்வு எதுவுமின்றி உறக்கத்தில் இருக்க வேண்டுமென்று ஆஞ்சநேயர்தான் அதுவரை அவர்களை மயக்க நிலையில் ஆழ்த்தியிருந்தார். இப்பொழுது அவர்களை விழித்தெழ வைத்தார். கண்களைக் கசக்கிய வண்ணம், நடந்துமுடிந்த அனர்த்தங்களைக் கூர்ந்து பார்த்தார்கள். குய்யோ முறையோ என்று கூக்குரலிட்டார்கள். அந்தப்புரத்து அரசிளங் குமரிகள் ஆடி ஓடி விளையாடுவதற்கென இராவணனால் திட்டமிடப்பட்டு அமைக்கப் பட்ட அசோகவனம் அடியோடு அழிந்து விட்டதை இராவணன் கண்டால் தங்களின் ஆவிகளைப் பறித்தெடுத்து விடுவானே என்று அரக்கியர்கள் வாய்விட்டு அலறினார்கள்.

கட்டடங்கள் தகர்ந்து விழுந்ததையடுத்து அரக்கர்கள் பலர் இடிபாடுகளுக்கிடையில் சிக்கி மாண்டனர். வேறுபலர் படுகாயமடைந்தனர். அல்லோல கல்லோலப்பட்டு அநேகர் வீதிகளில் அங்கும் இங்கும் ஓடினர். பூகம்பம் ஏற்பட்டிருக்குமோ என்று கருதிய பலர் செய்வது அறியாது தரையில் விழுந்து கூக்குரலிட்டனர்.

### அனுமனின் மகிழ்ச்சி

அசோகவனத்தைச் சுற்றி காவலுக்கு நின்ற அரக்க வீரர்களுக்கு என்னதான் நடக்கிறது என்பதனைக் கண்டறிய முடியாது இருந்தது. கைகால்கள் உடைந்தவர்களும் படுகாயம் அடைந்தவர்களும் ஓலமிட்ட வண்ணம் ஆங்காங்கே கிடந்தனர். அரக்கப் பெண்களும் கூட்டம் கூட்டமாக அவலக் குரல் எழுப்பிய வண்ணம் ஓடித்திரிந்தனர்.

அரக்க இனத்தவர் படும் வேதனைகளைக்கண்டு ஆஞ்சநேயர் பலமாகச் சிரித்தார். நீண்டு கொண்டிருக்கும் பேரழிவு அவருக்குப் பேருவகையைத் தந்தது.

அசோகவனத்திலும் சுற்றுப் புறங்களிலும் இடம்பெற்ற களேபரங்களின் ஓசை வான்முட்ட எழுந்தமையால் தொலைதூரங்களில் நின்றிருந்த காவலர்களின் காதுகளுக்கும் அவ்வோசை எட்டியது. ஓசை வந்த திசையை நோக்கி ஓடிவந்த அவர்கள் பேரழிவுகளைப் பார்த்து ஒரு கணம் திகைத்து நின்றனர். அப்போதுதான் ஆஞ்சநேயரின் சிரிப்பொலி அவர்களுடைய காதுகளில் இடியோசையாகக் கேட்டது; அவர்களால் ஆஞ்சநேயரின் உருவத்தைக் காண முடிந்தது. பெருமரங்கள் நிறைந்திருந்த அந்தப் பிரதேசம் பாலைவனம்போல் காட்சி தந்தது. அங்கே ஒரு தனி மலைபோல் அவர் நின்றிருந்தார். அசோகவனத்தைச் சீரழித்தது இந்த வானரம்தான் என்பது அவர்களுக்கு உடனடியாகப் புரிந்து விட்டது. அக்காவலர்களுள் துணிச்சலான சில வீரர்கள் முன்னேறிச் சென்று அனுமனின் எதிர் நின்றனர்.

"ஏ குரங்கே! இந்த நாசத்தை விளைவித்தவன் நீதானா? நீ யார்? எங்கிருந்து வந்தாய்? எதற்காக இந்த நாசத்தை விளைவித்தாய்?" என்று ஒவ்வொருவராக வினாக்களைத் தொடுத்தனர். இக்கேள்விகளுக்கு பதில் ஏதும் கூறாத அனுமன், அரக்க வீரர்களில் ஒருவனை தன்கைகளை நீட்டி அப்படியே மேலே தூக்கி நிலத்தில் ஓங்கி அடித்தார். அவனுடைய உடல் சிதறிச் சின்னாபின்னமானது. இதனைக் கண்ட ஏனைய வீரர்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்.

சீதாப்பிராட்டியார் கண்களை மூடிய வண்ணம் தியானத்தில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி அரக்கியர் சூழ்ந்தனர். ஒருத்தி பிராட்டியார் மீது பூக்களை எறிந்து அவருடைய தியானத்தைக் கலைத்தாள். மற்றொருத்தி சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

"அதோ அங்கு ஒரு வானரம் நிற்கிறதே! அது உன்னிடம் வந்து ஏதாவது கேட்டதா? அதனை உனக்குத் தெரியுமா? நீ அமர்ந்திருக்கும் இந்த இடத்தைத்தவிர இந்த அழகிய, பிரமாண்டமான அசோகவனத்தை அந்தக் குரங்கு சீரழித்துவிட்டதே! இதற்குக் காரணம் என்ன? இந்தக் குரங்கை யார் ஏவினார்கள் என்பதாவது உனக்குத் தெரியுமா? இதனை அறிந்தால் எமது மாமன்னர் பெருமான் இராவணேசன் பெரும் கோபம் கொள்வார். அதன் விளைவு என்னாகுமோ?" என்று கேட்கப்பட்ட கேள்விகள் எதற்கும் சீதாப்பிராட்டியார் பதில் எதுவும் கூறாமல் மௌனமாகவே இருந்தார்.

### அரசனிடம் முறையீடு

இராவணேசன் அப்போது சபா மண்டபத்தில் அமைச்சர்களுடன் அமர்ந்திருந்தான். அசோகவனக் காவலர்கள் சிலர் ஓடோடிச் சென்று அசோகவனத்தில் நடந்த அனர்த்தங்களை இட்டு அழாக்குறையாகக் கூறினார்கள். "வானரம் ஒன்று அசோகவனத்தை அழித்து விட்டது" என்று அவர்கள் கூறிய கூற்று இராவணனுக்கு ஆத்திரத்தை ஊட்டுவதற்குப் பதிலாக சிரிப்பையே ஏற்படுத்தியது. ஏதோ ஒரு பெரிய நகைச்சுவையைக் கேட்டுச் சிரிப்பது போல் பலமாகச் சிரித்தான். அப்போது மேலும் பல அரக்க வீரர்கள்- உடலில் காயங்களுடன் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களும் அதே முறைப்பாட்டைச் செய்ததும் இராவணனின் சிரிப்பு ஓரளவு அடங்கியது. மூன்றாவதாக சீதாப்பிராட்டியாருக்குக் காவலாக இருந்த அரக்கியர்களும் அங்கு ஓடோடி வந்து முறையிடலாயினர். அதன் பின்னரே ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று இராவணனுக்குப்பட்டது.

இராவணனின் பல வகைப் படைகளுள் கிங்கிரர் என்று ஒரு படைப்பிரிவினரும் இருந்தனர். அப்படைப் பிரிவின் தளபதி அப்போது அந்தச் சபையில் அமர்ந்திருந்தான். அவனைத் தன் அருகே அழைத்து இராவணன், "கிங்கிர தளபதியே! ஒரு சிறுபடையுடன் சென்று அந்த வானரத்தைப் பிடித்திழுத்துவா!" என்று கட்டளையிட்டான். அரசரை இருகை கூப்பி வணங்கிய கிங்கிரர் தளபதி அவ்விடம் விட்டு அகன்றான்.

அசோகவனச் சூழலை சுற்றிச்சுற்றி வந்த ஆஞ்சநேயர், இலங்காபுரியின் சில வீதிகளில் சென்று ஆங்காங்கே இருந்த மாளிகைகளைத் தகர்த்தெறிந்து கொண்டிருந்தார். அச்சமயத்தில் கிங்கிரர்படை அனுமனை எதிர்கொண்டது. அவர்களில் பலர் பெரும் கயிறுகளை சுருக்காகக் கட்டி அனுமன்மீது வீசினர். அக்கயிறுகளை தன் கைகளால் பிடித்திழுத்து பிய்த்தெறிந்தார். பலவித ஆயுதங்களைக் கொண்டு தாக்கிய படை வீரர்களின் அணிகளை தன் கைகளினாலேயே அடித்து வதைத்தார் ஆஞ்சநேயர். ஒரு நாழிகைக்குள்ளாகவே கிங்கிரர் படை சின்னாபின்னமாகச் சிதறியது. தளபதியும் மாண்டு போனான். தப்பிப்பிழைத்த ஓரிருவர் அரண்மனைக்கு ஓடிச்சென்று நடந்தவற்றை இராவணேசனிடம் முறையிடலாயினர்.

சம்புமாலி என்பவன் இராவணனின் படைப்பிரிவில் மற்றுமொரு தளபதி. போராற்றல் மிக்கவன், கிங்கிரர் படை அழிந்ததை அறிந்து வியப்பும் கொதிப்பும் அடைந்த இராவணேசன், சம்புமாலியை அழைத்து, வானரத்தைச் சிறைப்பிடித்து வருமாறு ஏவினான். கிங்கிரர் படையைத் தொடர்ந்து மற்றுமொரு அரக்கர் படை வந்துசேரும் என்று எதிர்பார்த்து நின்ற ஆஞ்சநேயர் சில நாழிகைவரை படைகள் எதுவும்



இராஜகுமாரன்

வராதிருந்தமையால் அசோகவனத்தின் தோரணவாயிலின் மீதேறி இருந்த வண்ணம் காத்திருந்தார். அப்போது சம்புமாலி நால் வகைச் சைனியங்களும் அணிவகுத்துவர இரதத்திலேறி வீர முழக்கமிட்ட வண்ணம் வந்துகொண்டிருந்தான்.

### சம்புமாலியின் வீழ்ச்சி

எதிரே படைதிரண்டு வருவதைக்கண்ட ஆஞ்சநேயருக்குத் தோள்கள் தினவெடுத்தன. இருக்கையை விட்டெழுந்து போருக்குத் தயாரானார். அப்பெரும் படையைக் கண்டதும் ஆஞ்சநேயருக்கு அளவிடமுடியாத ஆனந்தம் ஏற்பட்டது. சம்புமாலியும் உடனடியாகப் போர் தொடுக்கலானான். கணைகளை ஆஞ்சநேயர் மீது அடுக்கடுக்காக வீசினான். வெறும் குச்சிகளை முறித்தெறிவது போல் அம்புகளை முறித்தெறிந்தார். வீரர்களைக் கைகளில் பிடித்து ஒருவரோடு ஒருவரை மோதிச் சாகடித்தார். யானைகள், குதிரைகள் ஆகியவற்றையும் மோதிக் கொன்றார். தேர்களைத் தூக்கி ஒன்றோடு மற்றொன்றை மோதி உடைத்தெறிந்தார். படைகள் முற்றாக அழிந்தன. சம்புமாலி மட்டும் தனித்து நின்றான். அவன் மீது இரக்கப்பட்ட அனுமன், சம்புமாலியை திரும்பிப்போகுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அவன் தன்னுடைய பாணத்தை ஏவி அனுமனிடம் இருந்த இரும்பாலான எழுவை உடைத்தான். இதனால் சினமுற்ற அனுமன், சம்புமாலியைத் தூக்கி அவனுடைய வில்லின் நாணில் அவன் கழுத்தைக்கட்டி கொன்று வீழ்த்தினார்.

சம்புமாலி இறந்த தகவல் இராவணனுக்குப் போய்ச் சேர்ந்ததும், தான் நினைத்தது போல்: அந்த வானரம் சாதாரணமான குரங்காக இருக்க முடியாதெனக் கருதிய இராவணன், தனது மந்திரி பிரதானிகளை அழைத்து மந்திராலோசனை நடத்தினான். சேனைத்தலைவர்கள் ஐவருடனும் கலந்தாலோசித்த பின்னர் அவர்களைப் பெரும் படையுடன் வானரத்தைப் பிடித்துவரச் செல்லுமாறு பணித்தான்.

சேனைத்தலைவர்கள் பெரும்படை திரட்டிக்கொண்டு அனுமன் இருந்த இடத்தை அடைந்தனர். போர் மூண்டது. ஆஞ்சநேயர் தன்னந்தனியனாக நின்று அப்பெரும் படையை நாசம் செய்தார். ஐந்து சேனாதிபதிகளும் மாண்டனர்.

இச் செய்தி இராவணனை எட்டியதும் பெரும் கலக்கமடைந்தான். வேறு எவரையும் அனுப்பிப் பிரயோசனமில்லை என்று கருதிய இராவணன், தானே அனுமனுடன் போர் புரியப்போவதாக அறிவித்தான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 66**
**சரியானவிடை:- வாலி.**

1. ப.நிலானி.
   47,விவேகானந்தா மேடு, கொழும்பு-13.
2. மு.ரோஜாவின்ராணி.
   பாரதி தமிழ் மகாவித்தியாலயம், பதுளை.
3. செல்வன் முஹம்மட் அமால்தீன்.
   111/19, அப்துல் ஹமீத் வீதி, கொழும்பு-12.
4. தெய்வேந்திரன்.
   187,டொக்யாட் வீதி, திருகோணமலை.
5. செல்வன் சி.அமீன்., பாண்டியன் குளம், நாச்சியாதீவு, அனுராதபுரம்..

**போட்டி இல. 68** கேள்வி:- **அனுமனுடன் போரிட்ட முதல் அணியின் பெயரினைத் தருக?**

பெப்ரவரி. 08 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.68, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

# எதிரணியும் தமிழ்க் கட்சிகளும் தித்திக்கும் சந்திப்பு

காதிலை பூ கந்தசாமி

எதிரணித் தலைவர்: தமிழ்க் கட்சிகளே வாருங்கள். உங்கள் குறைகளைக் கூறுங்கள்.

தமிழ்க் கட்சிகள்: எங்கள் சார்பாக வழக்காட மன்னிக்கவும் வாதாட அண்ணன் சபா சிதம்பரத்தை ஆஜராக... சேச்சே ஆர்வமாக அழைக்கிறோம்.

சபா சிதம்பரம்: கனம் நீதிபதி அவர்களே மன்னிக்கவும், கனம் எதிரணித் தலைவர் அவர்களே நாட்டில் இனப்பிரச்சனை இருப்பது நீங்கள் அறிந்ததே!

எ.தலைவர்: யெஸ்.யெஸ். அது எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கிறது.

தமிழ்க்கட்சிகள்: (கோரஸாக) உங்கள் பெருந் தன்மைக்கு நன்றி.

சபா.சி: (தன் அருகில் இருப்பவரிடம்) தம்பி சீலன் நோட் திஸ் பொயிண்ட். இனப்பிரச்சனை இருக்கிறது என்று நான் சொன்னேன். மதிப்புக்குரிய எதிரணித்தலைவர் 'ஆம் இருக்கிறது' என்று அதனை ஆமோதித்தார் என்பதை குறித்துவையும். நியூஸ் பேப்பர்களுக்கு சொல்ல வேணும்.

சீலன்: (இரகசியமான குரலில்) இப்பவே ஓடிப்போய் சொல்லிப்போட்டு வரவா. ஜஸ்ட் ஒ மினிட். ரெலிபோன் வெளியில் இருக்கு. இப்ப சொன்னாத்தான் கொட்டை எழுத்தில் போடுவான்கள்.

சபா.சி: நோ நோ. இப்போது வேண்டாம். மேலும் பொயிண்ட்ஸ் வரும். நீர் நோட் பண்ணும் ஓ.கே.

எ.தலைவர்: என்ன சீக்கிரட் டிஸ்கஸனோ?

சபா.சி: நோ. நாங்கள் அகிம்சைவாதிகள். எதையும் வெளிப்படையாகத்தான் பேசுவோம். (தமிழ்க் கட்சிகள் மத்தியில் இருந்து ஒரு குரல் கேட்கிறது. ஐயா எங்களைக் கிண்டல் செய்கிறீர்கள் போல கிடக்கு)

சீலன்: (நமட்டுச் சிரிப்புடன்) சட்டப்படி நோக்கும்போது அப்படிக் கிண்டல் செய்வதில் தவறு கிடையாது.

சபா.சி: எதிரணித்தலைவர் அவர்களே! உங்கள் ஒத்துழைப்பு கறிக்கு உப்புப்போலவும், குழம்புக்கு தூள் போலவும், ஒரு வழக்குக்கு கண்கண்ட சாட்சிபோலவும் அவசியமாக இருக்கிறது.

எ.தலைவர்: ஒத்துழைப்புத்தானே. நோ ப்ராப்ளம்.

சபா.சி: (மெல்லக் குனிந்து) தம்பி சீலன் நோட் திஸ் பொயிண்ட்.

சீலன்: நீங்கள் ஆவேசமாக வலியுறுத்தியதாகவும், அவர்கள் ஆரவாரமாக வரவேற்றதாகவும் குறித்துவிட்டேன்.

சபா.சி: நீர் ஒரு கில்லாடி ஐசே.

சீலன்: யார் யாருக்கு எப்படி எப்படி யோசனை சொல்ல வேண்டுமோ அதைச்சொல்வதுதானே என் கடமை. என் கரெக்டரே அதுதானே.

சபா.சி: நண்பர் சீலன் ஒரு அருமையான பொயிண்டைச் சொல்கிறார். நீங்கள் சப்போட் பண்ணாவிட்டால் புலிகளை மக்கள் சப்போட் பண்ணிவிடுவார்கள்.

எ.தலைவர்: இப்போது சப்போட் இல்லை என்கிறீர்களா?

சபா.சி: இது கூட்டான சந்திப்பு. தனியாகச் சந்திக்கும்போதுதான் எமது செயற்குழுவின் அபிப்பிராயத்தை தெரிவிப்போம்.

எ.தலைவர்: தீர்வுப் பொதியில் உள்ள லேபிளை மாற்ற வேண்டும் என்பது எமது அபிப்பிராயம்.

சபா.சிதம்பரம்: எந்த லேபிளை?

எ.தலைவர்: அரசின் தயாரிப்பு என்ற லேபிளை கழற்றி வீசிவிட்டு, பொதுவான தயாரிப்பு என்று லேபிள் போடவேண்டும்.

சபா.சி: வெரிகுட். வெரி வெரிகுட். இதனை நாம் அம்மையாரிடம் எடுத்துக்கொண்டுபோய் தெரிவிப்போம்.

எ.தலைவர்: அம்மையார் மறுத்தால்?

சபா.சி: அதைவந்து உங்களிடம் சொல்லுவோம்.

எ.தலைவர்: அதற்கு நாங்கள் என்ன பதில் சொல்லுவோம் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

சபா.சி: என்ன சொன்னால்தான் என்ன, அதைப் போய் அம்மையாரிடம் சொல்லுவோம்.

எ.தலைவர்: நீங்களாக எதுவும் சொல்ல மாட்டீர்களா?

சபா.சி: நாங்கள் பத்திரிகைகளுக்குத்தான் சொல்லுவோம்.

எ.தலைவர்: நாங்கள் குழப்புகிறோம் என்று சொல்வீர்களோ?

சபா.சி: நோ. நோ. நாங்கள் அகிம்சைவாதிகள். பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படுத்துவதே தமது தொழில். இல்லாவிட்டால் மக்கள் நம்மையும் நம்பமாட்டார்கள்.

எ.தலைவர்: தீர்வுப் பொதியை நாம் ஆராய்ந்து முடிக்க வேண்டி இருக்கிறது.

சபா.சி: எப்போது முடிப்பீர்கள்?

எ.தலைவர்: எப்போது முடியுமோ அப்போது?

சபா.சி: பிளீஸ் காலத்தை இழுத்தடித்து விடாதீர்கள்.

எ.தலைவர்: நோ.நோ. நாம் ஏன் காலத்தை இழுத்தடிக்கப் போகிறோம்? காலம் தானாகப் போய்க்கொண்டே இருக்கும். நாமும் காலத்துடன் போய்க்கொண்டே ஆராய்ந்து கொண்டிருப்போம். காலம்தான் நம்மை இழுத்தடிக்கும்.

சபா.சி: காலத்தை இழுத்தடிக்க மாட்டீர்களா?

எ.தலைவர்: அதுதான் தெளிவாகச் சொல்லி விட்டேனே.

சபா.சி: தம்பி சீலன் நோட் திஸ் பொயிண்ட்.

சீலன்: காலத்தை இழுத்தடிக்கக்கூடாது என்றார் சபா. அதனை ஏற்றுக்கொண்டார் எதிரணித் தலைவர். (ஹி.ஹி.ஹி)

சபா.சி: தட்ஸ் ஃபைன்! நெக்ஸ்ட் பொயிண்ட், தீர்வுப் பொதி ஆராய்ச்சியை எப்படி ஆரம்பிப்பது?

எ.தலைவர்: படிப்படியாக ஆரம்பிக்கலாம்.

சபா.சி: படிப்படியாக ஏறி ஓடித்திரிவது எங்கள் கடமையல்லவா?

எ.தலைவர்: நான் சொல்வது ஆராய்ச்சியின் படிகளை. தெரிவுக்குழுவில் தொடர்ந்து குந்தியிருக்க முடிவு செய்வது முதற்படி.

ஆராய நமக்கு எப்போது 'மூட்' வரும் என்பது இரண்டாவது படி.

இணக்கமானவை எவை? இணக்கமில்லாதவை எவை? என்று நமது கட்சியில் முடிவு செய்வது மூன்றாவது படி.

அப்படி முடிவு செய்ததை தமிழ்க் கட்சிகளிடம் கூறுவது நாலாவது படி.

தமிழ்க் கட்சிகளின் அபிப்பிராயத்தை இரண்டு காதுகளாலும் செவிமடுப்பது ஐந்தாவது படி.

செவிமடுத்ததை நம் கட்சி தீர ஆராய்வது ஆறாவது படி.

இணக்கம் காணப்பட்ட விடயங்களை தெரிவுக் குழு முன்பாக தெரிவித்து அங்குள்ள கட்சிகளின் அபிப்பிராயம் கேட்பது ஏழாவது படி.



சபா.சி: (தன் கண்ணாடியை கழற்றி துடைத்துக் கொள்கிறார்) ஓ.கே.. ஓ.கே.. இணக்கம் காணப்படாத விடயங்களை எத்தனையாவது படியில் வைத்து ஆராயப் போகிறீர்கள்?

எ.தலைவர்: நிச்சயமாக காலத்தை இழுத்தடிக்க மாட்டோம். அநேகமாக ஒரு இருபது படிகளுக்குள் அந்தக் கட்டத்தை 'டச்' பண்ணிவிடலாம்.

சபா.சி: தம்பி சீலன் நோட் திஸ் பொயிண்ட்.

சீலன்: படிப்படியாக இணக்கம் காண முடிவு. இனப்பிரச்சனைத் தீர்வில் திருப்பம். தலைவர் சபாவுக்கு படிகளைப் பற்றி படிப்படியாக விளக்கினார் எதிரணித்தலைவர்.

சபா.சி: சபாஷ் சரியான செய்தி! மக்களுக்கு சரியான தீனி. ஐசே சீலன் இப்படியான செய்திகள் கொடுப்பதில் நீர் ஒரு தேனீ.

எ.தலைவர்: புலிகள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சீலன்: (சபாவின் காதுக்குள் குசு குசுக்கிறார்) சாணக்கியத்தை யூஸ் பண்ணுங்கோ. நாங்கள் ஏடாகூடமாக ஏதாவது சொன்னால் இங்கே இருக்கிற மற்றக் கட்சிகள் வெளியே 'லீக்' பண்ணிப்போடும்.

சபா.சி: புலிகளுடன் பேசித்தான் தீர்வு காண முடியும்.

எ.தலைவர்: (முடியைப் பிய்த்துக் கொள்கிறார்) அப்படியானால் நாங்கள் ஏன் உங்களுடன் பேசவேண்டும்? நீங்கள் ஏன் எங்களுடன் பேசுகிறீர்கள்?

சபா.சி: நல்ல கேள்வி! மிஸ்டர் சீலன் நீர் என்ன நினைக்கிறீர்?

சீலன்: சட்டப்படி இதில் ஒரு தவறும் இல்லை.

எ.தலைவர்: மிஸ்டர் சீலன் நினைத்தால் பிரபாகரனின் ஒப்புதல் கிடைத்த மாதிரித்தானே?

சீலன்: நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

எ.தலைவர்: பிரபாகரனின் கையொப்பத்தை நீங்களே போட்டுவிடலாம். நாம் கண்ட தீர்வை அவரே ஏற்றுக்கொண்டதுமாதிரி சொல்லி விடலாம். ஹா ஹா ஹா.

சபா.சி: என்ன மீஸ்டர் சீலன் இதில் ஏதும் சட்டப்பிரச்சனை இல்லையே?

சீலன்: இது சட்டப்பிரச்சனை அல்ல. வாழ்க்கைப் பிரச்சனையாகிவிடுமோ என்றுதான் யோசிக்கிறேன்.

சபா.சி: இத்தோடு இந்தக் கூட்டத்தை முடித்துக் கொள்ளலாம்.

எ.தலைவர்: உங்களுக்கெல்லாம் திருப்திதானே?

சபா.சி: பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்குமளவுக்கு காத்திரமான கருத்துக்களும், கச்சிதமான இணக்கங்களும், நிறையத் திருப்பங்களும், நிறைய ஏற்ற இறக்கங்களும் இன்றைய சந்திப்பில் கிடைத்துள்ளன. தம்பி சீலன் நோட் திஸ் பொயிண்ட். நன்றி வணக்கம்.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/45/NEWS/97)
www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## தங்கம் வென்றவர்



➡ அம்மன் ஜுவலர்ஸ்-முரசு இணைந்து வழங்கிய தங்க மாலைப் பரிசுப்போட்டியில் தங்கம் வென்ற அதிஷ்டசாலி இவர்தான். நூர் நஜ்மா (ஜெயந்தி)- ஊறி குருப், ஒஃபீஸ் பிரிவு, பசறை. அருள்-அம்மன் ஜுவல்ஸ் உரிமையாளர் திரு.எம். கணேசன் தங்கமாலையை வழங்கினார். திரு.கணேசன் அயல்நாடு சென்று திரும்பியதால் பரிசு வழங்குவது தாமதமானது. பரிசு பெற்ற அதிஷ்டசாலிக்கு வாசக நெஞ்சங்கள் சார்பாக வசீகர வாழ்த்துக்கள்.

இனிப்பான செய்தி: தங்கமாலைப் பரிசுப் போட்டி முரசில் மீண்டும் ஆரம்பமாகப்போகிறது.

அருள் + முரசு = பரிசு


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## புதிர் முடிச்சு



➡ அவசரப்பட்டால் என்ன, ஆறுதலாக முயன்றால்தான் என்ன இந்த முடிச்சை அவிழ்க்கவே முடியாது. இது இயற்கை போட்ட முடிச்சு.

பலாங்கொட பகுதியில் இருக்கிறது இந்த முடிச்சு மரம். இயற்கையின் படைப்பில் ஒரு அதிசயம்.

இம் மரம் மிகச் சிறியதாக இருந்தபோது யாரோ ஒரு சிறுவன் விளையாட்டாக முடிச்சு போட்டுவிட்டுப் போனானாம். மரம் பெரிதான பின்னர் அந்த முடிச்சு அதிசய முடிச்சாகிவிட்டதாம். இது ஊரார் சொன்ன கதை அதுதான் உண்மையா என்பது புதிர்தான்.

எந்த மரத்திலும் இல்லாத முடிச்சுடன் காணப்படும் இம் மரத்தை படம் பிடித்து அனுப்பிவைத்தவர் வாசகி திருமதி லீலா யோகரட்ணம். (நாவலப்பிட்டி)



## யார் தருவார்?

⬆ போர்முனைகளில் துப்பாக்கிகளுக்கும், பீரங்கிகளுக்கும் தீனிக்குக் குறைச்சல் கிடையாது. அவைக்குப் பசியெடுக்கும் போதெல்லாம் மனித உயிர்களை சாப்பிட்டு ஏப்பம் விடுகின்றன.


துப்பாக்கிகளின் கீதங்களே இரசனைக்குரியதாக மாறிவிடும் போர்க்களத்தில் மரணஒலங்களையும், பட்டினிக் குரல்களையும் கேட்க யாருக்கு நேரம் இருக்கப்போகிறது.

போர்-அது எங்கே வெடித்துக் கிளம்பினாலும் அதன் விசுவரூபம் ஒரே மாதிரித்தான் இருக்கும்.


ருவாண்டாவின் உள்நாட்டுப் போரில் பசியால் பரிதவித்த சிறுவன் ஒருவனுக்கு பால் கொடுக்கப்படுகிறது. பாய்ந்தோடுகிறது இரத்த ஆறு. பாலுக்கும் உணவுக்கும் எங்கே போவது? இரத்தம் யாருக்கு வேண்டும். அதிகாரப் பசியும், ஒடுக்குமுறை விருப்பும் கொண்டோர் இரத்தத்தில் குளித்துக் கொள்ளட்டும்.

பாருங்கள் அந்தச் சிறுவனை. எத்தனை நாள் பட்டினி அந்தப்பிஞ்சுக்கு! ஒரு நேரம் மட்டும் பால் கொடுத்தாயிற்று. முடிந்ததா நிவாரணம்?

நிரந்தர நிவாரணம் எது? சமாதானம்தான். ஆம், சமாதானம்தான்! யார் தருவார் அதை?



## தரையிலே தலைமுறை



## மண்ணின் மைந்தர்கள்

சொந்த மண்ணில்
அகதிகளாகி வன்னியில்
வாழும் மக்களில் ஒரு பகுதியினர்
இவர்கள். ஒருபானை சோற்றுக்கு ஒரு
சோறு பதம். போரின் கால்களால் இடறப்பட்டு
இடம்பெயர்ந்து வன்னியில் வாழும் தமிழ் மக்களின்
வாழ்க்கையின் ஒரு துளிப் பதிவுதான் இது.

மாட்டு வண்டில்தான் கூரை. வாகனமும் அதுதான். வாழ்விடமும் அதுதான். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த முடி, கற்கால யுகத்துக்குள், சோக இருளுக்குள்!

புனரமைப்பு, புனரமைப்பு? கேட்டு கேட்டுக் காது புளித்தது. கல்விக் கூடமே வன்னியில் தரையிலேதான். நாளைய தலைமுறையை போர் தரையிலே வீசியிருக்கிறது. மேலே வானம், கீழே பூமி. ஆனால் இரண்டுமே சொந்தமில்லை. இழப்பதற்கு இனி எதுவுமில்லை. பெறுவதற்கு நிறைய இருக்கிறது. அதில் ஒன்று சமாதானம்?

வீதியில் கிடப்பதுதான் விதியென்று சொல்லப்படுமானால், இவர்களும் ஒருநாள் விதியை மாற்ற போரே வழியென்று நம்புதல் நடக்கும். அதற்கு முன்னர் மண்ணின் மைந்தர்கள் மனிதர்களாக வாழ வகை செய்யப்படுமா?



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 28, வெல்பரா, நாவலையில் உள்ள சமலை அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்